விலை: 30
பக்கங்கள்: 32

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 269 ஆவணி 06ஆம் நாள் புதன்கிழமை 22 ஒகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# முல்லையில் நில ஆக்கிரமிப்புக்கு மகாவலி அதிகார சபை துணை

## அத்துமீறி குடியமர்ந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதே பெரும்பான்மையினருக்கு காணி உரிமங்களை வழங்கியது

முல்லைத்தீவு, ஓகஸ்ட் 22

கருநாட்டுக்கேணியில் அரச காணிகளை ஆக்கிரமித்த பெரும்பான்மையின மக்களுக்கு எதிராகப் பிரதேச செயலரால் வழக்குத் தொடுக்கப்பட்டு வழக்கு நடைபெறும் நிலையில் ஆக்கிரமித்த அதே காணிகளை அரச தலைவர் மைத்திரி பால சிறிசேனவின் கீழ் இயங்கும் மகாவலி அதிகார சபை பெரும்பான்மையின மக்களுக்கு வழங்கியுள்ளது. இருவருக்கு காணி உரிமம் வழங்கியுள்ள மகாவலி அதிகார சபை, மேலும் 6 பேருக்கு விரைவில் வழங்கவுள்ளது என்று தெரிய வருகின்றது. >> 29

## துறைமுக அபிவிருத்தியை ஆரம்பிக்கின்றார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஓக. 22

மயிலிட்டித் துறைமுகம் 425 மில்லியன் ரூபா செலவில் இரண்டு கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. முதல் கட்ட அபிவிருத்திப் பணிகள் அரச தலைவர் மைத்திரி >> 29

## 4.2 ஏக்கர் காணிகள் வலி. வடக்கில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை மத்தி (ஜே/234) கிராம அலுவலர் பிரிவில் 4.2 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரின் பிடியிலிருந்து 28 ஆண்டுகளின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டன. >> 29



புற்றைக் காடாகியுள்ள மக்கள் காணிகள்



## அன்று இராணுவ ஆக்கிரமிப்பு இன்று தொல்லியல் ஆக்கிரமிப்பு

### வெடுக்குநாறி மலையை விடுவிக்கக் கோரி வவுனியாவில் நேற்றுப் பெரும் போராட்டம்

வவுனியா, ஓக. 22

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வெடுக்குநாறி மலையை தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்க வலியுறுத்தி வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் முன்பாக நேற்றுப் பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. >> 29

## பலாலி வானூர்தித் தளத்தை ஆராய்ந்தது இந்தியக் குழு

கொழும்பு, ஓக. 22

இந்திய வானூர்திகள் தற்போதுள்ள ஓடுபாதை மற்றும் வலையமைப்புக்கு அமைவாக தரையிறங்க முடியுமா என்பது தொடர்பில் இந்திய அதிகாரிகள் மூவர் நேற்று ஆய்வு செய்துள்ளனர். கொழும்பிலிருந்து >> 29

## வடமராட்சி கிழக்கில் கடலட்டை தொழில் செய்வது தடுக்கப்படும்

கடற்றொழில் அமைச்சர் உறுதி என கடற்றொழில் சமாசம் தெரிவிப்பு >> 27

## முல்லைத்தீவு மாணவி கடத்தப்பட்டு வன்கொடுமையின் பின் விடுவிப்பு

### உடந்தையாக இருந்த சந்தேகத்தில் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஓக. 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவி ஒருவர் கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடத்தலுக்கு >> 29

## முதலமைச்சரின் அனுமதியுடன் வடக்கில் திட்டங்கள் நடைமுறை

### அமைச்சரவை முடங்கியதால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாண அமைச்சரவையின் அனுமதியுடன் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள், வடக்கு மாகாண முதலமைச்சரின் அனுமதியுடன் தற்போது முன்நகர்த்தப்படுகின் >> 27

## தரம் 5 பரீட்சை: மொழிபெயர்ப்பு தவறால் அனைவருக்கும் புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஓக. 22

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் ஏற்பட்ட தமிழ் மொழிபெயர்ப்புப் பிழையால் ஒரு வினாவுக்கு அனைத்து மாணவர்களுக்கும் முழுப் புள்ளிகள் வழங்கப்படும் >> 27

## மகிந்தவின் இளைய சகோதரர் திடீர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 22

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் இளைய சகோதரரான சந்திர ருடோர் ராஜபக்ச தங்காலையில் நேற்று உயிரிழந்தார். 70 வயதான சந்திர ராஜபக்ச, மகிந்த ராஜபக்சவுக்கு இளையவரா >> 29

## 35 வயதுக்கு குறைந்தோரும் ஓட்டோ சாரதியாகலாம்

கொழும்பு, ஓக. 22

முச்சக்கரவண்டிச் சாரதிகள் குறைந்தபட்ச வயதெல்லையை 35 ஆக மட்டுப்படுத்த தேவையில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

அரச தலைவர் தலைமையில் நேற்று >> 27

## 4,130 பட்டதாரிகளுக்கு அரச நியமனம்

கொழும்பு, ஓக. 22

4 ஆயிரத்து 130 பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நியமனக் கடிதங்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வால் நேற்று வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அலரி மாளிகையில் நடந்துள்ளது. கூட்டு >> 29

## கர்ப்பிணி பெண் மீது கத்திக் குத்து

யாழ்ப்பாணம், ஓக. 22

கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் நேற்று தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கடன் கொடுக்கல், வாங்கலின்போது ஏற்பட்ட தகராறே கத்திக் குத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

தெல்லிப்பழை, வீமன்காமத்தைச் >> 29






நுண் கடன்களைச் செலுத்த

## மாற்றுவழிகோரிவவுனியாவில் நேற்று பெண்கள் கவனவீர்ப்பு

வவுனியா. ஓக.22
வவுனியாஈஸ்வரிபுரம்கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.நுண்நிதிநிறுவனங்களிடம்பெற்றுக்கொண்டகடன்களை மீளச்செலுத்த முடியவில்லை. எனவே அரசு எமக்கான மாற்று வழிகளை ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஈஸ்வரிபுரம்என்பதுமக்கள் மீள்குடியமர்த்தப்பட்டகிராமமாகும். கல்மடுக்கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்டதே அது. அங்கு வாழும் மக்கள் கூலிவேலைகளுக்குச்செல்பவர்கள். அவர்களும் நுண்நிதி நிறுவனங்களால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். ஈஸ்வரிபுரம் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் அந்த நிறுவனங்களில் கடன்கக்களைப் பெற்றுள்ளனர். தற்போது வறட்சி நீடித்துள்ளதால். தமது வருமானத்தைத் தேடிக் கொள்வதற்கே அந்த மக்கள் கஸ்ரப்படுகின்றனர். இந்த நிலையில் நுண்;நிதி நிறுவனங்களுக்கு வட்டி செலுத்துவதோ. அல்லதுகடன்களை மீளச் செலுத்துவதற்கோ அவர்களால்முடியாது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் ஒன்று கூடி தமது கடன்களைச்செலுத்துவதற்குஅரசு மாற்றுத் திட்டம் ஒன்றை அவசியம் முன்னெடுக்க வேண்டும் என்று கோரினர். அத்துடன் நுண்நிதி நிறுவனங்கள் கடன் வழங்கும் நோக்குடன் கிராமத்துக்குள் வரவே கூடாது என்றும்நேற்றுநடந்தஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தினர். நேற்று முற்பகல் 10 மணியளவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 30க்கும் மேற்பட்ட பெண்கள் அதில்பங்கெடுத்தனர்.

இதேவேளை வவுனியா. சமளங்குளம்பகுதியிலுள்ள கிராமஅபிவிருத்திச்சங்கம். மாதர் அபிவிருத்திச்சங்கம் ஆகியன தமது பகுதிகளுக்குள்நுண்திநிறுவனங்கள் மக்களுக்குக் கடன்களை வழங்கவேண்டாம் என்று தெரிவித்து சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். அத்துடன்வீடுகளில்வைத்து கடன் வழங்கும்செயறபாடுகளை நிறுத்துமாறும் தெரிவித்துள்ளனர்.

(21.110)

# கூட்டமைப்பு ஒரு கூழ்முட்டை; அடைகாப்பது முட்டாள்த்தனம்

### இப்படிச்சொல்கிறார்முன்னாள்அமைச்சர்ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம். ஓக். 22
போர்முடிவுக்குகொண்டுவரப்பட்டபின்னர்தமிழ்த்தேசியவிடுதலைப்போராட்டத்தை ஜனநாயக ரீதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் என்றே தமிழ்மக்கள் நம்பியிருந்தார்கள். இதனாலேயே நாடாளுமன்றத் தேர்தலிலும் மாகாணசபைத் தேர்தலிலும்கூட்டமைப்பைஅமோகமாகவெற்றிபெற வைத்தார்கள். கூட்டமைப்புக் கேட்டுக்கொண்டதன் பேரில் மைத்திரி அரசையும் வெல்லவைத்தார்கள். ஆனால் இன்று மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக. நடைபெற்றது தமிழினப் படுகொலையல்ல என்று சொல்லும் அளவுக்கு அரசின் குரலாகவே பேசத் தொடங்கிவிட்டார்கள். தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் இன்று கூட்டமைப்பு ஒரு கூழ்முட்டை. அதனைத் தொடர்ந்தும் அடைகாப்பது முட்டாள்த்தனமானது என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும்வடக்குமாகாணசபைஉறுப்பினருமான பொ. ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

உதவிகள் வழங்கிவைக்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ளசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:
இலங்கை அரசியலில் இன்று அதிகம் பேசப்படும் தமிழ் அரசியல்வாதியாக வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உள்ளார். வடக்கின்அடுத்தமுதல்வராக விக்னேஸ்வரன் தனிக்கட்சி அமைத்துப்போட்டியிடுவாரா அல்லது புதிய கூட்டணி அமைத்துப்போட்டியிடுவாரா அல்லது கூட்டமைப்பிலேயே தொடர்ந்தும் நீடிப்பாரா என்ற வாதப்பிரதிவாதங்கள்ஊடகங்களில்இடம்பெற்று வருகின்றன. இதன் பிரதிபலிப்பாகவே முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் 'தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப்பலவீனப்படுத்துவதாக நினைத்து தமிழினத்தை அழிக்கவேண்டாம்;' என்று முதலமைச்சருக்குப்பகிரங்கஅறிவுரை வழங்கியுள்ளார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை உருவாக்கியதில் விடுதலைப்புலிகளின் பங்கிருந்தது. கூட்டமைப்பின்மூக்கணாங்கயிறு விடுதலைப்புலிகளிடமேயே இருந்தது. ஆனால். இன்றுஅந்தக்கயிறு இல்லை. இதனால். கூட்டமைப்பின் முதன்மைக்கட்சி. பங்காளிக்கட்சிகளையெல்லாம் புறந்தள்ளித் தன்னை முன்னிறுத்தித் தான் எடுக்கும் எதேச்சாதிகாரமான முடிவுகளையே கூட்டமைப்பின் பெயரால் முன்னெடுக்கின்றது. இதுவேதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பலவீனத்துக்கு முதனமைக் காரணம்.

பொருள்கள் காலாவதியாகுவதைப் போல சில அரசியல் கட்சிகளும் காலகதியில் காலாவதியாகின்றன. தமிழ்த் தேசியவிடுதலைப்போராட்டத்தைஜனநாயக ரீதியில் வீரியமாக முன்னெடுக்கத் தவறுவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்இன்றுகாலாவதியாகும்நிலையில்தான் உள்ளது. எனவே கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் அவசியம் முதலமைச்சருக்கு இல்லை. கட்சிகளின் இருப்பைக் காலமும். காலத்துக்கான அவற்றின்பணிகளும்தான்தீர்மானிக்கின்றன. தமிழர்விடுதலைக்கூட்டணியில் மாற்றங்கள் இடம்பெற்றதால் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவானது. இதனைஅப்போதுதமிழர் விடுதலைக்கூட்டணியைப் பலவீனப்படுத்துவதாக யாரும் ஆட்சேபிக்கவில்லை. காலத்தின் தேவை என்றே வரவேற்றார்கள். அதேபோன்றுதான் போருக்குப்பின்னர்தங்களின்அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு புதிய அரசியல் தலைமைத்துவம் ஒன்றின் தேவையையும் புதிய அரசியல் அணி ஒன்றின் தேவையையும் தமிழ் மக்கள்உணரத்தலைப்பட்டுள்ளார்கள். அதற்கு நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முடிவுகள் ஒரு சாட்சிஎன்று தெரிவித்துள்ளார் என்றுள்ளது.

(21)

கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட

## பல்கலைமாணவர்கள்மீதுகண்ணீர்ப்புகைபிரயோகம்

பல்கலை மாணவர்கள் கொழும்பில் முன்னெடுத்து வரும் போராட்டத்தில் கண்ணீர்ப்புகைமற்றும்நீதாரகைபிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல்கலைகழக மாணவர்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வுவழங்குமாறுகோரி அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. ஆர்ப்பாட்டம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் இடம்பெற்றது. முன்னதாக மக்கள் எதிர்ப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தடுத்து நிறுத்தாத வகையில். ஆர்ப்பாட்டங்கள் அமைதியாகவும் சட்டபூர்வமாகவும் நடத்தப்பட வேண்டும்எனநீதிமன்றம்உத்தரவிட்டிருந்தது. இதனைமாணவர்கள்மீறிய நிலையிலேயே அவர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும்நீதாரகை பிரயோகம்மேற்கொள்ளப்பட்டுள்ளதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(21)

## தனிநாடுகோருவதற்கான அனைத்து உரிமைகளையும்கொண்டவர்கள்நாம்

### சிறிதரன்எம்.பிதெரிவிப்பு

கிளிநொச்சி. ஓக. 22
தனிநாடு கோருவதற்கு முழு உரிமையும் கொண்ட நாம் யதார்த்த நிலமை உணர்ந்து ஒன்றுபட்டநாட்டுக்குள்எமக்குரியஅதிகாரங்களைக் கேட்கின்ற வேளையில் சிங்கள ஆட்சியாளர்கள் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள் என்று தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர். சி. சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி. விசுவமடு பிரமந்தனாறு வட்டாரத்தின் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் மூலக்கிளைத்தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டுஉரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி அமைச்சர் சரத் பொன்சேகாஅண்மையில்பெரும்பாண்மை மக்கள் அதிகாரப்பரவலாக்கத்தை விரும்பவில்லை என்னும் கருத்தை வெளியிட்டிருந்தார். தமிழர்களாகிய நாம் இந்த மண்ணினுடைய பூர்வீகக் குடிகளாக வாழ்ந்து வருகின்றோம். இந்த மண்ணிலே ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பாக நாம் தனியான இராசதானிகளுடன் எம்மை நாமே ஆண்டவர்கள். சுதந்திரத்தின்பின்னர் இந்த நாட்டில் அடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றோம். நாம் அடிமைகளாக நடத்தப்பட்டதை உணர்ந்ததையாலதான எமது தலைவர்வே.பிரபாகரன்ஆயுதம்ஏந்திஎமது இனத்தின் அடிமைத்தளத்தைப் போக்க



விளைந்தார். ஆயுதப் போராட்டத்தை எமது இளைஞர்கள்ஆரம்பிப்பதற்குமுன்பேஎமது மக்கள்தமிழீழம்தான்தமிழர்களின்இறுதித் தீர்வு என 1977ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலின்போது வாக்களித்தார்கள். 2009ஆம் ஆண்டுபோர் நிறைவுற்றதன் பின்னர் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மவர்களிடம் நடத்தப்பட்ட வாக்களிப்பிலும் அவர்கள் தமிழீழத்துக்காக வாக்களித்திருந்தார்கள். தனிநாடு கோருவதற்கு முழு உரிமையும் கொண்ட நாம் யதார்த்தநிலமைஉணர்ந்துஒன்றுபட்ட நாட்டுக்குள் எமக்குரிய அதிகாரங்களைக் கேட்கின்ற வேளையில்சிங்கள ஆட்சியாளர்கள் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். பொன்சேகா. கோத்தபாய ராஜபச போன்றோரினால் வெளியிடப்படும் இனவாதக்கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் [illegible] மக்களிடத்தில்பொதுவாக்கெடுப்பைநடத்திய பின் இவ்வாறானகருத்துக்களை வெளியிடத் தயாரா? - என்றார்.

(21)

### ஓய்வுபெற்றார் ரத்னாயக்க

கொழும்பு. ஓக. 22
தேர்தல்ஆணையகத்தின் தற்போதையபணிப்பாளர் நாயகம் ரத்னாயக்க தனது பணியில் இருந்து நேற்றைய தினம் ஓய்வு பெற்றுள்ளார்.

ரத்னாயக்க ஓய்வு பெற்றுச் செல்வதனால் அது தொடர்பான நிகழ்வுகள் நேற்றைய தினம் தேர்தல் செயலகத்தில்இடம்பெற்றன. அத்துடன் ரத்னாயக்காவின் இடத்துக்குப்புதியபணிப்பாளர் நாயகமாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பெரேரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம் தேர்தல் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளரானமொகமட்டின் பதவிக் காலமும் எதிர் வரும் மார்ச் மாதத்துடன்நிறைவு பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(21.105)

## சுழிபுரம்சிறுமிறெஜினாகொலை; சந்தேகநபர்களுக்கு மறியல்நீடிப்பு

யாழ்ப்பாணம் ஓக 22
சுழிபுரம். காட்டுப்புலத்தைச்சேர்ந்த 6 வயதுச்சிறுமி றெஜினாவின் கொலையுடன் தொடர்பு பட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம். காட்டுப்புலத்தில்படுகொலைசெய்யப்பட்டசிறுமிறெஜினாவின் வழக்கு நேற்று மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. றெஜினா சார்பில் சட்டத்தரணி க. சுகாஸ் மன்றில் முன்னிலையானார். எதிரிகள் தரப்பில். இரண்டாவது எதிரி சார்பில் சட்டத்தரணி சுபாஷ்கரன் முன்னிலையானார். எனினும் நேற்றைய தினம் இந்த வழக்கு தொடர்பாக மேலதிக சாட்சியங்களோ. விளக்கங்களோ பெறப்படவில்லை. வழக்கு விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி சிறுமி றெஜினா கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். சிறுமியின் கழுத்தில் கயிற்றால் இறுக்கப்பட்டதுபோன்றஅடையாளமும்காணப்பட்டது. சிறுமியின் உடற்கூற்றுச் சோதனையில் கயிற்றால் இறுக்கப்பட்டதால் இறப்பு ஏற்பட்டது என்றும். சிறுமி பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டமைக்கானதடயங்கள்உள்ளனஎன்றும்தெரிவிக்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் முதலில் 5 பேரைக் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் தானே கொலை செய்தேன் என்று ஒப்புக்கொண்டுள்ளார்என்றுதெரிவித்தபொலிஸார்ஏனையோரை விடுவித்தனர். அதற்கு மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. மக்கள் பரவலாகப்போராட்டங்களைநடத்தினார்கள். பின்னர் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகிறது. கடந்த தவணையின்போது வழக்கு மேலதிக நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா முன்னிலையில்விளக்கத்துக்காகஎடுக்கப்பட்டது. சிறுமியின் உறவினரான பெண்ணொருவரிடமும். சிறுமியின் நண்பி ஒருவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.


(21.114)

# போரின் விளைவாக– வடக்கு மக்கள் உளநல பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்

## வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

மன்னார்,ஓக 22

நீண்டகாலபோரின் விளைவாகஎமதுபகுதிகளில்உள்ளபொதுமக்களில்பலரும்ஏதோ ஒருவகையில் உளநலப் பாதிப்புக்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்வாறு உளநலப் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்ட மக்களில் பலர் தனிமையைவிரும்பியவர்களாக, சமூகத்திலிருந்து வேறுபட்டு ஒரு ஏகாந்த நிலையில் வாழும் மன உணர்வுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என உள நோயாளர்களை ஆற்றுப்படுத்துகின்ற விழப்புணர்வுக்கான ஆறுநாட்கள்நடைபயண ஆரம்பஉரையில்வடக்கு மாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்



உள நோயாளர்களை ஆற்றுப்படுத்துகின்ற விழப்புணர்வுக்கான ஆறு நாட்கள் நடை பயணம் மன்னாரிலிருந்து நேற்றுப் புறப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் மன்னார் குடும்ப மறுவாழ்வு நிலையம் (எப்.ஆர்.சி) நேற்றுசெவ்வாய்க்கிழமை நல்நிலைக்கான ஆறு நாட்கள் கொண்ட நடைப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த நடை.பயணம் ஆறாவது நாள் ஞாயிற்றுக் கிழமை நண்பகல் வவுனியாபுதியபேரூந்துநிலையத்தைஅடைவதற்கானஏற்பாடுகளைமேற்கொண்டுள்ளனர்.

தற்பொழுது மக்கள் மத்தியில் உடல் நோய்க்கு எங்கு மருத்துவ சேவை பெற வேண்டும் என்ற தெளிவு நிலை இருந்து வருகின்றபோதும் உளநோய்களுக்குஉள்ளாகிஇருக்கும்நோயாளர்களுக்கான சிகிச்சையை எங்கு பெற வேண்டும் என்ற தடுமாற்றத்தை போக்கும்விதத்தில்இவர்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கமாகவே இந்த நடை பயணம் இடம் பெறுகின்றது.

நடை பயணத்தை மேற்கொள்ளும் இந்த ஆறு நாட்களும் கலந்து கொள்வோர்செல்லும்வழிகளிலுள்ளகிராம மக்களுக்குஇதுதொடர்பானவிழிப்புணர்வை ஏற்படுத்திச் செல்லும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களின் நடை பயணமானது நாளொன்றுக்கு 14 கிலோ மீற்றராக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின்ஆரம்பத்தைவடமாகாண சபைமுதலமைச்சர்சீ.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு தொடக்கி வைத்தார். வட மாகாண சபை சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஜீ .குணசீலன். மன்னார்மாவட்ட செயலர்சீ.ஏ.மோகன்ராஸ். மன்னார்நகரபிதா ஞானப்பிரகாசம் அன்ரனி டேவின்சன் ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில்கலந்துகொண்ட முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது :

நீண்டகால போரின் விளைவாக எமது பகுதிகளில் உள்ளபொதுமக்களில் பலரும் ஏதோ ஒருவகையில் உளநலப் பாதிப்புக்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்வாறுஉளநலப்பாதிப்பிற்குஉள்ளாக்கப்பட்ட மக்களில் பலர் தனிமையை விரும்பியவர்களாக. சமூகத்திலிருந்து வேறுபட்டு ஒரு ஏகாந்த நிலையில் வாழும் மன உணர்வுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இந்த மக்களை உளநலப் பாதிப்புக்களிலிருந்து மீட்டெடுத்து சுகதேகிகளாக மாற்ற தமிழ் தெரிந்த உளநல ஆலோசனையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தும் அவைவெற்றி பெறவில்லை.

இந்தக்கடமைகளைப்பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துவதற்கு எம்மிடம் தனியான அலகுகள் ஏதும் அற்ற நிலையில்ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிஅனுசரணையுடன் உருவாக்கப்பட்ட குடும்ப மறு வாழ்வு நிலையம் எமக்குஉதவிபுரியமுன்வந்துள்ளது. அவர்களை உரியமருத்துவ நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்துகின்றார்கள். உடற்பயிற்சி போன்றவற்றால் நோய் தீர்க்கப்பட வேண்டியவர்களை உரியநிலையங்களுக்கு அனுப்பி அவர்களுக்கான மருத்துவ உதவிகளைஅங்குபெறுவதற்குஉதவிபுரிகின்ற சேவைகளை சிறப்பாக அவர்கள் ஆற்றிவருகின்றமை சிறப்புக்குரியது. என முதலமைச்சர் குறிப்பிட்டார். (60)

# பிரதேச சபையின் அங்கீகாரமின்றி நாவற்குளியில் அமைக்கப்பட்ட விகாரை

## செப்ரம்பர் 20 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

சாவகச்சேரிஓக. 22

சாவகச்சேரிப்பிரதேசசபையின் கட்டடஅங்கீகாரமின்றிநாவற்குழியில்அமைக்கப்பட்டவிகாரை தொடர்பான வழக்கு மீண்டும் செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்று முன்தினம் ஒத்தி வைக்கப்பட்டது.

நாவற்குழிப் பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில். தென்னிலங்கை மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்த பின்னர் அங்கு சிறிய பௌத்த மத வழிபாட்டுத் தலம் ஒன்று அமைக்கப்பட்டு பின்னர் ,அதனை விரிவுபடுத்தும்பணிகள்ஆரம்பிக்கப்பட்டது . இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையினால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குவிசாரணைக்குஎடுக்கப்பட்டபோதுசபையின்அங்கீகாரமின்றி கட்டடம் அமைப்பது குற்றமான செயல்என்பதால், உரிய ஆவணங்களை சமர்ப்பித்து சபையின் அங்கீகாரம் பெற்று கட்டட வேலைகளை அமைக்குமாறுவிகாராதிபதிக்குஅறிவுறுத்திய நீதிவான். உரிய ஆவணங்கள்சமர்ப்பிக்கும்பட்சத்தில்தாமதமின்றி அனுமதியை வழங்குமாறு பிரதேச சபை செயலருக்கும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

வழக்கு நேற்று முன்தினம் நடந்த போது உரிய ஆவணங்கள்இதுவரைசமர்ப்பிக்கப்பவில்லையெனபிரதேசசபையினால் நீதிமன்றில்தெரிவிக்கப்பட்டதையடுத்து வழக்கினை வரும் செப்ரம்பர் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு

# போதியளவு ஆவணங்கள் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டது

முல்லைத்தீவுஓக22

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில்நீரியல்வளத்திணைக்களம் தாக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்றையதினம் முல்லைத்தீவுநீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தவழக்கில்போதியளவுஆவணங்கள் முறைப்பட்டாளர்கள் தரபபினால் சமர்ப்பிக்கப்படாதமையால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த2ஆம்திகதி முல்லைத்தீவு மாவட்டகடற்தொழிலாளர்களின் போராட்ட நடவடிக்கையின் போதுகடற்தொழில்நீரியல்வளத்திணைக்களம் தாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அரச சொத்து சேதமாக்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டு முன்வைக்கப்பபட்டு. கடந்த10ஆம்திகதிவடமாகாணசபைஉறுப்பினர்து.ரவிகரன் உள்ளிட்ட 7 பேர் முல்லைத்தீவு பொலிஸாரல் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வழக்கு சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களே பரிமாறப்பட்டன. வழக்கு விசாரணைகள் மாவட்ட நீதிபதியும் நீதிமன்ற நீதிவானுமாகிய லெனின் குமார் தலைமையில் விசாரணைகளுக்கு எடுக்கப்பட்டன.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி த.பரஞ்சோதி சட்டத்தரணி ந.சுதர்சன் ஆகியோர் சமூகமளித்ததுடன் முறைப்பாட்டாளர்கள் சார்பில். சட்டத்தரணிகள் அன்டன் புனிதலிங்கம்.கே. கணேஸ்வரன் ஆகியோர் சமூகமளித்திருந்தனர். போதியளவு ஆவணங்கள் சமர்பிக்கப்படாமையால்வழக்குவிசாரணைகள் எதிர்வரும்ஐப்பசிமாதம்30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு அரசநிறுவனங்களின் சொத்துக்களுக்குசேதம்ஏற்படுத்தியமை மன்னிக்கப்படமுடியாத குற்றம் என எச்சரித்துடன் சேதமாக்கப்பட்டஅரசசொத்துக்களின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக காணப்படும் போது சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படக்கூடும் எனவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

(114,T3)

# "நல்லை குமரன் 26 ஆவது மலர் வெளியீடு


யாழ்ப்பாணம்,ஓக22

யாழ்ப்பாணம் மாநகர சபை. சைவ சமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் நல்லை குமரன் 26 ஆவது மலர் நேற்று வெளியிட்டுவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில், நாவலர்காலாசார மண்டபத்தில்நிகழ்வுகள் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் ,சிறப்பு விருந்தினராகமாகாணகல்விஅமைச்சின்செயலர்எஸ். சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சார்யசுவாமிகள், வீணாகானகுரு பீடமுதல்வர்சிவசிறி சபா. வாசுதேவகுருக்கள், சின்மயா மிசன்வதிவிட ஆச்சாரியார்சிதாகாசானந்தா சுவாமிகள் .செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

ஆய்வுரையினை பலாலி ஆசியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வு நிலை அதிபர் சோ.பத்மநாதன் ஆற்றினார். தெல்லிப்பளை சிறி துர்கா தேவி தேவஸ்தானத்தினர் முதற்பிரதியை பெற்றுக்கொண்டனர்.



சந்நிதியான் ஆச்சிரம சிவத்திரு .செந்தில்வேல் மோகனதாஸ்சுவாமிகளுக்குயாழ்விருதும், பொற்கிளியும்விருந்தினர்களால் வழங்கப்பட்டது.

மாணவர்க்ளுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில்வெற்றிபெற்ற மாணவர்கள்மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில்சமயபெரியார்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் ,அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (7)



# விரலிசை நாத வந்தனம்

யாழ்ப்பாணம், ஒக. 22
'சாகித்திய வீணாலயா' மாணவர்கள் வழங்கும் விரலிசை நாத வந்தனம் 2018 நிகழ்வு நாளை புதன் கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 4 மணிக்கு இடம்பெறும்.
திருமதி விதுஷா கோபிகிருஷ்ணாவின் நெறியாள்கையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்திய கொன்சியூலர் ஜெனரல் பாலச்சந்திரன்,துறை சார் விருந்தினராக முன்னாள் இராமநாதன். நுண்கலை த்துறை மூத்த விரிவுரை யாளர் நந்தினி விஜயரட்ணம், சிறப்பு விருந்தி னராக யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியல் கல்லூரி பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# சிறுவர்களுக்கிடையிலான இரண்டாம் சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக.22
அரச சிறுவர் விழாவையொட்டி சிறுவர்களுக்கிடையிலான மாவட்ட நிலை ஓவியப் போட்டியின் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி மு.ப.8.30 மணிக்கு கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களம், அரச சிற்ப ஓவிய ஆலோசனைசபை ஆகியவை இணைந்து சிறுவர்களுக்கிடையிலான ஓவியப் போட்டிகளை நடத்தி வருகின்றன.
போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நடத்தப்பட்ட முதலாம் சுற்றில் தெரிவானவர்களுக்கு இரண்டாம் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (4.9)

# சந்தையிலுள்ள கால்நடைகளை பிடித்து ஏலமிட குழு பரிந்துரை

## காய்கறிகளை அவை உணவாக்கிவிடுவதால் நகர சபையினர் இந்த முடிவுக்கு வருகின்றனர்

சாவகச்சேரி, ஒக. 22
சாவகச்சேரி பொதுச் சந்தையில் வைக்கப்படும் மரக்கறி வகைகளை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து ஏலத்தில் விற்குமாறு சபையின் சந்தைக் குழுவினர் நகரசபைக்குப் பரிந்துரைத்துள்ளனர்.

சந்தையில் வைக்கப்படும் மரக்கறி வகைகளைக் கட்டாக்காலிக் கால்நடைகள் பகலில் உணவாக்கியும் வேறு வழியிலும் அழித்து விடுகின்றன.
அதனால் தமக்குப் பெருநட்டம் ஏற்படுகிறது. கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துமாறும் சந்தை வியாபாரிகள் நகரசபைக்கு முறையிட்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பாக சந்தைக் குழுவினர் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர். சந்தைக்குச் சென்று பார்வையிட்டனர். வியாபாரிகளுடன் கலந்துரையாடினர். அதன்பின்னர் தமது பரிந்துரையைச் சபையில் சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதனடிப்படையில் சந்தையில் பகல் வேளையில் காணப்படும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து உடனடியாகப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4.9)

# கூரையிலிருந்து வீழ்ந்தவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக. 22
கூரைதிருத்த வேலையில் ஈடுபட்டு கீழே இறங்க முற்பட்ட கூலித் தொழிலாளி கை வழுக்கி நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தார். சம்பவம் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் நேற்றுப் மதியம் 1.30 அளவில் இடம்பெற்றது.
சம்பவத்தில் கொற்றாவத்தை மலையன் தோட்டத்தைச் சேர்ந்த வாய் பேச முடியாத 33வய்துடையவரே காயமடைந்தார்.
கல்லூரியின் மேல்மாடி வகுப்பறை கட்டடத் தொகுதியின் கூரை திருத்த வேலைகள் நடைபெற்றன.
அவசர அம்புலன்ஸ் சேவைக்கு தெரிவிக்கப்பட்டு அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்டார். (4,422)

# பலரையும் கவர்ந்த பூங்காவனம் பக்தர்கள் தொகையும் அதிகரிப்பு



யாழ்ப்பாணம்,ஒக. 22
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூங்காவனத் திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் முருகனின் அலங்காரம் அனைவரையும் கவர்ந்துள்ளது.
ஆலய வீதி உலாவரும்போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்படுகின்றன. நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற 10 ஆம் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவில் முருகப் பெருமான் நாகபாம்பு வாகனத்தில் உலாவந்து காட்சியளித்தார்.
அந்தப் பாம்பு மஞ்சள் நிற பூக்களில் செய்யப்பட்டது. அது உண்மையான பாம்பு ஒன்று சுருண்டு ள்ளதுபோல் காட்சியளித்தது.
வருடாந்தத் திருவிழாவுக்கு மத்தியிலும் குழந்தைகளுக்குச் சோறு தீர்த்துதல், முடி வழித்தல், காதுதோடு குத்துதல் உட்படப் பல்வேறு மங்கள காரியங்களும் இடம்பெற்றன.
தற்போது அங்கு பக்தர்களின் தெகை அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (4.7.173)

# அச்செழு மீனாட்சி அம்மன் கோவிலில் சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 22
அச்செழு மத்தி திருவருள்மிகு நாக தம்பிரான் சிறிமதுரை மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு இன்று தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதிவரை இடம்பெறவுள்ளது.
கோவில் முதன்மை மண்டபத்தில் மாலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை சமயஜோதி க.நிஜலிங்கம் அவர்களின் சொற்பொழிவு ஒழுங்கமைப்பில் இவை இடம்பெறும்.இன்று சைவநெறிச் சன்மார்க்கர் நித்தியபாபுதரன் 'அம்பிகை வழிபாட்டில் மீனாட்சி' என்னும் விடயத்திலும், நாளை சைவசின்மயர் இளம்சைவப்புலவர் ச நவநீதன்.
' பெண் தெய்வவழிபாடு ' என்னும் விடயத்திலும், நளைமறுதினம் வெள்ளிக்கிழமை சைவசின்மயர் சைவப்புலவர் செ.த.குமரன் ' கடைக்கண் அருளும் மீனாட்சி' என்னும் விடயத்திலும் சொற்பொழிவாற்றுவர்.
எதிர்வரும் 25ஆம் திகதி சைவசின்மயர் இளம்சைவப்புலவர் த.மனோஜ்குமார் ' அபிராமி என்னும் அருமருந்து என்னும் விடயத்திலும், 26ஆம் திகதி சைவசின்மயர் இளம்சைவப்புலவர் க.கைலநாதன் ' மீனாட்சி கடாசம்'என்னும் விடயத்திலும், 27ஆம் திகதி சைவசின்மயர் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் ' நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் ' என்னும் விடயத்திலும், 28ஆம் திகதி சைவசின்மயர் இளஞ்சைவப்புலவர் ச.நவநீதன் 'வாழ்வும் வழிபாடும்' என்னும் விடயத்திலும், 29ம் திகதி சைவசின்மயர் மு.நித்தியானத்தா 'அன்பே சிவம் 'என்னும் விடயத்திலும் 30ஆம் திகதி சைவநெறிச் சன்மார்க்கர் நித்தியபாபுதரன் 'அம்பிகையால் ஆள்கொள்ளப்பட்ட அடியார்' என்னும் விடயத்திலும் 31.08.2018 சைவசின்மயர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் ' அம்பிகையின் திருப்பெரும் வடிவம் ' என்னும் விடயத்திலும் சைவப்புலவர் கு.சுமூகலிங்கம் விடயம் 'ஐந்தொழில் தத்துவம் ' என்னும் விடயத்திலும் உரையாற்றுவர். எதிர்வுரும் முதலாம் திகதி சைவசின்மயர் சைவப்புலவர் கந்தசத்தியதாசன் 'பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் ' என்னும் விடயத்திலும் சொற்பொழிவாற்றவுள்ளார் என்று நிஜலிங்கம் அறிவித்துள்ளார். (4)

# நல்லூர் நாவலர் மண்டபத்திலும் பக்தி நிகழ்வுகள் இடம்பெறுகிறன

யாழ்ப்பாணம், ஒக. 22
நல்லூர் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்திலும், "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2018" நிகழ்வுகள் சிறப்புற இடம்பெறுகிறன.
"கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப்பொருளில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இவற்றை நடத்துகின்றன.
அதன்படி இன்று புதன்கிழமை, சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5மணிவரை இசை ஆசிரியை செல்வி. சிவயோகராணி கதிரவேலு பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் அவர்கள் தலைமையில், ஜப்பான் க்க்சுயின் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். கோப்பாய் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தமிழ்ச்சொல்லருவி, இளஞ்சைவப் புலவர் ச.நவநீதனின் "ஆறிரு தடந்தோள் வாழ்க" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், செல்வன் வி. நித்தியரூபசர்மா, செல்வி ந.மதுராங்கினி ஆகியோரின் குழு இசையும் சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன.
திருவிழாக்காலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு. அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும்.

**பரிசில்கள்**

முதல் இருபது நாள்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் ஏனைய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (4)

# நல்லூரில் இன்று

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இன்று வயலின் இசை இடம்பெறும். வயலின் அம்பலவாணர் ஜெயராமன், மிருதங்கம் க.நந்தகுமார், தபேலா சதாவேல் மாறன், முகர்சிங் ஜெ.சாரங்கன், கடம் மு.சுலக்சன். நிகழ்வு மாலை 6.45தொடக்கம் இரவு 8.15வரை இடம்பெறும்.

*** *** ***

நல்லூர் மனோன்மணி அம்மன் கோவிலில் தந்தைக்கு உபதேசம் செய்த தனயன் என்ற தொனிப்பொருளில் சைவசின்மயர் க.கயிலைவாசன் சொற்பொழிவாற்றுவார். இது மாலை 6.45 தொடக்கம் 7.45வரை இடம்பெறும்.

# செல்வச்சந்நிதியில்

பக்திப்பாடல் செல்வச்சந்நிதி அறநெறி ஆசிரியையுடன் மாணவர்கள் இணைந்து, திருமதி அகிதா அஜந்தன் வழங்குவார். சத்சங் "முருபக்தி" யாழ் சின்மயாமிஷன் வதிவிட ஆசாரியார். வண.சிதாகாசானந்தா சரஸ்வதி வழங்குவார்.

*** *** ***

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முறபகல் 10 மணியளவில் இன்று புதன்கிழமை கந்தபுராணக் கவிநயம் என்னும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் சொற்பொழிவாற்றுவார். (173)

# 8 மாதங்களின் பின்னர் திருட்டுப் பேர்வழி கைது

அவருக்கு உதவினரென
மேலும் இருவரும் மாட்டினர்

யாழ்ப்பாணம். ஓக. 22
திருட்டுக் குற்றச்சாட்டில் எட்டு மாதங்களாகத் தேடப்பட்டு வந்தவர் சில நாள்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நாவற்குழியைச் சேர்ந்த அவரை சங்கானையில் வைத்து மானிப்பாய் பொலிஸார் கைது செய்தனர். அவர் மானிப்பாயில்மட்டும்பெரிய5கொள்ளைகளுடன்தொடர்புபட்டுள்ளார். வட்டுகோட்டையில் 2திருட்டுகளுடனும், சாவகச்சேரியில் கொள்ளையில் ஈடுபட்டார் என்று பல குற்றச்செயல்களில் தொடர்புபட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இவர் தலைமறைவாக இருந்த காலத்தில் இவரின் உதவியாளராக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் அவரது இடத்தைச் சேர்ந்த 24, 22 வயதுகளையுடைய மேலும் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து ஒருகிராம், இரண்டுகிராம்நிறையுடைய ஹெரோய்ன்போதைப்பொருள்பொதிகள்மீட்கப்பட்டுள்ளன என்றும்மானிப்பாய்பொலிஸார்தெரிவித்தனர். (4)

# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

யாழ்ப்பாணம். ஓக. 22
வாகனஇலக்கத்தகடுகள்பலகிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களயாழ்ப்பாணமாவட்டப்பணியகப்பிரதிஆணையாளர் வை.பரம்தாபன் கேட்டுள்ளார்.
எமது தலைமைப் பணியகத்திலிருந்து கடந்த 16ஆம் திகதி, எமதுபணியகத்துக்குக்குறித்த இலக்கத்தகடுகள்கிடைக்கப் பெற்றுள்ளன. வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும், மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துப்பிரிவிலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் இவற்றைப் பார்வையிடலாம் என்று அவர் மேலும் கேட்டுள்ளார். (4)

# முஸ்லிம் ஒன்றுகூடலுக்காக போட்டிகள் நடைபெறவுள்ளன

யாழ்ப்பாணம். ஓக. 22
யாழ்ப்பாண முஸ்லிம் ஒன்றுகூடல் நிகழ்வின், மாணவர் போட்டி நிகழ்ச்சிகள் தொடர்பிலான ஏற்பாடுகளைச் செய்யவெனஆசிரியர்களைஉள்ளடக்கியசெயலணியொன்றுசில நாள்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டது. யாழ்ப்பாண ஒஸ்மானியா வளாகத்தில் இது இடம்பெற்றது.
போட்டியில் வெளிமாவட்ட மாணவர்களும் பங்குபற்ற முடியும். எதிர்வரும்24ஆம்திகதிக்குள்தமதுபெயர்களைப்பதிவு செய்யவேண்டும். 077 443 8864 அல்லது 075 943 8864 என்கின்ற அலைபேசி இலக்கங்களூடாகப் பதிவு செய்ய முடியும்.
ஒரு மாணவர் மூன்று போட்டிநிகழ்ச்சிகளில் பங்கேற்க முடியும். மாணவர்கள் தமது வயதெல்லையைத் தேவையேற்படும்போது நிரூபிக்கும் ஏதேனும் ஆவணமொன்றைச் சமர்பிக்க முடியும். யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் சேகு ராஜிஹ், யாழ்ப்பாணம் கதீஜா கல்லூரியின் அதிபர் ஜனாபா ஜான்ஸி கபூர் ஆகியோர் போட்டிநிகழ்ச்சிகளுக்கான செயலணியின் இணைத் தலைவர்களாகச் செயற்படுவர் என்று ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர். (4)

# கிண்ணியா சபையினர் தென்மராட்சிக்கு பயணம்

**கொடிகாமம், ஓக. 22**
**கிண்ணியா பிரதேச தவிசாளர், உறுப்பினர்கள், அதிகாரிகள் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். இந்தக் குழுவினரைச் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர், கைதடி சரஸ்வரதி சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம மக்களும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு வரவேற்றனர்.**



தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்மாதிரியாகத்திகழும்சனசமூகநிலையங்களில் ஒன்றான கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு அவர்கள் சென்றனர். அங்கு கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் உரையாற்றுகையில், வடக்குமாகாணத்தில்உள்ள சனசமூகநிலையங்கள், பொது நூலகங்கள் இங்கு நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளின் பதிவுகளை ஆவணப்படுத்தி வைத்துள்ளமைபாராட்டத்தக்கது. இவ்வாறான ஆவணப்படுத்தல்களைஎமதுபிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள் போன்றவற்றில் செயற்படுத்தவுள்ளோம்.
வடக்கு மாகாணத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப்பௌதீகவளங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. இவ்வாறான வசதிகளோ, பௌதீக வளங்களோ கிண்ணியா பிரதேசத்தில் இல்லை. இதுபோன்றபொதுமண்டபம்இல்லை. என்று கூறினார்.
சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க. வாமதேவன் உரையாற்றுகையில், தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம் ஒவ்வொரு செயற்பாடுகளையும் செயற் திட்ட வடிவில் ஆவணப்படுத்தி தென்மராட்சியில் முன்மாதிரியாகத் திகழ்கின்றது. தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி இப்படியான களப் பயணங்கள் தமிழ் முஸ்லிம் இனங்களிடையே நல்லுறவை வளர்ப்பதற்கு ஒரு அத்திபாரமாகக் காணப்படுகிறது. ஒற்றுமையாகச் செயற்படவேண்டியகாலம்இது. இரு தரப்பினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இங்கிருந்து கிழக்குக்கு நாமும் களப் பயணங்களை மேற்கொள்வோம் - என்று கூறினார். (4,159)

## நல்லூர் வைமன் வீதியில் 4 ஒழுங்கைகள் சீரமைப்பு

யாழ்ப்பாணம். ஓக. 22
நல்லூர்வைமன்வீதியில்உள்ளநான்குஒழுங்கைகள்தார்மூலமாகச்சீரமைக்கப்பட்டுநிறைவு பெற்றுள்ளன. இந்த வீதிகள் கடந்தசிலவருடங்களாகச் சீரமைப்பு இன்றி இருந்தன. தற்போது இந்தவீதிகள்நான்கும்சீரமைத்துநிறைவுபெற்றுள்ளனஎன்றுமாநகரபிரதிமுதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.
அத்துடன் வைமன் வீதியைச் சற்று உயர்த்திச் சீரமைக்கவும்நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. இந்தவீதிச் சீரமைப்புப் பணிகள் அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.
இந்த வீதியில் பழுதடைந்த வீதி விளக்குகள் மாற்றப்பட்டுபுதியமின்சாரவிளக்குகள்பொருத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,17)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம். ஓக. 22
தென்புலோலி ஆண்டியாவளவு ஞான வைரவர் கோவில் வருடாந்த மணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
காலை6மணிக்குச்சிறப்புப் பூசையும் தொடர்ந்து 108 சங்காபிஷேகமும் மாலை6மணிக்குமணவாளக்கோலமும் இடம் பெற்றுசுவாமிவீதிஉலா வருவார். (4,173)

# சிற்றுண்டிச்சாலை இன்றி பலரும் அவதிப்படுகிறனர்

*நிதியும் இடமும் இல்லை என்கிறார் சண்டிலிப்பாய் பிரதேச செயலர்*

யாழ்ப்பாணம்.ஓக.22
வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் சிற்றுண்டிச்சாலைஇல்லாததால்அங்குள்ள பணியாளர்கள் தினமும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.
தூரஇடங்களில்இருந்துதமதுதேவைகளை நிறைவு செய்யவரும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். குறித்தபிரதேசசெயலகத்துக்குவரும் பொதுமக்கள் களைப்பு ஏற்படும் வேளையில், பசிஏற்படும்போதும்சிற்றுண்டிச்சாலை இன்றிச் சிரமப்படுகின்றனர்.
தூர இடங்களிலிருந்து வந்து அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் சிற்றுண்டிச்சாலை இல்லாததால் நெருக் கடிகளை எதிர்கொள்கின்றனர்.
யாழ்ப்பாணக் குடாநாட்டில் சகல பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகத்திலும் சிற்றுண்டிச்சாலை இயங்குகின்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சிற்றுண்டிச்சாலை இல்லாமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். உரிய அதிகாரிகள் இந்தவிடயத்தில்கவனம்எடுத்து விரைவில் சிற்றுண்டிச்சாலை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
"சிற்றுண்டிச்சாலை அமைக்க நிதி கிடைக்கவில்லை. அதைஅமைக்கஇடமும்இல்லை. தற்காலிகமாகச்சிற்றுண்டிச்சாலைஅமைக்கப்பட்டது. அதைத் தனியார் ஒருவர் நடத்தினார். எனினும்துப்புரவின்மைகாரணமாக அது மூடப்பட்டது. சிற்றுண்டிச்சாலை அமைப்பது தொடர்பில் முயற்சி எடுத்து வருகிறோம் - என்று பிரதேச செயலர் உ. யசோதா தெரிவித்தார். (4,169,113)

# சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவாளர் விழா



யாழ்ப்பாணம். ஓக. 22
யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய 96ஆவது பன்னாட்டுக் கூட்டுறவாளர் விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
சமாசத் தலைவர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மைவிருந்தினராகவடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கலந்துகொண்டார்.
மூத்த கூட்டுறவாளரும் சமாசத்தின் முன்னாள்தலைவருமான ச. முருகநேசன் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டார்.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றகூட்டுறவுச்சங்கங்களின்பணியாளர்களின்பிள்ளைகள்பாராட்டிமதிப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.
சிறந்தகூட்டுறவாளர்கள், சிறந்தசங்கங்கள் போன்றவற்றுக்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கூட்டுறவாளர்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில்வெற்றிபெற்றவர்களுக்கும்பரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன. (4,17)

# நகர சபையின் கணக்காளராக கண்ணதாசன்

சாவகச்சேரி. ஓக. 22
சாவகச்சேரி நகரசபையின் கணக்காளராக துணுக்காய் கல்வி வலயத்தில் கடமையாற்றிய இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த ப.கண்ணதாசன் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
இலங்கைகணக்காளர்சேவையைச்சேர்ந்தவர்களுக்கான இடமாற்றப்பட்டியல் அண்மையில்வழங்கப்பட்டது. அதன்படிநகரசபையில்கடமையாற்றியசி.பரதன் தீவக கல்வி வயலத்துக்கும், துணுக்காய் கல்வி வலயத்தில்கடமையாற்றியப. கண்ணதாசன்சாவகச்சேரி நகரசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.
சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றிய சி.பரதன் கடந்தமுதலாம்திகதிதீவககல்விவலயத்துக்குஇடமாற்றம் பெற்றுச் சென்றார். ப.கண்ணதாசன் புதிய கணக்காளராக நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (4.9)

# சாவகச்சேரி – தனன்களப்பு வீதியை ஒருவழியாக்கவும்

சாவகச்சேரிநகரிலிருந்து தனன்களப்பு வீதியில் உள்ள தொடருந்துப் பாதையை ஒரு வழியாகஅறிவிக்குமாறு சாவகச்சேரி நகரசபையின் கூட்டமைப்புஉறுப்பினர் க.தர்சன் நகரசபைத் தவிசாளரைக் கேட்டுள்ளார்.
100 மீற்றர் தூரம் வரையான சாலையின் ஓரங்களில் சந்தைக்குச் செல்வோர், சாலையில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குச் செல்வோரின் வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. அதனால் அதில்போக்குவரத்துநெரிசல்ஏற்படுகிறது. இதனால் தனன்களப்பு வீதிக்குச் செல்லும் வாகனங்கள் மட்டும் செல்வதற்கு இந்தச் சாலையை அனுமதித்து தனன்களப்பு வீதி ஊடாகவரும் வாகனங்களைத் தொடருந்துப் பாதைக்குஅருகில்உள்ள வீதி ஊடாக நகரப் பகுதிக்குச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.
ஏ 32 வீதிக்குப் பயணிப்பதற்காகத் தினமும் பெருமளவு வாகனங்கள் இந்தச் சாலையில் போக்குவரத்துச் செய்கின்றன. சந்தையை அண்மித்த பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்படுவதாகவும் இதனால் ஏற்படும் வாகன நெரிசலால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்குச் செல்லவேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகர சபைத் தவிசாளர் தெரிவித்தார். (4.9)



# மக்கள் நலன் காப்பகத்தின் பணிக்குழுச் சபைத் தெரிவு

கிளிநொச்சி.ஒக. 22

மக்கள் நலன் காப்பகத்தின் பணிக்குழு சபைத்தெரிவு நேற்றுமுன்தினம் மக்கள் நலன் காப்பகத்தின் நடுவப்பணி மனை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

நிர்வாகத் தெரிவின் அடிப்படையில் தலைவராக செப மாலை அடிகளாரும், செயலராக திருமதி.செல்வராணி யும், பொருளாளராக த.பாலசுரேஸ், உப தலைவராக சிறி கிருஸ்ணகாசிக் குருக்கள், உப செயலராக, பன்னீர்செல் வம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்கள் எட்டு மாவட்டங்களுக்கும் பொது வாக 27 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (222)

# மதுபோதையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயம்

முல்லைத்தீவு,ஒக. 22

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட பெரிய சாளம்பன் பகுதியில் நேற்றுமுன்தினம் மூன்று நபர்கள் மதுபோதையில் கைகலப்பில் ஈடுபட்டனர்.

பெரியசாளம்பன் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ச. சாந்தகுமார் கைகளில் வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து ஒட்டுசுட்டான் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (ரி3)



# போதைப் பாவனைக்கு எதிராகக் கலந்துரையாடல்

"எங்களை ஏழையாக்கி, ஆண்களை பாலியல் பலவீன மடையச் செய்யும் சாராயப்பாவனையை இல்லாமல் செய்வோம்" எனும் தொனிப்பொருளில் ஈஸ்வரிபுரம் கிரா மத்தில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான கருத்தமர் வும்,கலந்துரையாடலும் நேற்றுமுன்தினம் மு.ப. 10 மணி தொடக்கம் மதியம் 1.30 மணிவரை இடம்பெற்றது.

நிகழ்வில் வளவாளராகப் பங்கெடுத்த மதுபானம் மற்றும் போதைப்பொருள் நிலைய மாவட்ட இணைப்பாளர் அரு ளானந் கருத்து தெரிவிக்கும் போது:

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் மத்தியில் சாராயப் பாவனை தொடர்பான எண்ணப்பாடு மாறவேண்டும். உண்மையிலே உழைக்கின்ற பணத்தைத் திருடுகின்ற மதுபான நிறுவனங்களின் வியாபார தந்திரங்களுக்கு ஏமா றாத புத்திசாலித்தனமான இளைஞர்கள் உருவாகவேண் டும் எனத்தெரிவித்தார். இந்த நிகழ்வில் சமுர்த்தி உத்தியோ கத்தர் மதுரதீபன் மற்றும் பொதுமக்கள், சமுர்த்திப் பயனாளி கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ಌ0)

# மாற்றுத்திறனாளியின் அழககம் விசமிகளால் சேதம்

வவுனியா மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கம் கண்டனம்

முல்லைத்தீவு, ஒக. 22

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகர்ப்பகுதியின் துணுக்காய் வீதியில் மாற்றுத் திறனாளி நடத்திய சிகை அலங்கார நிலையம் சேத மாக்கப்பட்டமையானது மனிதநேயம் இல்லாத காட்டு மிராண்டிகளின் இரக்கமற்ற செயலாகும் என வவுனியா மாவட்ட அழககக்கூட்டுறவு சங்கம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் வவுனியா மாவட்ட அழ ககக்கூட்டுறவுச்சங்கத்தலைவர் விவே கானந்தன் அருண் மற்றும் செயலர் ஜேசுதாசன் ஜெகராஜா ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

துணுக்காய் வீதியில் மாற்றுத்திறனாளி நடத்தி வந்த சிகை அலங்கார நிலை யத்துக்குள் கடந்த 12 ஆம் திகதி நள்ளிரவு கடையின் பின்பக்கக்கதவை உடைத்து உள்நுழைந்த விசமிகள் கண்ணாடி கள் அனைத்தையும் அடித்து நொறுக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். குறித்த நபர் நீண்ட காலமாக அந்தப் பகுதியில் அழககநிலையத்தை நடத்திவருகிறார். மாற்றுத்திறனாளியான இவர் பல்வேறு இடப் பெயர்வுகளைச் சந்தித்தது மட்டு மல்லாது பலமன உளைச்சல்களுக்கும் ஆளான நிலையில், தமது குடும்ப நிலையைக் கவனத்திற்கொண்டு சிர மங்களுக்கு மத்தியில் தொழில் நிலை யத்தை நடத்தி வருகின்றார்.

தற்போது அவரது அழககம் தாக்கப்பட் டுள்ளமையால் அவர் மேலும் பொருளா தாரரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக் கப்பட்டுள்ளார். மனிதநேயம் இல்லாத காட்டுமிராண்டித்தனமான இந்த ஈனச் செயலை எமது வவுனியா மாவட்ட அழககக் கூட்டுறவுச் சங்கம் வன்மை யாகக் கண்டிக்கிறது.

அத்தோடு இந்த விடயம் சம்பந்தமாக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் நிலைய உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாகப் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப் படுத்தி மாற்றுத்திறனாளியான நிலைய உரிமையாளருக்கு நட்ட ஈடு பெற்றுக் கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது, அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நீதியின் முன் குற்றவாளியை நிறுத்தி தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரி விக்கப்பட்டுள்ளது. (110)



# தாய் ,தந்தையை இழந்த மாணவனுக்கு உதவி

புதுக்குடியிருப்பு ,ஒக. 22

கனடா வன்னிச் சங்கத்தின் 21 வருட தொடர்ச்சி யான செயற்றிட்டங்களில் ஒன்றான பெற்றோர் களில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்து வாழுகின்ற பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் விசுவமடு, தொட்டியடியைச் சேர்ந்த தந்தையை இழந்து தாயும், தங்கையுட னும் வாழ்ந்து வருகின்ற விசுவமடு மகா வித்தி யாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயில்கின்ற செல்வன் மணிமாறன் பிரணவனுக்கு, கனடா வைச் சேர்ந்த செல்வன் பாரதி ஒரு வருடத்துக் கான நிதியாக 25 ஆயிரத்து 300 ரூபாவை மாணவனின் வங்கிக் கணக்கில் வைப்பில் இட்டு வங்கிப் புத்தகத்தை ரெட்பானா இளங்கோபுரத் தைச் சேர்ந்த சமாதான நீதிவான் மாடசாமி மூலம் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வு கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றது . (222)



# நெடுங்கேணி விபத்தில் உயிர் பிழைத்தார் சாரதி



வவுனியா,ஒக. 22

வவுனியா நெடுங்கேணி சன்னாசி பரந்தன் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட விபத்தில் வாகனத்தின் சாரதி எந்தவித காயங்களுமின்றி உயிர் பிழைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கொழும் பில் இருந்து மருத்துவர் ஒருவரை அழைத்து வந்த பிக்கப் ரக சொகுசு வாகனம், முல்லைத்தீவில் குறித்த மருத்துவரை இறக்கிவிட்டதுடன், நேற்றுக் காலை மீண்டும் கொழும்பு நோக்கிச் சென்றது.

செல்லும் வழியில் சன்னாசிப்பரந் தன் பகுதியில் வீதியோரம் இருந்த மதகுடன் மோதி வாகனம் தூக்கி வீசப்பட்டதுடன் அருகில் உள்ள பள் ளத்துக்குள் வீழ்ந்து பலத்த சேத மடைந்தது. எனினும் வாகனத்தை ஓட்டிய சாரதி எந்தவித காயங்களு மின்றி உயிர்பிழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நித்திரைத் தூக்கமே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனப் பொலி ஸார் தெரிவித்ததுடன் விபத்து தொடர் பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (110)

# வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி மூன்றாம் தவணை ஆரம்பம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 2018ஆம் ஆண்டு மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க. சுவர்ணராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 2018 ஆம் ஆண்டு மூன்றாம் தவணைக்காக செப்ரெம்பர் 3 ஆம் திகதி அன்று ஆரம்பமாகவுள்ளதால் முதலாம் வருட ,இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி பிற்பகல் 5மணிக்கு முன்னர் விடுதிகளுக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

# மனைவியின் தாக்குதலில் கணவனின் கைமுறிவு

புதுக்குடியிருப்பு, ஒக.22

புதுக்குடியிருப்பு 1ஆம் வட்டாரம் கைவேலிப்பகுதியில் மனைவியின் தாக்குதலுக்கு உள்ளான கணவன் கை முறிந்த நிலையில் மாஞ்சோலை மாவட்ட மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

20ஆம் திகதி கைவேலிப்பகுதியில் குடும்பத்தில் ஏற்பட்டபிரச்சனை காரணமாக மனைவி கணவன் மீது சரமாரியான தாக்குதலை மேற் கொண்டுள்ளார். இதில் 33 அகவையுடைய இராமலிங்கம் ஜெயச்சந்தி ரன் என்ற குடும்பத்தலைவர் ஒரு கை முறிந்த நிலையில் தலையில் காயங்களுடன் மாஞ்சோலை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ரி3)

# பட்டமளிப்பு நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புக்குத் தொடர்புகொள்ளவும்

வவுனியா, ஒக. 22

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பட்டமளிப்பு நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதை முன்னிட்டு பட்டமளிப்பு நிகழ்வுக்கான ஒழுங்கமைப்பு நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் ஆண்டுகளில் கல்வி கற்று வெளியேறியவர்களைத் தொடர்புகொள்ளுமாறு வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

பட்டமளிப்பு நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புக்காக (2012, 2014) (2013, 2015) (2014, 2016) ஆகிய ஆண்டுகளில் வவுனியா தேசிய கல்வியற்கல்லூரியில் கற்று வெளியேறியவர்கள் தங்களது (முழுப் பெயர் ஆங்கிலத்தில்), தற்போதைய முகவரி, தொலைபேசி இலக்கம், பதிவிலக்கம் போன்ற விபரங்களுடன் சுயமுகவரியிட்ட கடித உறை யுடன் பீடாதிபதி, க. சுவர்ணராஜா, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி என்ற முகவரிக்குத் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட் டுள்ளது.

# கீழியன்குடியிருப்பு உள் வீதி சீரமைப்பு

மன்னார், ஒக. 22

மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட சுமார் நூறு வருடங் களுக்கு மேற்பட்ட கிராமமாகிய கீழியன்குடியிருப்பு கிரா மத்தின் 750 மீற்றர் நீளம் கொண்ட உள் வீதி ஒன்றை, மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து தார் வீதி யாகச் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த வேலைத் திட்டத்தை மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் மற்றும் அந்தப் பகுதி பிரதேச சபை உறுப்பினர் ஜே .ஜோன் நிகாஸ் ஆகியோர் முன்னின்று செயற்படுத்தியிருந்தனர். (60)



## 'உதவும் இதயங்கள் கிராமிய மகளிர் ஒன்றியம்' ஆரம்பம்

முல்லைத்தீவு.ஒக.22

கடந்த 19ஆம் திகதி மாங்குளம்- அம்பகாமம் கிராமத்தில் இரண்டாவதாக 'உதவும் இதயங்கள் கிராமிய மகளிர் ஒன்றியம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு திருமதி க. பிரியா தலைமையில் இடம்பெற்றது. 'உதவும் இதயங்கள்' தாய்நிறுவனத்தின் செயலர் கு. மணிமாறன் மற்றும் அவரது மனைவி திருமதி ம.மதுரிகாவின் பிறந்தநாள் நினைவாக 50ஆயிரம் ரூபா முதல் கட்டமாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 'உதவும் இதயங்கள்' தாய் நிறுவனத்தின் இயக்குநர் ம. சிறிரஞ்சன். செயலர் கு. மணிமாறன். புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தலைவர் எஸ். பிரேமகாந். இலங்கைக்கான செயற்பாட்டாளர் ச. சஜீவன் மற்றும் வள்ளிபுனம் மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் சி.பத்மா.கிளிநொச்சிதிட்டமிடல்பணியக உறுப்பினர் செல்வன் கிசோபன் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர். (222)



## ஆலய சீரமைப்புக்கு உதவி


வவுனியா.ஒக. 22

வடக்குமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் மாகாணத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து, வவுனியா வடக்குகுறிசுட்டகுளம்,அம்பாள்நகர் முத்துமாரியம்மன் கோவில் சீரமைப்புக்காகக் கடந்த வாரம் காசோலை வழங்கிவைக்கப்பட்டது.

மாகாண சபை உறுப்பினரின் சார்பில் வவுனியா வடக்குப் பிரதேச சபைத்தலைவர் ச.துணிகாசலம் காசோலையை ஆலய நிர்வாகத்திடம் வழங்கிவைத்தார். (110)

## மூன்று பிள்ளைகளின் தாயைக் காணவில்லை

*கணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு*



மன்னார்.ஒக.22

முசலிப்பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குப்படையான் சிலாவத்துறைக் கிராமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான தனது மனைவியைக் கடந்த 6ஆம் திகதி முதல் காணவில்லையெனக் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் ஏ.ஞானு சுரங்கனி (வயது33) எனும் மூன்று பிள்ளைகளின் தாயே காணாமல் போயுள்ளதாக 6ஆம் திகதி இரவே சிலாவத்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போய் 15 நாள்கள் கடந்துள்ள நிலையில் இன்றுவரை எந்தத் தகவலும் கிடைக்கப் பெறவில்லை எனக் கூறப்படுகின்றது.

கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் கொக்குப்படையான் கிராமத்தில் உள்ள தனது வீட்டில் இருந்து. முருங்கன் மருத்துவமனைக்குச் சென்ற நிலையில் இவர் வீடு திரும்பவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (56)

# மன்னார் - நானாட்டான் பிரதேசம் நகர வினைத்திறனுடன் அபிவிருத்தி

*கொழும்பு அரசால் 60 மில்லியன் நிதி ஒதுக்கீடு*



**மன்னார் நானாட்டான் பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்தி நகர அபிவிருத்தி மேலாண்மையின் கீழ் கொண்டு வருவதற்கான நிதியை மன்னார் மாவட்ட இணைத்தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் கொழும்பு அரசில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .**

கடந்த ஜீலை மாதம் மன்னார் புதிய பேருந்து நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீரவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாகப் பேசினார்.

மன்னார் மாவட்டத்துக்கு அடுத்தபடியாக அனைத்து விடயங்களிலும் முதன்மையாக நானாட்டான் பிரதேசம் காணப்படுகிறது. நகரமயமாவதற்குத் தகுதிகள் இருந்தும் முறையான அபிவிருத்திகள் நானாட்டானில் மேற்கொள்ளப்படவில்லை.

நானாட்டான் பிரதேசத்தை நகரமயமாக்குவதற்கு சுமார் அறுபது மில்லியன் ரூபா வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் எம்.பி கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளித்த நிதி அமைச்சர் மங்கள சமரவீர . நாடு முழுவதும் உள்ள அனைத் துப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய அரசு உத்தேசித்துள்ளது .

முதற்கட்டமாக சாள்ஸ் நிர்மலநாதன் கேட்டுக்கொண்டதற்கு நானாட்டான் பிரதேச நகர அபிவிருத்தி திட்டத்துக்காக அறுபது மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று தெரிவித்தார்.

நானாட்டான் பிரதே சத்தை நகராக்கும் திட்டத்தின் ஊடாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கவுள்ள இடங்களை வறையறுத்து. அரசிதழ் வெளியிடுவது தொடர்பான கலந்துரையாடல், நானாட்டான் பிரதேச செயலர் மாணிக்கவாசகர் சிறிகந்தகுமாரின் தலைமையில் பிரதேச செயலகத்தின் கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக்கலந்துரையாடலில் நகர அபிவிருத்தித்திட்டமிடல் அனுவலர் மைக்கல் கொலின்ஸ். நானாட்டான் பிரதேசசபை தவிசாளர் தி.பரஞ்சோதி.உபதலைவர் புவனம். மற்றும் நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள். மன்னார் மின்சார சபையின் அத்தியட்சகர் அனுரரத்நாயக்க, சுகாதார மருத்துவ அதிகாரி, நீர்ப்பாசனபொறியியலாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். நானாட்டான் நகர அபிவிருத்தித் திட்டத்தினுள் வங்காலை, முருங்கன் போன்ற கிராமங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அந்தந்த கிராமங்களைச் சார்ந்த பிரதேச சபை உறுப்பினர்களால் கோரிக்கைகள் முன் வைக் கப்பட்டது. அதற்குப்பதிலளித்த பிரதேச செயலர் நானாட்டான் பிரதேச நகர அபிவிருத்திக்குஎனஒதுக்கப்பட்ட நிதியை வேறு எங்கும் அபிவிருத்தி செய்ய அனுமதி இல்லை. நமது பிரதேசத்தின் அனைத்துப்பகுதிகளும்அபிவிருத்திசெய்யப்பட வேண்டிய பிரதேசங்கள் ஆகும். கட்டம் கட்டமாக முருங்கன், வங்காலை பிரதேசங்களும் அபிவிருத்திக்கு உள்வாங்கப்படும்என்றுதெரிவித்தார் நானாட்டான் நகர அபி விருத்திக்கான இடத்தைத் தெரிவுசெய்யும்பொறுப்பைபிரதேசசபையிடம் கையளிப்பதாக கூறி, மிக விரைவாகஇடங்களைத்தேர்வுசெய்துதருமாறு பிரதேச செயலர் மாணிக்கவாசகர் சிறிகந்தகுமார் கேட்டுக்கொண்டார். (213)



## மன்னார் மனித புதைகுழி அகழ்வு பணிகள் 54ஆவது தடவையாகவும் தொடர்கின்றது

மன்னார்.ஒக22

மன்னார் சதொச வளாகத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்காக அகழ்வுகள் மேற்கொண்ட வேளை சந்தேகத்துக்கு இடமான மனித எச்சங்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து. குறித்த வளாகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 54 ஆவது தடவையாகவும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றது .

கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை குறித்த வளாகத்தின் அகழ்வுப்பணிகள் நிறுத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது .

விசேட சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இதுவரை குறித்த வளாகத்தில் 72 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதுடன்; 66 மனித எச்சங்கள் குறித்தவளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு 440 பைகளில் இலக்கம் இடப்பட்டு பொதி செய்யப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்தவளாகத்தில்புதிதாகஅடையாளப்படுத்தப்படும் மனித எச்சங்கள் மற்றும் புதிதாக இனம் காணப்படுகின்ற தடயப் பொருள்கள் சம்மந்தமாக இனி வரும் நாட்களில் தகவல் வழங்க முடியாத நிலை உள்ளதாகவும் இனி வரும் நாட்களில் ஊடகவியளார்கள் மனித புதைகுழிக்கு வருகைதந்து ஒளிப்படம் மற்றும் ஒளிப்பதிவுகளை மோற்கொள்ளலாம் எனவும் . ஆனால் தகவல் வழங்கும் விடயங்கள் பற்றி எதுவும் கூற முடியாத நிலை காணப்படுவதாகவும் சிறப்புச் சட்ட மருத்துவ நிபுணர் தொிவித்துள்ளார்.

## 26 குடும்பங்களுக்கு உதவி



முல்லைத்தீவு.ஒக. 22

வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் 'வளம் பெறுவோம்' செயற்றிட்டத்தின் இருபதாம் கட்டமானது, கடந்த வாரம் அவரது மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் நிதிப்பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் குறித்த செயற்றிட்டத்தின். 20ஆம் கட்டத்தில் தாயகத்தைச் சேர்ந்த 26 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் அறிய வருகையில்.

"குறுங்கால வாழ்வுடமை ஊக்குவிப்பை நோக்காகக்கொண்டு நாளாந்த உணவுத்தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பாக 'வாழ்வோம் வளம்பெறுவோம்' எனும் செயற்றிட்டமானது; வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் அன்பரின் பணப்பங்களிப்பில் நடைபெற்று முடிந்த 20ஆம் கட்டத்துடன் இதுவரையில் 701 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டிருப்பதாகத் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டத்துக்காகப் புலம்பெயர் உறவு ஒருவர் தனது தந்தையின் நினைவாக 3 [illegible] 500 ரூபா பெறுமதியில் இந்த உதவிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த செயற்றிட்டத்தில் 26 குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டு 500 கிலோ அரிசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூங்கிலாறில் விபத்து 4 பேர் படுகாயம்

புதுக்குடியிருப்பு ,ஒக 22

புதுக்குடியிருப்பு பரந்தன் முதன்மை வீதியின் , மூங்கிலாறு பகுதியில் கடந்த 19ஆம் திகதி இரண்டு உந்துருளிகள் மோதிக்கொண்ட விபத்தில் காயமடைந்த நான்கு பேர் மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்கள். இவர்களில் 33 அகவையுடைய செல்வநாயகம் குவேந்திரன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் 20ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள் சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு வீதிப் போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (113)

சட்டங்களின் சிறு பலவீனங்கள் ஊடாக

# சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணை

## கூட்டமைப்பின் சரவணபவன் எம். பி. கடுமையாகச் சாடுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 22

சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் சட்டங்களின் சிறு பலவீனங்களைப் பயன்படுத்தி சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணை போகின்றனர். அதை அனுமதிக்க முடியாது. இத்தகைய நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாக எமது கடல் வளத்தையே அழிவுக்குள்ளாக்குபவை. இதனைச் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களும் அவர்களுக்குப் பின்னின்று செயற்படும் இனவாதச் சிந்தனைப் போக்குள்ள சில அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ளவேண்டும்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார். நாகர்கோவில் தாளையடி மீனவர் பிரச்சினை தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

### நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் விடுவித்தனர்

தாளையடி, நாகர்கோவில் கடற்பகுதியில் அண்மையில் அத்துமீறிக் கடலட்டை பிடித்த வெளிமாவட்ட மீனவர்களைக் கடற்படையினர் கைதுசெய்திருந்தனர். அவர்களின் படகுகள், மீன்பிடி உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால், யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளின் தலையீட்டால் உடனடியாக அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தச்செய்தி அங்கு பாரம்பரியமாகத் தொழில்செய்துவரும் பிரதேச மீனவர்களிடையே பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பதற்றமான சூழ்நிலையையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் பகுதியில் ஏற்கனவே வெளிமாவட்ட மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களால் பாரம்பரிய மீன்பிடியில் ஈடுபடும் பிரதேச மீனவர்களின் தொழிலுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் கடல் வளத்துக்கும் பேரழிவை ஏற்படுத்தினர். இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மீனவர்கள் கோரி தொடர் போராட்டங்களை நடத்தினர்.

### பொய்த்தது வாக்குறுதி

அதன் காரணமாகக் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் அத்துமீறல்களையும், சட்ட விரோத மீன்பிடியையும் தடுத்து நிறுத்துவதாக வாக்குறுதி வழங்கிய தன் பேரில் போராட்டங்கள் கைவிடப்பட்டன.

ஆனால் தற்போது மீண்டும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள நிலையில், கடற்படையினர் அவர்களைக் கைதுசெய்தனர். ஆனால், அவர்களை அதிகாரிகள் விடுவித்துள்ளனர் என்றால், அதிகாரிகள் சட்டவிரோத மீன்பிடிக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனரா என்ற கேள்வி எழுகிறது.

### தடை செய்த பகுதியிலும் கடலட்டை பிடிக்கின்றனர்

கடற்கரையிலிருந்து ஐந்து கிலோமீற்றருக்கு அப்பால் கடலட்டைபிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதுண்டு. அதை ஒரு சாட்டாகக் கொண்டு 5 கிலோமீற்றருக்கு உட்பட்ட பகுதிக்குள்ளும் புகுந்து எமது மீனவர்களுக்குத் தொழிற் பாதிப்பு ஏற்படுத்துவதையும், கடல் வளத்தை அழிப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முல்லை மாவட்டத்தில் சிலநாள்களின் முன்னர் வெளிமாவட்ட மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனர். கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தினர் ஆள்பற்றாக்குறை எனக் காரணங்காட்டி அதைத் தடுத்து நிறுத்தாத நிலையில் உள்ளூர் மீனவர்கள் போராட்டங்களை நடத்தினர்.

அதனையடுத்து அங்குசென்ற கடற்றொழில் அமைச்சர் விஜயமுனி சொய்சாவின் உத்தரவின்பேரில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட 27 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அன்றிரவு உள்ளூர் மீனவர்களின் எட்டுவாடிகளும், பெறுமதிமிக்க மீன்பிடி உபகரணங்களும் எரியூட்டப்பட்டன.

அதன் காரணமாக ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக நாயாற்றில் தங்கியிருந்த வெளிமாவட்ட மீனவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இப்படியான ஒரு சூழ்நிலையிலேயே நாகர்கோவில், தாளையடி பகுதிகளில் அத்துமீறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இரு பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களைப் பார்க்கும்போது, கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் சட்ட விரோதமீன்பிடிக்குத்துணைபோகின்றதா? எனக் கேட்கத் தோன்றுகிறது.

### கடலுணவு சுருங்கும்

மேற்கூறிய நபர்களின் செயற்பாடுகள் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும்போது எமது கடல்களில் கடலுணவைப்பெறும் அளவு சுருங்கிப்போகும் நிலையையும் உருவாக்கும்.

எமதுகடல்வளம் அபகரிக்கப்படுவதையும், அழிக்கப்படுவதையும் நாம் அனுமதிக்கப்போவதில்லை என்பதை எமது மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (4)

## யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய ஓவியம்



சங்குவேலியில் இளைஞன் ஒருவர் பெரியளவில் அதாவது, 50'×40' அளவில் பிள்ளையார் ஓவியம் ஒன்றை வரைந்துள்ளார். சங்குவேலி சிவ ஞானப் பிள்ளையார் கோவிலின் நூற்றாண்டு நினைவாக இந்த ஓவியம் வரையப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்குவேலியைச்சேர்ந்த ஜங்கரன் என்பவரே இந்த ஓவியத்தை வரைந்துள்ளார். முகப்புத்தகங்களிலும் இந்தப் படம் உலா வருகிறது. (4)

## சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறிகளுக்குப் பதியவும்

யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில், நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல் வளமுகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி என். வி. கியூ-05 கற்றலுக்கு இரண்டாம் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஜி. சி. ஈ. உயர் தரத்தில் உயிரியல் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். இந்தக்கற்கைநெறியை முழுமை செய்பவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தேசிய தொழிற்றகமை டிப்ளோமா என். வி. கியூ-05 சான்றிதழ் வழங்கப்படும். கற்கைநெறிகள் யாவும் கட்டணமின்றி இடம்பெறும். கற்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தைப் பிராந்தியப் பணியகத்தில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதன் உதவிப்பணிப்பாளர் எஸ். எஸ். கிருஸ்ணலிங்கம் கோரியுள்ளார். (4)

குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான

# சீருடையில் மாற்றுக்கருத்து இருப்பின் பணியாளர் முறையிடுங்கள்

## மாகாண அமைச்சர் குணசீலன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 22

வடக்கு மாகாணத்தில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கெனப் புதிய சீருடை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதைப்பயன்படுத்துவதில் மாற்றுக்கருத்துகள் இருந்தால் மாவட்டப் பொதுமருத்துவமாதுக்கள் சங்கத்தமது தலைமைச் சங்கத்துக்குத் தெரியப்படுத்துவதே தீர்வுகாணச் சரியானவழி. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி. குணசீலன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடும்பநல உத்தியோகத்தர்களுக்குக் கொழும்பு சுகாதார அமைச்சு அண்மையில் புதிய சீருடையை அறிமுகம் செய்திருந்தது. அது தொடர்பாக அனைத்துக் குடும்பநல அதிகாரிகளுக்கும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டது.

எனினும், வடக்கு மாகாணத்தில் உள்ள குடும்பநல உத்தியோகத்தர்கள் குறித்த சீருடையை அணிவது தொடர்பில் எதிர்க்கருத்துகளை முன்வைத்துள்ளன.

இதுதொடர்பில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.



"அமைச்சு வழங்கும் சுற்றறிக்கைகள், ஒட்டுமொத்த நாட்டுக்குமே பொருத்தமுடையவை. ஆகவே வடக்கு மாகாணத்தில் உள்ள குடும்பநல உத்தியோகத்தர்களும் புதிய சீருடையே அணிய வேண்டும். புதிய சீருடைக்குத் தலைமைச்சங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அவர்கள் தான் இதன் வடிவமைப்பில் ஆதிக்கம் செலுத்தினார்கள்" என்று அவர் தெரிவித்திருந்தார்.

புதிய சீருடை தொடர்பில் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் தரும் மாற்றுக் கருத்துக் கடிதங்களை நாம் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம். வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட பொதுமருத்துவமாதுக்கள் சங்கங்கள் தமது தலைமைச் சங்கத்துடன் இது தொடர்பில் பேச வேண்டும். மாவட்ட மட்டத்தில் குடும்ப நல உத்தியோகத்தர்களின் கருத்துகளைப் பெற்று அது தொடர்பில் தமது தலைமைச் சங்கத்துக்குத் தெரியப்படுத்தினால் சாதகமான முடிவுகள் கிடைக்கும் - என்றார்.

### புதிய சீருடை

இதுவரை காலமும் குடும்பநல உத்தியோகத்தர்கள் தாதியர்கள் அணிவது போன்று வெள்ளை நிற மேற்சட்டை போன்ற சீருடையை அணிந்தனர். கொலர் மற்றும் கை பகுதியில் மண்ணிறமான அடையாள துணி தைக்கப்பட்டிருக்கும்.

தற்போது சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்திய சீருடை வெள்ளை நிற ஜீன்ஸ், மேலே சேட் போன்ற அமைப்பை உடைய பட்டின்கள் மற்றும் பொக்கட்டுக்களை உடைய சீருடை, வெள்ளைநிறசப்பாத்து என்பனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### அமைச்சின் எதிர்பார்ப்பு

வெளிக்கள வேலைகள் செய்யும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஈருருளி மற்றும் உந்துருளிகளில் இலகுவாகப் பயணிக்கும் வகையில் பாதுகாப்பான உடையாக ஜீன்ஸ் உடன் கூடிய இந்தப் புதிய சீருடை சிறப்பானதாக அமையும் என்ற நோக்கத்தில் அமைச்சு இப்படியான உடைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

### வடக்கு மனநிலை

எமது கலாசாரத்துக்கு ஏற்றது ஜீன்ஸ் அல்ல. தாதியர் போன்று முழு வெள்ளை நிறமான சட்டை போன்ற சீருடை பொருத்தமானது. ஜீன்ஸ் அணிவதற்கு எமது மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் பெரியளவில் விரும்புவதில்லை. அணிவது குறைவு. ஆகவே மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் தமது தலைமைச் சங்கத்துடன் கதைத்து நடவடிக்கை எடுப்பது சிறப்பானதாக அமையும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (4.7)

## இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம் ஒக. 22
இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் 25 ஆவதுவருடாந்தப்பொதுக் கூட்டமும் நடப்பு வருட நிர்வாகிகள்தெரிவும்கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளா கப் பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர் : இக்னேசியஸ் கமிலஸ், செயலாளர்:தேசமான்ய மருத்துவர் ஏ. டெக்ஸ்டன் பெர்ணாண்டோ, பொருளாளர்: காமினி ஹேரத், பிரதித்தலைவர் : தேசகீர்த்தி. வீ.எம். சண்முகநாதன், உப தலைவர்கள் : தேசகீர்த்தி திருமதி பீ.டி.கே. போதேயு, முத்தையாஇராமநாதன், ஆலோசகர்கள்: அன்ரன் சீ.பிள்ளே தேசகீர்த்தி டபிள்யூ.டி.எஸ். ஜெயதிலக, உதவிச் செயலாளர்:தேசபந்து, டபிள்யூ. டபிள்யூ.சேனாதிஸ்ஸசந்திரசேகர, கணக்காய்வாளர் :மருத்துவர்ஏ.ஏ.கே.பிரதீப் பெரேரா.

**நிர்வாக உறுப்பினர்கள்**
ஆரியதாஸ தந்திரிக, தேசகீர்த்தி அல்ஹாஜ் எம். கே.எம்.சலீம், சுப்பிரமணியம் ரவிந்திரா, பீதாம்பரம் ஜெயவிந்தன் (யாழ். மாவட்ட இணைப்பாளர்1), எஸ். ஜெயசங்கர் (யாழ். மாவட்ட இணைப்பாளர்2), ரீ.என். சனர ஜீவா (காலி மாவட்ட இணைப்பாளர்), மருத்துவர் அலியார் அப்துல் ஜப்பார் (மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்), எம். தாவுத் அம்ஜத் பர்ஹான், எஸ். ஏ. தளையரத்தினம், செபஸ்ரியன் லோனப்பன், சிற்றம்பலம் சண்முகநாதன்(முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர்). (4,9)

## நிதி அறிக்கை ஒழுங்கமைப்பில் இரு சபைகள் முன்னிலையில்

**யாழ்ப்பாணம், ஒக. 22**
**வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில், கடந்த வருடம் நிதி முகாமைத்துவச்செயற்றிறன் மேம்படுத்தல்களில் இரண்டு சபைகள் முதலிடத்தைப் பெற்றுள்ளன. அவை 89 வீதம் இந்தப் பணிகளைச் செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

சபைக்கான வரவு, செலவு உள்ளிட்ட நிதி விவரங்களைஉரியமுறையில்பதிவுசெய்தல், தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் இந்தத் தெரிவு இடம்பெற்றது. வடக்கு மாகாணத் திறைசேரி இந்த மதிப்பீட்டில் ஈடுபட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி நகரசபைகளில் பருத்தித்துறை நகரசபையும் பிரதேச சபைகளில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் 89 வீதங்களைப் பெற்று ஏனைய சபைகளுடன் ஒப்பிடுகையில் முதலிடத்தில் உள்ளன.

2017 ஆம் ஆண்டில் செயற்பட்ட விதம் தொடர்பாகவே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

நகரசபைகளில் பருத்தித்துறை நகரசபை 89 வீதம், மன்னார் நகரசபை 84 வீதம், வல்வெட்டித்துறை நகரசபை 83 வீதம், சாவகச்சேரி நகரசபை 82 வீதத்தைப் பெற்றுள்ளன.

பிரதேசசபைகளில்வலி.தெற்குபிரதேசசபை 89 வீதம், காரைநகர் பிரதேச சபை 86 வீதம், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை 83வீதம், நல்லூர்ப்பிரதேசசபை82 வீதம், வவுனியா தெற்கு (தமிழ்) மற்றும் வலி.தெற்குமேற்கு ஆகியபிரதேசசபைகள் தலா 82 வீதத்தையும் பெற்றுள்ளன என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (4,9)

## தெல்லிப்பழை மருத்துவமனையில் மனநோயாளி ஒருவரால் பரபரப்பு

தெல்லிப்பளை ஆதார மருத்துவமனையில் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படும் ஒருவர் பெண் நோயாளியுடன்தகாத முறையில் நடக்க முற்பட்டதால் நேற்றுமுன்தினம் இரவு அங்கு பரபரப்பு ஏற்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள்தெரிவித்தன.

திருகோணமலையில் இருந்து மது மற்றும் போதைக்கு அடிமைப்பட்டு மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பளை மருத்துவ மனையில் அண்மையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம்இரவு பெண்கள் மருத்துவ விடுதிக்குள்நுழைந்துபெண்நோயாளியுடன் தவறாக நடக்க முயன்றபோது பணியாளர்கள் அவரை மடக்கிப் பிடித்தனர். அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தெல்லிப்பழைப் பொலிஸாருக்குஅறிவிக்கப்பட்டது. அவர்கள்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

"அவர்மனநலம்பாதிக்கப்பட்டவர் என்றநிலையில்இங்கு சேர்க்கப் பட்டார். படிப்படியானசிச்சைமூலமாகஅவர்களின் நோய் நிலைமை கண்டறியப்படும். மனநலம் பாதிக்கப்பட்டவர் தானாக ஒரு நிலைக்கு வந்தால்மாத்திரமே போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில் இருந்து மீளமுடியும். அதன் பின்னரே மதுவில் இருந்து விடுபடுவதற்கான சிகிச்சை வழங்க முடியும். நேற்று இரவு நடைபெற்ற சம்பவத்தில், அவர் நோயாளி என்ற வகையில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முடியாது. அவருக்குத்தொடர்ச்சியாகசிகிச்சைமேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

தற்போதுஅவரின்உடல்நலம் தேறி வருகின்றது" என்று மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. (4,7,105)

## மதகுருவுடன் தகாத முறையில் உரையாடிய பணியாளர் நீக்கம்

*யாழ்ப்பாண மாநகர சபை முடிவு*

யாழ்ப்பாணம், ஒக. 22
மதகுருவுடன்தகாதமுறையில்உரையாடியகுற்றச்சாட்டில் சபை மேற்பார்வையாளரைத் தற்காலிகமாக உடன் பணிநீக்கம் செய்யுமாறு யாழ்ப்பாண மாநகர சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபையின் கீழ் சிறு வண்டில்களில் குப்பை சேகரிப்போர் ஓர் ஆலயத்தை அண்டிய பகுதியில் கொட்டிவிட்டு அங்கிருந்துவாகனத்துக்கு மாற்றும்செயலை நிறுத்துமாறு கூறிய மதகுருவுடன் குறித்த மேற்பார்வையாளர்தகாதமுறையில்உரையாடினார்என்றுதெரிவிக்கப்பட்டது. தகாதமுறையில்நடந்துகொண்டால்மாநகர முதல்வரிடம்தான் கூறவேண்டிய நிலைமை ஏற்படும் என்று மதகுரு கூறியுள்ளார்.

அதன்போது அவரிடம் கூறினாலும் பயமில்லை. அவர்கள் எம்மைஒன்றும்செய்யமுடியாதுஎன்றுஊழியர்ஏளனமாக பேசியுள்ளார். இதனால் குறித்த மதகுரு ஆதாரங்களுடன் மாநகரசபையில்அதுதொடர்பில்முறையிட்டுள்ளார். இந்தச் செயலுக்கு சபை எடுக்கும் நடவடிக்கை என்ன என்று சபையில் கேட்கப்பட்டது. அதன்போதே குறித்த மேற்பார்வையாளரை உடனடியாகத்தற்காலிகமாகபணியில்இருந்துநீக்கி அடுத்த கட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று ஏகமனதாகச்சபையில்தீர்மானிக்கப்பட்டது. (4,8,105)

## தொண்டைமானாறு மேம்பாலம் பாவனைக்கு இன்று திறக்கப்படும்

அச்சுவேலி, ஒக. 22
தொண்டைமானாறு குடாக்கடல் நீரேரித் தடுப்புஅணைக்கதவுகளுக்குமேல்புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேம்பாலம் இன்று புதன்கிழமை பிற்பகல் 5மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பக்தர்களின்வசதியைக்கருத்தில்கொண்டு இதைத் திறந்து வைப்பதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார். வடக்கு மாகாண விவசாய அமைச்சர் எஸ்.சிவநேசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டுமேம்பாலத்தைஉத்தியோகபூர்வமாக இன்று திறந்துவைக்கவுள்ளார் என்று நீர்பாசனத் திணைக்கள பொறியியலாளர் தெரிவித்தார்.

செல்வச் சந்நிதி ஆலயத்தின் திருவிழா முடியும் வரையும் வலிகாமம் பகுதியில் உள்ள பொதுமக்கள் ஆலயத்துக்கு செல்வதற்கு வசதியாகமேம்பாலம்பொதுமக்களின்பாவனைக்கு அனுமதிக்கப்படும். பின்னர் மேம்பாலம்மூடப்படும். மீண்டும்அடுத்தவருடம் ஆலயத் திருவிழாவின்போது பொதுமக்களின் பாவனைக்குத் திறக்கப்படும் என்று தொண்டமனாறுதடுப்புஅணைக்குபொறுப்பான நீர்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் தெரிவித்தார்.

ஆலயத்திருவிழாக் காலத்தில் தடுப்பு அணைக்குச்சமாந்தரமாகக்குடாக்கடலுக்கு குறுக்கே தற்காலிக வீதி அமைக்கப்படும். ஆனால்வீதிக்குபயன்படுத்திகல், மண்முதலியன அகற்றப்படாமல் இருப்பதால் மழைவெள்ளத்தை வெளியேற்றுவதில் எதிர்பாராத இடையூறுகள் ஏற்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டு தற்காலிக வீதி அமைப்பதுநிறுத்தப்பட்டதோடு40மில்லியன்ரூபா செலவில் தடைக் கதவுகளுக்கு மேலாக மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பயணம் செய்யும்போது, மேற்கொள்ளவேண்டியபாதுகாப்புமற்றும் மின்சாரஇணைப்புவேலைகள்மேற்கொள்ளப்பட்ட பின்னர் மேம்பாலம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு இன்று திறந்து விடப்படுகின்றது.

திருவிழாமுடியும்வரைபொதுமக்கள்பயன்படுத்தலாம். திருவிழாமுடிந்தபின்னர்மேம்பாலம் மூடப்படும். பொதுமக்கள் பயன்படுத்தமுடியாது. வருடாந்தம்செல்வச்சந்நிதி உற்சவத்தின்தேர்-தீர்த்தத்திருவிழாக்களை உள்ளடக்கியகாலங்களில்சிலதினங்களுக்குப்பொதுமக்களின்பயன்பாட்டுக்குப்பாலம் திறந்துவிடப்படும்என்று,அவர்மேலும்தெரிவித்தார். (4,11)

## மலசல கழிவுகளை அகற்ற சபைக்குப் புதிய பவுசர்கள்

*கொள்வனவு செய்ய நடவடிக்கை என்று மாநகர முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக. 22
யாழ்ப்பாணமாநகரசபைஎல்லைக்குள் சபையின் நேரத்தைத் தாண்டியும் இரவில் கழிவகற்றுகின்றனர். சபைக்கு என்று மலசலக் கழிவகற்றும் பவுசர்களைக் கொள்வனவு செய்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது. அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையின் முதல்வர் இ. ஆனோல்ட் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு சபை முதல்வர்இ. ஆனோல்ட் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த அமர்வின், யாழ்ப்பாணமாநகர சபையின் நேரக்கட்டுப்பாட்டை மீறி இரவிலும் கழிவகற்றும் பவுசர்கள் கழிவுகளைஎடுக்கின்றன.

அவற்றைப் பொது இடங்களில் கொட்டிவிட்டுச்செல்கின்றனர் என்று சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு முன்வைத்தனர்.

மாநகர சபையின் எல்லைக்குள் சேவையில் ஈடுபடும், குறித்த பவுசர்கள் மூன்றுதடவை சட்டத்துக்கு முரணாகச் செயற்பட்டுள்ளது.

இது தொடர்பாக முறையிட்டும் இது வரைநடவடிக்கைஇல்லைஎன்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர், யாழ்ப்பாண மாநகருக்குள் சட்டத்துக்கு முரணாக கழிவு அகற்றிய குறித்த பவுசரின் அனுமதி இரத்துச் செய்யப்படுவதாகச் சபையில் அறிவித்தார்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த மாநகரசபை ஆணையாளர்,

"யாழ்ப்பாணம் மாநகர சபையில் கழிவகற்றல் பவுசர்கள் இருந்தன. ஆனால் அவை அனைத்தும் கடந்த காலங்களில் திட்டமிட்ட வகையில் பழுதடையச் செய்யப்பட்டுள்ளன. யார் முன்பு அதனை பராமரிக்கும் பொறுப்பில் இருந்தார்களோ அவர்களே இப்போது தனியாராகச் செயற்படுகின்றனர்" - என்றார். (4,8)

*இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில்*

## பிரதேச செயலருக்கு எதிராக சபை உறுப்பினர் முறைப்பாடு

வவுனியா, ஒக. 22
வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் க. பரந்தாமனுக்கு எதிராக 55 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்களை இலஞ்சஊழல்ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் கையளித்துள்ளதாக வடக்கு மாகாணசபைஉறுப்பினர்ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போருக்குப் பின்னரான காலப் பகுதியில் வவுனியா வடக்குப் பிரதேசசெயலாளர்க. பரந்தாமனைச் சுற்றியிருப்பவர்கள் தவறாகப் பயன்படுத்தியதன் விளைவாக அவரைப் பற்றிய முறைப்பாடுகள் மக்கள் மத்தியில்இருந்து வரத்தொடங்கியது. பிரதேச செயலருக்கு எதிராகப் பொதுமக்கள் 73 குற்றச்சாட்டுக்கள் தந்துள்ளனர்.

அதில்ஆதாரங்களைக்கொண்ட 55குற்றச்சாட்டுகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சமர்ப்பித்திருந்தேன்.

அத்துடன் கணக்காய்வாளர் நாயகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோரிடம்குற்றச்சாட்டுகள் அடங்கிய ஆவணங்களைக் கையளித்துள்ளேன்.

காணிகளைக் கையளிப்பதில் முறைகேடாகநிதிபெற்றுத்தனக்குப் பிடித்தவர்களுக்கு வழங்கியமை, சீனா நிறுவனத்துடன் தொடர்புபட்டுச் சட்டத்துக்குப் புறம்பானகிரவல்அகழ்வு, புளியங்குளம்சந்தியில்இருக்கின்ற கடைகள் ஒப்பந்த அடிப்படையின்றித் தன்னிச்சையாக வழங்கப்பட்டமை, கனகராயன்குளத்தில்உள்ள பெரியகுளம்என்றகிராமத்தில்சமுர்த்திப் பயனாளிகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமம் ஒன்றுக்கு வழங்கப்படவேண்டிய பல மில்லியன் ரூபாபணம்சரியானமுறையில் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட போராளியொருவர் காணியொன்றைக் கோரியபோது அவருக்கு அந்தக் காணியை வழங்காமல் சுவிஸ் நாட்டில்வசிக்கும்பெண் ஒருவருக்குக் காணியும் வழங்கி, வீடும் வழங்கப்பட்டது. தற்போது அரச உத்தியோகத்தராக இருக்கின்ற ஒருவரின் 4 சகோதரர்களுக்குச்செயலாளர் சட்டத்துக்குப்புறம்பாகக்காணிகள்வழங்கியுள்ளார்என்றவை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று லிங்கநாதன் தெரிவித்தார்.

எனினும் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பிரதேச செயலர் மறுத்துவருகிறார். (4,110)

# இராணுவத்தினர் தியாகம் செய்யாவிடில் போரை நிறைவுசெய்திருக்கவே முடியாது

இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க கூறுகிறார்

**கொழும்பு, ஓக. 22**
**இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்திராவிட்டால் 30 வருடங்களாக நாட்டில் இடம்பெற்றபோரை முடிவுக்குக் கொண்டுவந்திருக்க முடியாது என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ்சேனநாயக்க கூறியுள்ளார்.**

அநுராதபுரம், தம்புளுஹல்மில்லேவ இராணுவ முகாமில் அமைக்கப்பட்ட போர்நினைவுதூபிநேற்றுமுன்தினம் மாலைதிறந்துவைக்கப்பட்டது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.
பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும்செயற்பாட்டில்ஆரம்பத்தில்இருந்து இறுதி வரை இராணுவம், பொலிஸ், சிவில்பாதுகாப்புபடைஉறுப்பினர்கள் ஆயிரக்கானவர்கள்தாய்நாட்டிற்காக தமதுபெறுமதியானஉயிரைதியாகம் செய்ததாக கூறினார்.
தாய் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் மனிதவாழ்வின்பாதுகாப்புக்குமாக இராணுவத்தினர் தியாகம் செய்துள்ளனர். இது தன்னலமற்ற செயற்பாடு என்று அவர் தெரிவித்தார்.
உயிரைத் தியாகம் செய்து பெற்றுத் தரப்பட்ட சுதந்திர ரத்தைத் தற்போது அவர்களால் அனுபவிக்கமுடியாதுள்ளது. எனினும் அவர்கள் அர்ப்பணிப்புச் செய்யாவிட்டால் நாம் இன்று அனுபவிக்கும்சுதந்திரம்கிடைக்காது என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்.
இன்றைய அமைதியான சூழலைப் பெற்றுத்தருவதற்காகதுணிச்சலான இராணுவத்தினர் பெறுமதியான தமதுஉயிர்களைத்தியாகம்செய்துள்ளனர் என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல்மகேஷ்சேனநாயக்க கூறியுள்ளார்.

# இலங்கையின் சமுத்திர பாதுகாப்புக்கு ஜப்பான் ஒத்துழைப்பு

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
இரண்டுநாள் உத்தியோபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் இட்சுநோரி ஒனொடேரா மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்குமிடையிலான சந்திப்பு நேற்று அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.
இந்த சந்திப்பின் போது அரச தலைவர் அண்மையில் மேற்கொண்டிருந்த ஜப்பானுக்கான பயணத்தின் போது ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது.
இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான தொடர்புகளை மேலும் விரிவுபடுத்தி இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.
மேலும் சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துதல் தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.
இலங்கையின் கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 1.8 பில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு கரையோர பாதுகாப்பு இயந்திரங்களை அண்மையில் ஜப்பான் அரசு வழங்கியிருந்தது டன், அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு அரச தலைவர் நன்றி தெரிவித்தார்.
ஜப்பான் பாதுகாப்பு அமைச்சரின் பயணத்தின் போது ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு பயணம் செய்யவுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சி தெரிவித்த அரச தலைவர், இருநாடுகளுக்கிடையிலும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களினூடாக எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் விருத்தியடையுமென தான் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார். அத்துடன் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் தலைமை அமைசர் ரணில் விக்கிரசிங்கவையும் அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினர்.



## சிதறிப்போயிருக்கும் சமுதாயத்தை ஒன்றிணைக்கிறது ஹஜ் பெருநாள்

ஹஜ் வாழ்த்துச் செய்தியில் மைத்திபாலசிறிசேனதெரிவிப்பு



கொழும்பு, ஓக 22
பிரிவினைகளினால்சிதறிப்போயிருக்கும் மானிட சமுதாயத்தில் மனிதர்களுக்கிடையே இருக்க வேண்டிய புரிந்துணர்விற்குசிறந்ததோர்முன்னு தாரணமாகவேஹஜ்பெருநாள்அமைகின்றது. என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஹஜ்ஜுப்பெருநாள்வாழ்த்துச்செய்தியில்தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுள்ளதாவது:
உலகெங்கும்வாழும்பலஇலட்சக்கணக்கானஇஸ்லாமிய பக்தர்கள்ஒரேகுறிக்கோளுடன்ஒன்றிணைந்து, ஒரேபுண்ணியதலத்தில்ஒன்றுகூடிமானிடசமுதாயத்தின்ஏகோபித்த எதிர்பார்ப்பான ஒற்றுமையின் பெருமையை உலகறியச் செய்யும்ஹஜ்ஜுப்பெருநாள், சமூகசகவாழ்வின்மகிமையை உலகமக்களுக்குஉத்தியம்பும்ஒருமுதன்மையானசமய நிகழ்வாகும். சமயங்களுடன் பிணைந்து காணப்படும் வழிபாட்டு முறைகளை பாதுகாக்கும் அதேவேளை, மக்களுக்கிடையிலான நல்லுறவை விருத்தி செய்யவும் இந்த சமயநிகழ்வுகள்உதவுகின்றன. என்று ஹஜ்ஜுப்பெருநாள் வாழ்த்துச்செய்தியில்அரசதலைவர் தெரிவித்துள்ளார்.

## மக்கா நகருக்குச் சென்று வழிபடுவதன் மூலம் இறை நம்பிக்கை உறுதிப்படுத்தப்படுகிறது

தலைமை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக22
உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம்கள் தாம்கஷ்டப்பட்டுஉழைத்தபணத்தைச் செலவழித்து மக்காநகருக்குச்சென்று வழிபாடுகளில் ஈடுபடுவதன் மூலம் இறைவன் மீதுள்ளநம்பிக்கை இங்கு மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது ஹஜ் பெருநாள் வாழ்த்துச்செய்தியில்தெரிவித்தார்.
அவர்வெளியிட்டுள்ளஹஜ்பெருநாள்வாழ்த்துச்செய்தியில் மேலும்தெரிவிக்கப்பட்டதாவது, அனைத்துபேதங்களையும் மறந்துஉலகின்நாலாதிசைகளிலிருந்தும் வருகைதரும் முஸ்லிம் பக்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்துமேற்கொள்ளும் இந்தவழிபாட்டின் மூலம் சமத்துவம் மற்றும் சகோதரத்துவம்தொடர்பாகஉலகிற்குவழங்கப்படும்செய்தி மிகவும்முக்கியமானது. என்றுதலைமைஅமைச்சர்தனது வாழ்த்துச்செய்தியில்தெரிவித்தார்.

## சுயநலமிக்க தன்மையை விட்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம்

இரா. சம்பந்தன் தெரிவிப்பு



**சுயநலமிக்க தன்மையில் இருந்து விலகி, எமது எதிர்கால சந்ததியினரது நலன் கருதி சுயமதிப்புடனும், சமாதானமாகவும்வாழ்வதற்குரியநாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையுமாறு, இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்தின மக்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன் என்று எதிர்** கட்சித் தலைவர் இரா. சம்மந்தன் தனது ஹஜ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும்தெரிவிக்கப்பட்டதாவது: தியாகவாழ்க்கையின்முக்கியத்துவம் பற்றியும், அதன் மூலம் மனிதகுலத்துக்குக் கிடைக்கப் பெறுகின்ற நன்மைகள் பற்றியும் புனித ஹஜ் பெருநாள் தினமானது எமக்கு நினைவூட்டுகின்றது என்று அந்த வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சகோதர இனத்தவர்களையும் அரவணைத்துச் செயற்பட வேண்டும்

இப்தார் வாழ்த்துச் செய்தியில் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

கொழும்பு, ஓக 22
சகோதரத்துவ இனங்களோடுமுன்மாதிரியாகநடப்பதுடன் ஈகை, கொடை ஆகிய அறப்பண்புகளோடு அவர்களை அரவணைத்து இஸ்லாம் கூறும் தூய சிந்தனைகள் மூலம் எம்மைபற்றியநல் எண்ணங்களை உருவாக்கப்பட வேண்டும். என்று மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தனது இப்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

## களைகட்டும் ஹஜ் பெருநாள் வியாபாரம்

வவுனியா, ஓக 22
முஸ்லீம் மக்களினால் கொண்டாடப்படும் ஹஜ் பெருநாள் நாளை முன்னிட்டு வவுனியாமாவட்டத்தில்ஹச்சுப்பெருநாள்வியாபாரம்களைகட்டியதை நேற்றுக்காணக் கூடியதாக இருந்தது. குறிப்பாக வவுனியா வாழ் இஸ்லாமிய மக்கள் நகர்ப்புறகடைகளில் ஆடைகள் உள்ளிட்ட பொருள்களை கொள்வனவு செய்துவருகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது. (110)





## பொலிஸார் மூவர் அதிரடிப் படையால் கைது

கொழும்பு, ஓக22
கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ்உத்தியோகத்தவர்கள்இருவரும் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பாணந்துறை வலய குற்றத்தடுப்பு பிரிவைச்சேர்ந்தஇவர்கள்மூவரும் களுத்துறை பாலத்துக்கு அருகில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்டவர்கள் தற்பொழுது கொழும்பிலுள்ள திட்டமிட்ட குற்றச் செயல் தடுப்புப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
வேலியேபயிரைமேயும்நிலைமை உருவாகியுள்ளதாக கூறப்படும் பொதுமக்களின்கருத்துக்களைநிருபிக்கும் ஆதாரமாக இந்த சம்பவம் அமைந்துள்ளது. பாணந்துறை வலய குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் காண்ஸ்டபிள்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

## விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் நியமனம் விரைவில் வழங்கப்படும்

### நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவிப்பு



கொழும்பு,ஒக. 22
விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் நியமனம் மிக விரைவில் வழங்கப்படும் என்று கல்வியமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார்.
கல்வி அமைச்சில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ள மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தலைமை அமைச்சரின் வழிகாட்டலில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தால் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் நியமனம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நேர்முகத்தேர்வு, உடற் தகைமை தேர்வு அடிப்படையில் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் எமது அமைச்சால் வெளியிடப்பட்டிருந்தது.
இருந்தபோதும் சில மாகாணங்களின் அசமந்தப் போக்கால் மாகாண சபை பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ள பயிற்றுவிப்பாளர்களின் பாடசாலை விவரம் இதுரை எமக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனவே இந்த இழுபறியால் எதிர்வரும் நாள்களில் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்து அமைச்சரவையின் மேலதிக அங்கீகாரத்துடன் நியமனம் வழங்கப்படும்.
இது கூட்டரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு நியமனம். எனவே எவ்வாறான தடைகள் வந்தாலும் தலைமை அமைச்சர், கல்வி அமைச்சரின் உதவியுடன் இந்த நியமனத்தை நாம் வழங்கியே தீருவோம் - என்றார்.



இலங்கை பத்திரிகையாளர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை நிறுவனம் என்பன இணைந்து வருடாந்த ஊடகவிருது வழங்கும் நிகழ்வை அண்மையில் நடத்தியது. இதில் மூத்த ஊடகவியலாளர். ஏ.எல்.எம். சலீமுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி மதிப்பட்டது.
கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வின்போது ஆணையாளர் எம்.சி.அன்சாரின் பங்கேற்புடன் அவருக்கு பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டது 'ஊடகமுதுசம்' எனும் பட்டம் வழங்கப்பட்டது.

# கோத்தாவின் வருகைக்கு மகிந்தவும் பயப்படுகின்றார்

### நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன தெரிவிப்பு

**முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச 3 ஆவது தடவையாகவும் அரச தலைவராக முற்படுவதால் அவரின் தரத்தைத் தாழ்த்திக் கொள்கிறார் என்று தெரிவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன, கோத்தாவின் வருகைக்கு மகிந்தவும் அஞ்சுகிறார் –என்றார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"இந்நாட்டு மக்கள் மாத்திரமின்றி முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்க அச்சப்படுகிறார்.
காரணம், கோத்தாவின் வருகை தனது புதல்வர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குரியாக்கிவிடும் என்பதை அவர் அறிந்துள்ளார்.
அதனாலேயே, 3ஆவது தடவையாகவும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்குவது குறித்துக் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. அதனால் முன்னாள் அரச தலைவருக்கு வழங்கப்படும் சிறிதளவு மதிப்பையும் அவரே தாழ்த்திக்கொள்ள முற்படுகிறார்" - என்றார்.

## சட்ட மா அதிபரிடம் கைதிகளின் விவரங்கள் ஒப்படைப்பு

வழக்கு விசாரணைகள் தாமதமடைவதாகத் தெரிவித்து,போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளின் விவரங்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளதாகச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல் தெனிய குறிப்பிட்டுள்ளார்.
தமது வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி, விளக்கமறியலிலுள்ள பெண் கைதிகள் சிலர் அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையின் கட்டட கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
நேற்றுமுன்தினம், போதைப்பொருள் கடத்தலுடன்தொடர்புடையகைதி ஒருவரை வேறொரு சிறைச்சாலைக்கு மாற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பெண் கைதிகள் சிலர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கை கடற்படையினரிடமே

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கை கடற்படையினரிடமே உள்ளது. அது சீனர்களின் கையில் இல்லை என்று அங்கு பணியாற்றும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் செயற்பாடுகள் குறித்து பார்வையிட நேற்றுமுன்தினம் தொடக்கம் முறையாக அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் குழுவிடமே, துறை முகத்தை இயக்கும் சீன நிறுவனத்தில் பணியாற்றும் உள்ளூர் அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில், இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து பணியாற்றுவது குறித்து சீனர்கள் பிரச்சினை எழுப்பவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# அரச தலைவராவதற்குக் கனவுகாண்கிறார் மகிந்த

### வயதுக் கோளாறே காரணம் என்கிறார் மங்கள

கொழும்பு, ஒக. 22
அரசமைப்பின் பிரகாரம் மீண்டும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட மகிந்த ராஜபக்சவால் முடியாது. தோல்வி அடைந்த பின்னர் வீடு செல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினராக முன்வந்தார்.
அதன்பின்னர் தலைமை அமைச்சராக முயற்சித்தார். அது முடியாது போனமையால் எதிர்க்கட்சிதலைவராக முற்பட்டார். தற்போது மீண்டும் அரச தலைவராவதற்குக் கனவு காண்கின்றார்.
இவ்வாறான செயல்களுக்கு வயதுக் கோளாறு காரணமாகும்.70 வயதைத் தாண்டினால் அதுதான் நடக்கும். எனினும் இது தொடர்பில் உயர்நீதிமன்றம் சென்று விளக்கம் கோர முடியும் என நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
கொழும்பில் அமைந்துள்ள நிதி மற்றும் ஊடக அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.
மாநாட்டில் ஊடகவியலார்களின் கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கும்போது.
**கேள்வி:** ஜனநாயகம் கூட்டரசின் தூண் என்றால் இன்னும் தேர்தல் வைக்கப்படாமல் உள்ளதே? முன்னைய ஆட்சிக்காலத்தில் தேர்தலை நேரத்துக்கு நடத்தினார்களே?
**பதில் :** அனைத்து மாகாண சபைகளுக்கும் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதே எமது நோக்கமாகும்.



தேர்தலின் தாமதபோக்குக்கு முதன்மைக் காரணமாகும். முன்னைய ஆட்சியில் தனது அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கு மாகாண சபைத் தேர்தல்களை ஒரு நாளில் நடத்தாமல் பிரித்து வேறு வேறாக நடத்தி முழு அதிகாரத்தை குறித்த பகுதிகளில் பிரயோகம் செய்தனர். சர்வாதிகார ஆட்சியின் பலத்தை அதிகரிப்பதற்கே இவ்வாறு தேர்தலை நடத்தினர். அது ஜனநாயகமல்ல. நாம் தேர்தலை உரிய நேரத்திற்கு நடத்துவோம். தோல்வி அடைவோம் என்று தெரிந்தும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினோம்.
**கேள்வி:** நல்லிணக்கம் முதன்மைத் தூணாகக் கூட்டரசில் இருந்தபோது பௌத்த மதம் அழிக்கப்பட்டு வருவதாக ஒமல்பே சோபித தேரர் குற்றம்சுமத்தப்படுகின்றாரே?
**பதில்:** கூட்டரசிலேயே பௌத்த மதம் போதிக்கப்பட்டது. பௌத்த மதத்தை வைத்துக்கொண்டு அரசியல் செய்யும் பிக்குகளை நான் கணக்கில் எடுப்பதில்லை.
**கேள்வி:** அரச தலைவர் தேர்தலில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் போட்டியிட முயற்சிக்கின்றாரே?
**பதில்:** முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்குத் தேர்தலில் போட்டியிட முடியுமா? முடியாதா? என்று என்னிடம் கேட்டுப் பயனில்லை. நான் உயர்நீதிமன்றமும் இல்லை. சட்டத்தரணியும்இல்லை.
எனக்கு தெரிந்த வகையில் அரசமைப்பின் பிரகாரம் மீண்டும் தேர்தலில் போட்டியிட மகிந்தவால் முடியாது. என்னுடைய பழைய நண்பர் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் குதூகலத்தில் இருந்து வருகின்றார். தோல்வி அடைந்த பின்னர் வீடு செல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினராக முனைந்தார். அதன்பின்னர் தலைமை அமைச்சராக முயற்சித்தார். அது முடியாது போனமையால் எதிர்க்கட்சித் தலைவராக முற்பட்டார். தற்போது மீண்டும் அரச தலைவராகுவதற்குக் கனவு காண்கின்றார்.
**கேள்வி:** மகிந்த ராஜபக்சவுக்குத் தேர்தலில் போட்டியிட முடியும் என்று ஜீ.எல்.பீரிஸ்தான் கூறினாரே?
**பதில்:** 15 வருடங்களுக்கு முன்னரே ஜீ.எல்.பீரிஸின் கருத்துகளைக் கேட்பதனை நாட்டு மக்கள் நிறுத்தி விட்டார். அவர் தனது கருத்தை தேவையான சந்தர்ப்பத்தில் மாற்றிக்கொள்வார். அவர்தான் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்க முற்பட்டார்.
அதன்பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சென்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை அவசியம் என்று கூறினார். அதேபோன்று அதிகார பகிர்வு யோசனையை முதலில் முன்வைத்ததும் அவராகும். அவர்தான் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க வேண்டும் எனயோசனை முன்வைத்தார். இந்த நிலையில் தற்போது மகிந்தவுடன் இணைந்து அதனை நிராகரிக்கின்றார். அவர் விடயத்தில் கவலை கொள்ளத் தேவையில்லை.
**கேள்வி:** நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுக்கொண்டிருக்கும் தருவாயில் வடக்கில் நினைவுத் தூபிகளை அகற்ற வேண்டும் என சி.வி.விக்கினேஸ்வரன் கோரியுள்ளாரே?
**பதில்:** அவ்வாறு கூறுவதற்கு விக்கினேஸ்வரனுக்கு உரிமை உள்ளது. இதனால் நாடுபிளவுபடும் எனக் கூற முடியாது. இவ்வாறான கருத்துகள் நாட்டை பிரிப்பவையல்ல. நினைவுத் தூபிகளை அமைக்க அதிகாரம் உள்ளது. நாம் வெளிநாட்டவர்களுடன் போர் செய்யவில்லை. வெளிநாட்டு இராணுவத்தைத் தோற்கடிக்க போரைச் செய்யவில்லை.
எமது நாட்டின்சகோதரர்களுடனே போர் செய்தோம். தற்போது போர் நிறைவடைந்துவிட்டது. தற்போது தூபிகளை அமைக்கும் காலம் அல்ல. நாட்டைக் கட்டியெழுப்பும் காலமாகும் என்பதனை விக்கினேஸ்வரனுக்குக் கூறவிரும்புகின்றேன். தற்போது நினைவுத் தூபி அமைப்பதோ அல்லது அகற்றுவதோ பிரச்சினையில்லை. மீண்டும் போர் ஏற்படாத வகையில் நாட்டை உருவாக்குவதே தேவையாகும்-என்றார். (31)



# எழுதியது எழுதியதே

வொஷிங்டன், ஒக். 22
"துருக்கிக்கு எதிராக எடுக்கப்பட்ட நடிவடிக்கைகள் ஒருபோதும் திரும்பப் பெறப்பட மாட்டாது" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.
அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றது முதல் அமெரிக்கப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் விதிக்கப்படும் வரிக்கும், வெளிநாட்டுப் பொருள்களுக்கு அமெரிக்காவில் விதிக்கப்படும் வரிக்கும் இடையில் உள்ள 'இமாலய' வேறுபாட்டை விவாதத்துக்கு உட்படுத்தி வந்தார்.
அதன் தொடர்ச்சியாக சீனா, ஐரோப்பிய நாடுகள் என்று வரிப் போரை பரவலாக ஆரம்பித்துள்ள ட்ரம்ப் தற்போது துருக்கியுடன் வரிப்போரில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.
துருக்கியில் இருந்து இறக்குமதியாகும் இரும்பு, உருக்கு ஆகியவற்றுக்கான வரிவ்ய அண்மையில் அதிகரித்திருந்தார் ட்ரம்ப். இதற்குப் பதிலடியாக அமெரிக்க உற்பத்திகளுக்கான வரியை இரட்டிப்பாக உயர்த்தியுள்ளது துருக்கி. இந்த இரண்டு நாடுகளும் வர்த்தகப் போரைக் கைவிட வேண்டும் என்று தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை முன்வைத்துள்ள நிலையில், "துருக்கிக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் எடுத்தது தான்" என்றுள்ளார் ட்ரம்ப்.
"துருக்கிசெய்வது கவலை அளிக்கிறது". மோசமான தவறை துருக்கி செய்கிறது. எந்த சலுகைகளும் துருக்கிக்குக் கிடையாது என்று ட்ரம்ப் தெரிவித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்கப் பாதிரியார் ஒருவர் துருக்கியால் கைது செய்யப்பட்டுள்ளமை, ஈரானைத் தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் முயற்சிக்கு துருக்கி ஒத்துழைக்காமை ஆகிய விவகாரங்களில் அமெரிக்கா - துருக்கி இடையில் முறுகல்தன்மை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பாதிரியார்களின் தவறை வெட்கத்துடன் ஏற்போம்!

## உலக மக்களுக்கு பாப்பரசர் கடிதம்

வத்திக்கான், ஒக். 22
கத்தோலிக்கப் பாதிரியார்களால் மேற்கொள்ளப்பட்டன என்று நிரூபிக்கப்பட்டுள்ள பாலியல் தவறுகளை உலகக் கத்தோலிக்கர்கள் வெட்கத்துடன் ஏற்க வேண்டும். அத்தகைய குற்றங்களுக்கு எதிராக அனைவரும் மனம் வருந்தி பாவமன்னிப்புக் கேட்க வேண்டும் என்று குறிப்பிட்டார் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ்.
கத்தோலிக்கப் பாதிரியார்களால் மேற்கொள்ளப்பட்டன என்று ஏராளமான பாலியல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக ஆஸ்திரேலியாவில் மட்டும் சுமார் ஆயிரம் வரையிலான பாலியல் குற்றங்களில் சுமார் 300 பாதிரியார்கள் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் மூன்றாவது தலைமைகூட பாலியல் குற்றமொன்றில் சிக்கியுள்ளார். இதையடுத்தே உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்களுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ்.
2 ஆயிரம் சொற்கள் கொண்ட அந்தக் கடிதத்தில், "பாதிக்கப்பட்டவர்களை நாம் நெடுங்காலமாகக் கண்டுகொள்ளாமல் விட்டுள்ளோம். இது அவர்களுக்கு நெஞ்சை உலுக்கும் வலியைப் போன்றது. திருச்சபை எங்கு ஆத்மார்த்தமாக இருக்க வேண்டுமோ அங்கு அவ்வாறு இருக்கவில்லை. பல உயிர்களில் வாழ்வில் ஏற்பட்ட சோகத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல்



உரிய நடிவடிக்கை எடுக்கத் தவறிவிட்டோம். நாம் செய்த, செய்கின்ற பாவங்களுக்காகவும், பிறரின் பாவங்களுக்காகவும் மன்னிப்புக் கோரு வோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



கொரியப் போரில் பிரிந்த குடும்பங்கள் சில மீண்டும் சந்தித்துக்கொண்ட உருக்கமான தருணங்களை ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ். வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் - தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இடையிலான சந்திப்பு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அதன் தொடர்ச்சியாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவே அவ்வாறு பிரிந்த குடும்பங்கள் மீண்டும் சேர்ந்துள்ளன. (ம)

# துருக்கிக்கான அமெரிக்கத் தூதரகத்தில் துப்பாக்கிச் சூடு

அங்காரா, ஒக். 22
துருக்கிக்கான அமெரிக்கத் தூதரகத்தில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான மோசமான அரசியல் பின்னணியின் மத்தியில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.
காரில் வந்த குழுவொன்று இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் பெரியளவு பொருள் சேதமோ அல்லது உயிரிழப்புக்களோ ஏற்படவில்லை. இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று துருக்கிப் பொலிஸார் தெரிவித்தனர். (ம)



# இத்தாலியில் கடும் மழை; 8 பேர் சாவு

இத்தாலியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 8 பேர் உயிரிழந்தனர்.
இத்தாலியின் கேலாப்ரியா மாகாணத்திலேயே இந்த வெள்ள இடர் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் எட்டுப் பேர் காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)



# தலிபான்களால் கடத்தப்பட்டோர் மீட்பு

காபூல், ஒக். 22
ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆயுதக் குழு 170 பேரை நேற்றுக் காலை கடத்திச் சென்றது. இராணுவத்தின் துரித நடவடிக்கையை அடுத்து 149 பேர் மீட்கப்பட்டனர். ஏனைய 21 பேரையும் மீட்பது தொடர்பில் தொடர்ந்து பேச்சு நடைபெற்றது.
ஆப்கானிஸ்தானில் சுமார் இரண்டு தசாப்த காலமாக தலிபான்களுக்கும் ஆப்கானிஸ்தான் அரசுக்கும் இடையில் போர் நடைபெற்று வருகிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அவ்வப்போது தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதும் பல்லாயிரக் கணக்கானவர்கள் உயிரிழப்பதும் தொடர்கதையாகவே இருந்தது. நேற்றுக் காலை மூன்று பேருந்துகளை வழிமறித்த தலிபான் அமைப்பு, சுமார் 170 பேரை கடத்திச் சென்றது. சுமார் ஆறு மணிநேரத் தேடுதலின் பின்னர் 149 பேர் மீட்கப்பட்டனர். (ம)





# கேரளா வெள்ள இடரை தீவிர இயற்கைப் பேரிடர் என அறிவித்தது டெல்லி

புதுடெல்லி, ஓக். 22

கேரளாவில் ஏற்பட்டுள்ள பெரு வெள்ளத்தை "தீவிர இயற்கைப் பேரிடர்" என்று அறிவித்தது புது டெல்லி.

கேரளாவில் கடந்த இரு வாரங்களாகப் பெய்த வரலாறு காணாத மழையின் காரணமாக மாநிலம் முழுவதும் பல்வேறு நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின. இந்த வெள்ளத்தில் சிக்கி சுமார் 400 பேர் யிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு, கொச்சி பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அதன் சுற்றுச் சுவர்கள் உடைந்து தண்ணீர் வெளியேறும் காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவியது. அதைத் தொடர்ந்து, ஒகஸ்ட் 22ஆம் திகதி வரை (இன்று வரை) கொச்சி பன்னாட்டு வானூர்தி நிலையம் செயல்படாது என்று அறிவிக்கப்பட்டது. தற்போது எதிர்வரும் 26ஆம் திகதி வரை கொச்சி வானூர்தி நிலையம் செயற்படாது என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

பருவமழை பெய்வது குறைந்துள்ளதால், கேரளாவில் மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. உயிரிழந்தோர், காயமடைந்தோர் எண்ணிக்கை துரிதமான மீட்புப் பணிகள், மற்றும் அவதானமான நகர்வுகளைக் கருத்தில்கொண்டு கேரள வெள்ள இடரை "தீவிர இயற்கைப் பேரிடர்" என்று அறிவித்தது புது டெல்லி. (ம)

# நலம்பெறட்டும் நடோல்ஸ்கி



போலந்தைச் சேர்ந்தவர் 25 வயது டோமாஸ் நடோல்ஸ்கி. அரிய வகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கிறார். இதன் மூலம் இவரது வாழ்க்கையே வலியாக மாறிவிட்டதுடன், இவரது உடலும் 12 வயதுச் சிறுவனைப்போல் வளர்ச்சியடையாமல் இருக்கிறது.

7 வயதில்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டது. ஒவ்வொரு வேளை உணவைச் சாப்பிடும் போதும், வயிற்றில் வலி கடுமையாக இருக்கும். கைகளும் கால் பாதங்களும் அத்தமாக வலிக்கும். இதனால் சாப்பிடுவதையே தவிர்க்க ஆரம்பித்தார். உடல்எடை வேகமாகக் குறைந்தது. விரைவிலேயே எலும்பும் தோலுமாக மாறிப் போனார். எத்தனையோ மருத்துவர்கள் பரிசோதனைகள் செய்தனர். ஒருவராலும் காரணத்தைக் கண்டறிய முடியவில்லை. சிலர் இது மூளை தொடர்பான பிரச்சினையாக இருக்கலாம் என்றார்கள். 16 வயதில்தான் இவரது நோய்க்கான காரணத்தைக் கண்டறிந்தனர். மரபணுக் குறைபாட்டால் இந்த நோய் ஏற்பட்டிருக்கிறது என்றும் இதற்கு மருந்துவம் இல்லை என்றும் சொன்னார்கள். நோயைக் கண்டறிந்தும் பயன் இல்லாமல் போய்விட்டது.

"நான் 25 வயது இளைஞன். ஆனால்ஒரு சிறுவனைப்போல் இருக்கிறேன். தினமும் கண்ணாடியைப் பார்க்கும்போது வெறுப்பாக இருக்கிறது. ஏனென்றால் கண்ணாடியில் தெரியும் பிம்பம் நான் இல்லை. என் உருவத்தால் பல இடங்களில் பிரச்சினை. நான் இளைஞன் என்று சொன்னால் யாரும் நம்புவதில்லை. ஒவ்வொரு நாளும் என்னை நிரூபித்துக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. உணவாகச் சாப்பிட முடியாததால், உடலுக்குத் தேவையான சத்தை வேறு விதங்களில் எடுத்துக்கொள்கிறேன்.

வலி தெரியாமல் இருக்க, வலி நிவாரணிகளைப் பயன்படுத்துகிறேன். மாத்திரைகளைப் போடாவிட்டால், என் உடல் முழுவதுமே பயங்கரமாக வலிக்க ஆரம்பித்துவிடும். போலந்து முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மருத்துவர்களைச் சந்தித்துவிட்டேன். இதுவரை மிகக் குறைந்த அளவிலேயே முன்னேற்றம் வந்திருக்கிறது. ஆனாலும் என்றாவது ஒருநாள், இந்தப் பிரச்சினையில் இருந்து வெளிவந்துவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்கிறார் டோமாஸ் நடோல்ஸ்கி. (ம)





# 1 கிலோ இனிப்பு 25 ஆயிரம் ரூபா

குஜராத்தின் சூரத் நகரில் ஒரு கிலோ 25 ஆயிரம் ரூபாவுக்கு (இலங்கை மதிப்பில்) விற்கப்படும் இனிப்பு ஒன்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இந்த இனிப்பை அந்த பகுதி மக்கள் 'கோல்டன் ஸ்வீட்' என்று அழைக்கின்றனர்.

குஜராத்தின் சூரத் நகரில் இந்த இனிப்பு விற்கப்படும் கடையில், அதைப் பார்ப்பதற்கு கூட்டம் அலைமோதுகிறது. இந்தியாவில் வைர விற்பனையில் முக்கிய சந்தையாக திகழும் சூரத், தெருவோர உணவுகளுக்கும் பிரபலமானதாக அறியப்படுகிறது. "நாங்கள் கோல்டன் ஸ்வீட்டைப் போன்று நான்கு வகை இனிப்புகளை மிகவும் தரம் உயர்ந்த பொருள்களைக் கொண்டு தயாரித்துள்ளோம். இந்த இனிப்புகளுக்காக சிறப்பு வகை குங்குமப்பூவை ஸ்பெய்னிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். நாங்கள் சிறந்த முந்திரி பருப்புகள் மட்டுமல்லாது, சுத்தமான தங்க இலைகளை இதில் பயன்படுத்தியுள்ளோம்" என்கிறார் அந்த இனிப்பு விற்கப்படும் கடையின் உரிமையாளர். (ம)

முஸ்லிம்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான ஹஜ் பண்டிகை இன்று உலகமெங்கும் கோலகலமாகக் கொண்டாடப்படுகிறது. ஹஜ் பண்டியையை முன்னிட்டு சவூதி அரேபியாவில் உள்ள மெக்கா நகருக்குப் பயணம் மேற்கொண்ட யாத்திரிகர்களின் ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படத்தை வெளியிட்டது. (ம)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அக்கறையோடு செயற்படுங்கள்

வடக்கில் உள்ள மிகப் பெரிய வைத்தியசாலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை. நாளாந்தம் பல நூற்றுக்கணக்கானவர்கள் இங்கு விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறுகிறார்கள். பெரும் இடத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள இங்கிருந்து நாளாந்தம் பெரும் தொகைக் கழிவுகள் உருவாகின்றன. வைத்தியசாலையை முகாமை செய்வது போன்றே, இங்கு உற்பத்தியாகும் கழிவுகளை முகாமை செய்வதற்கும் தனித் திறனும் வலுவும் தேவை. பிறப்பு மற்றும் இறப்பு சார்ந்தும் அறுவைச் சிகிச்சைகள் சார்ந்தும் ஆபத்தையும் தொற்றையும் ஏற்படுத்தக்கூடிய கழிவுகளும் இங்கு உற்பத்தியாகின்றன. அப்படி உற்பத்தியாகும் கழிவுகளை வைத்தியசாலை முகாமை செய்யும் முறைகுறித்து அடிக்கடி சுகாதாரக் கரிசனைகள் எழுப்பப்படுவது வழமை.

இப்போதும் அதுபோன்ற ஒரு கரிசனை எழுப்பப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநக்ர சபை உறுப்பினர் ம.அருள்குமரனால் எழுப்பப்பட்டுள்ள இந்தக் கரிசனை, யாழ். நகரத்தில் வாழும் மக்களின் புருவங்களை உயர்த்தச் செய்துள்ளது. நகரை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களையும் கரிசனை கொள்ளச் செய்துள்ளது.

வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்படும் உயிரியல் கழிவுகள் சுத்திகரிக்கப்படாமலேயே குடாக்கடலில் கலக்க விடப்படுகின்றன என்பதே உறுப்பினர் எழுப்பியுள்ள கரிசனை. அதாவது வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்படும் குருதி உள்ளிட்ட திரவ நிலைக் கழிவுகள் மற்றும் உடற்பாகங்களின் எச்சங்கள் என்பவை பண்ணைக் கடலின் அருகில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் வைத்து நன்கு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே கடலில் கலக்கவிடப்படவேண்டும். அதற்கேற்ற வகையில் வைத்தியசாலையில் இருந்து அந்தச் சுத்திகரிப்பு நிலையம் வரையில் நிலத்தடிக் குழாய்கள் மூலமான இணைப்பு உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை இயக்கி கழிவுகளைச் சுத்திகரித்து அவற்றைக் கடலில் கலக்க விடும் பணி தனியார் நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் சரியான முறையில் செயற்பட்டு கழிவுகளைச் சுத்திகரித்துக் கடலில் கலக்கவிடுவதற்குப் பதில், நேரடியாகவே கழிவுகளைக் கடலில் கொட்டுகின்றது என்பதே குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளரும், சுகாதார வைத்திய அதிகாரியும் ஆமோதித்துள்ளார்கள்.

யாழ். நகரினதும் மக்களினதும் சுகாதாரத்தைப் பாதிக்கக்கூடியதும், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதுமான இந்தச் செயல் குறித்து அக்கறைப்பட்டிருக்க வேண்டிய துறைகள் என்ன செய்துகொண்டிருந்தன என்கிற கேள்வியை இந்தக் குற்றச்சாட்டு எழுப்பியுள்ளது. சுத்திகரிப்பு நிலையப் பகுதிக்குள் நுழைய மாநகர சபை அதிகாரிகள் தனியார் நிறுவனத்தால் அனுமதிக்கப்படவில்லை என்பதால், தம்மால் அது குறித்து நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று மாநகரசபையினர் கூறுகின்றனர். வைத்தியசாலை நிர்வாகமே இதனைக் கையாள வேண்டும் என்பதால், அவர்களுக்கு முறையிட்டதுடன் தமது பணி நிறைவடைந்ததைப் போன்று மாநகரசபை அதிகாரிகள் சபையில் பதிலிறுத்துள்ளனர். மாவட்ட சுற்றுச்சூழல் துறை அதிகாரிகளுக்கு இதுபற்றித் தெரிந்திருக்குமா என்பதே தெரியவில்லை. அவர்கள் இது தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்பது பற்றிய தகவல்களும் இல்லை. போதனா வைத்தியசாலையோ, குற்றச்சாட்டுக்குப் பின்னரும் இது தொடர்பில் உருப்படியான விளக்கம் எதனையும் வெளிப்படுத்தியதாகவும் இல்லை. இப்படி ஒன்றில் அது தமது கடமை இல்லை என்று நழுவும் போக்கிலும், அக்கறையற்ற தனத்துடனும் அதிகாரிகள் நடந்துகொள்வது கண்டிக்கத்தக்கது. உடனடியாக இது விடயத்தில் அவர்கள் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி விபரீதங்கள் நிகழ்வதற்கு முன்பாகவே அணையிட வேண்டும்.

முதற்கட்டமாக சுத்திகரிக்கப்படாத கழிவுகள் வெளியேற்றப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்த வேண்டும், உறுதிப்படுத்தப்பட்டால், அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய சூழல் பாதிப்பு மதிப்பிடப்படவேண்டும், அதற்குக் காரணமான குறித்த நிறுவனத்தின் மீது விசாரணை நடத்தப்படவேண்டும், பொதுச் சுகாதாரம் தொடர்பில் அக்கறையற்ற தனத்தோடும் மெத்தனத்தோடும் நடந்துகொண்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்கும் வகையில் கிரமமான சுத்திகரிப்பு அறிக்கை பெறப்பட்டு கண்காணிப்பு இறுக்கப்படவேண்டும். இவையனைத்தும் உடனடியாகவே செய்யப்படவேண்டும். இந்தத் தவறுகள் மனித உயிர்களைக் காவு கொள்ளுமளவுக்குச் சென்றுவிடாமல் தவிர்ப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.



# சூரியனும், சந்திரனும் பேசாமல் இருக்க விளக்கு விளம்பரம் தேடுகின்றது

தில்லாலங்கடி

வடக்கு மீன்பிடித் துறையின் புதிய அத்தியாயமொன்று இன்று ஆரம்பமாகிறது. இலங்கையின் மொத்த மீன்பிடியில் மூன்றில் ஒரு பங்கை தன்னகத்தே கொண்டிருந்த பெருந்துறைமுகத்தை மறுசீரமைப்பதற்கான பணி இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

**இலங்கையின் மீன்பிடி வரலாற்றில் 'மயிலிட்டி' தனித்துவம் பெற்றதொன்று**

மயிலிட்டி என்ற பெயரைத் தெரியாதவர்களே இலங்கையில் இருக்க முடியாது. மீன்பிடி என்றால் உடனே நினைவுக்கு வரக் கூடிய பெயர். வடபகுதியின் மிகப் பெருந் துறைமுகம். மயிலிட்டி மக்களுக்கு கடல் அன்னை வாரி வாரி இறைத்துக் கொடுத்தாள். மயிலிட்டியில் மீன்பிடித் தொழில்துறை முதலாளிகளுக்கு உதவியாளர்களாக பணிபுரிவதற்கென்றே வேறு இடங்களிலிருந்தும் பலர் இங்கு வருவார்கள். அப்படிக் கோலோச்சிக் கொண்டிருந்த துறைமுகம் மயிலிட்டி.

**1990ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தனர் மயிலிட்டி மக்கள்**

1990ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்றுவந்த போர் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டிருந்தது. தற்காலிகமாகத் தானே இடம்பெயர்கிறோம் என்ற எண்ணத்தில் மூன்று நாள்களில் ஊர்திரும்பி விடலாம் என்ற நம்பிக்கையுடன் தமது பொருள் பண்டங்களை போட்டது போட்டபடி விட்டுவிட்டு வெளியேறியவர்கள் மயிலிட்டி மக்கள். ஆனால் அது அவர்களுக்கு கனவாகிப்போனது. 2009ஆம் ஆண்டு வரை போர் உச்சம். மயிலிட்டி விடுவிக்கப்படும் என்பதும், மயிலிட்டித்துறைமுகத்தில் இருந்து கடலுக்குச் சென்று மீன்பிடிக்கலாம் என்பதும் நினைத்துப் பார்க்க முடியாததாகவே இருந்தது.




போர் முடிந்த பின்னர் வலி.வடக்கில் திக்குத் திக்காக சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன. 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் வலி.வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கப்படவே மாட்டாது என்று அறிவிக்கப்பட்டது.

அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவினால் அது தொடர்பான அரசிதழும் வெளியிடப்பட்டது. மயிலிட்டித் துறைமுகத்தில் மீண்டும் கால் பதிக்கலாம் என்று எண்ணியிருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே மிஞ்சியது. இதன் பின்னர்தான் வலி.வடக்கு காணி விடுவிப்புக்கான போராட்டம் தீவிரமானது. வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவராக இருந்த அ.குணபாலசிங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இணைந்து பரவலாகப் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். நீதிமன்றில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் தொடர் போராட்டம், தெல்லிப்பழை பிரதேச செயலக முன்றலில் போராட்டம் என்று போராட்டங்கள் பரந்து விரிந்தன. அப்போது அரச தலைவராக இருந்தவர் மகிந்த ராஜபக்ச. அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்தவர் டக்ளஸ் தேவானந்தா. மகிந்தவின் செல்லப்பிள்ளையாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளராக இருந்தவர் அங்கஜன் இராமநாதன்.

**மயிலிட்டி விடுவிப்புக்காக மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் முன்னெடுப்பு**


மயிலிட்டி விடுவிப்புக்காக மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபொழுது, ஒட்டுக்குழுக்களை ஏவி அடக்கு முறை திணிக்கப்பட்டது. போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள் மீது தாக்குதல், போராட்டங்களுக்கு மக்களை ஏற்றி வந்த சிற்றூர்திகளின் கண்ணாடி உடைப்பு, கழிவு ஒயில் வீச்சு, மக்களை சிற்றூர்திகளில் ஏற்றி வரும்போது வீதியில் முள்தைத்த பலகை வைத்தல் என்று போராட்டத்தை ஒடுக்குவதற்கான பலம் பயன்படுத்தப்பட்டது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கு நேரடியாகச் சென்று கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட் டன

இவை எல்லாவற்றையும் தாண்டித்தான் போராட்டங்கள் நடந்தன. இந்தப் போராட்டங்களின் சேதாரங்களுக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே தங்கள் பணத்தைக் கொடுத்தார்கள். போராட்டங்கள் தொடர்ந்து நடத்துவதற்கு பக்கபலமாக இருந்தார்கள்.

மயிலிட்டி உள்ளிட்ட காணிகள் விடுவிக்கப்படாது என்று அரசிதழ் அறிவிப்பு வெளியானபோது ஏன் என்று கேள்வி கேட்காதவர்கள், போராடிய மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது கண்டிக்காது கைகட்டி வேடிக்கை பார்த்தவர்கள், இப்போது மயிலிட்டி விடுவிப்புக்கு உரிமை கோருகின்றார்கள். வீதிகள் எங்கும் சுவரொட்டிகள் ஒட்டுகின்றார்கள். இதைதான் ஊர் வழக்கத்தில் சொல்லுவார்கள், "சூரியனும், சந்திரனும் பேசாமல் இருக்க விளக்கு விளம்பரம் தேடிச்சாம்" என்று!

# பத்மநாபா கொலையால் கருணாநிதியின் ஆட்சி கலைக்கப்பட்டது

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-14



தேவநாயகம் தேவானந்த்

கருணாநிதியின் ஆட்சி 1976 ஆம் ஆண்டில் முதல் தடவையாக இந்திராகாந்தியால் கலைக்கப்பட்டபோது. ஈழத்தில் ஆயுதப் போராட்டம் வீரியம் பெறவில்லையெனலாம். ஆனால், அந்தக்காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமாகியிருந்தது. அதைத் தொடர்ந்து 1976 மே 14 ஆம் திகதி வட்டுக்கோட்டையில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டின் தீர்மானம் வரலாற்று முக்கியம் பெற்றது. இதனை 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' என்றார்கள்.

**வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னரே இலங்கையில் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது**

'தமிழர்கள் நிம்மதியாக, சுதந்திரமாக வாழ வேண்டுமாயின், அதற்கு இலங்கைத்தீவின் வடக்கு,கிழக்குமாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தனித் தமிழீழமே, ஒரே தீர்வு'என்றுஅந்தத் தீர்மானம் குறிப்பிடுகிறது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னரே ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது. ஆக, கருணாநிதியின் முதலாவது ஆட்சி கவிழ்ந்ததற்கும், அவர் சொல்வது போன்று, ஈழத் தமிழர்களுக்கும் தொடர்பில்லை எனலாம்.



எம்.ஜீ.ஆர் உயிருடன் இருந்தவரை கருணாநிதியால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. எம்.ஜி.ஆர் ஆட்சியை இடிய மீன் ஆட்சி என்று கருணாநிதி விமர்சித்து வந்தார். எம்.ஜி.ஆர் மறைந்த பின்னர் 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மீண்டும் தி.மு.க ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், அந்தஆட்சியும் அதிககாலம் நீடிக்கவில்லை.

கருணாநிதியின் ஆட்சி1991ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாகவும் மத்தியில் ஆட்சிசெய்த காங்கிரஸ் கட்சி அரசால் கலைக்கப்பட்டது. தி.மு.க ஆட்சியைக் கலைப்பதற்குஅப்போது சொல்லப்பட்ட காரணம், "தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது. அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு தி.மு.க அரசு தவறிவிட்டது" என்பதாகும். தமிழ்நாட்டில் சட்டம். ஒழுங்கு சீர்குலைய முக்கியமான காரணமாக இருந்தவர்கள் ஈழப் போராளிக்குழுக்கள். அவர்களைக் கட்டுப்படுத்தாது, அவர்களுக்கு தி.மு. க அரசு துணைபோவதாகக் குற்றம் சாட்டப்பட்டது. கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருப்பதாகச் சொல்லப்பட்டது.

**தி.மு.கவுக்கு விடுதலைப்புலி ஆதரவு சாயம் பூசப்பட்டது**

இந்தக் காலகட்டத்தில்தான், ஜெயலலிதா விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைஎடுக்கிறார். அதே வேளை தி.மு.கவுக்கு விடுதலைப்புலி ஆதரவுச் சாயம் பூசப்பட்டது. இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயம், தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆட்சியைக் கைப்பற்றும் அரசியல் அதிகார விளையாட்டில் ஈழ விடுதலைப் போராட்டம் சிக்குண்டு போனமைதான். இதன் பின்னர் தமிழ்நாட்டின் அரசியலில் ஈழ விடுதலைப் போராட்டம் முக்கியத்துவம்பெற ஆரம்பித்திருந்தது. பின்னர் ஜெயலலிதா தனதுபுலி எதிர்ப்பு நிலைப்பாட்டை சுப்பிரமணியம் சுவாமி, துக்ளக் சோ, இந்து பத்திரிகையின் ராம் போன்றவர்களுடன் இணைந்துதீவிரப்படுத்தினார். கருணாநிதியின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கு மிக முக்கியமான காரணம், ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் பத்மநாபா, சென்னையில் படுகொலைசெய்யப்பட்டதாகும். இது 1990 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் சென்னையில் உள்ளகோடம்பாக்கத்தில் நடை பெற்றது. இவருடன் 13 ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்களும், 2 பொதுமக்களும் கொலைசெய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் நடைபெற்றவுடன் கருணாநிதி ஆட்சி கலைக்கப்படவில்லை என்பதாகும். இந்தச் சம்பவம் நடைபெற்ற உடனேயே ஏன் கருணாநிதி ஆட்சி கலைக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். காரணம், அ.தி.மு.கவுக்கு இசைவான அரசு அப்போது மத்தியில் ஆட்சியில் இருக்கவில்லை என்பதால் ஆகும். 1989 இல் நடந்த பொதுத்தேர்தலில் ராஜீவ்காந்தி ஜெயலலிதாவுடன் இணைந்து கூட்டணி அமைத்துப் போட்டியிட்டார். அப்போதுஅவர் தோல்வியடைந்தார். ஜானதாதளம் மற்றும் பாரதிய ஜனதாக்கட்சி கூட்டணி அமைந்து இந்திய மத்திய ஆட்சியைக் கைப்பற்றின.

**வி.பி.சிங் இந்தியத் தலைமை அமைச்சரானதன் பின்னரே இந்தியப் படைகள் இலங்கையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன**

வி.பி சிங் (ஜானதாதளம்) 1989ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றார். ஆனால் அவரால் 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி வரைதான் ஆட்சிசெய்ய முடிந்தது. இவரது காலத்தில்தான் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து விலக்கிக்கொள்ளப்பட்டது. அப்போது, கருணாநிதி இந்திய இராணுவம் நாடு திரும்பிய நிகழ்வைப் புறக்கணித்தார். அது இந்திய இறையாண்மையை அவமதித்த செயலாக விமர்சிக்கப்பட்டது. வி.பி.சிங் ஆட்சிக்குப் பின்னர் எதிர்க்கட்சியான காங்கரசின் ஆதரவோடு சந்திரசேகர் தலைமை அமைச்சரானார். இப்போது அ.தி.மு.கவுக்குச் சார்பானஆட்சி மத்தியில் அமைந்துவிட்டது. பிறகென்ன? அ.திமு.கவின் வேண்டுகோளுக்கமைவாக ஆறு மாதத்துக்கு முன் நடந்த பத்பநாபா படுகொலையைக் காரணம் காட்டிச், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று தி.மு.கவின் ஆட்சி 1991ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் தியதியன்று கலைக்கப்பட்டது.

இதன் பின்னர் சந்திரசேகருக்கான ஆதரவைராஜீவ்காந்திவிலக்கிக்கொண்டதால், மறுபடியும் பொதுதேர்தல் 1991 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலுக்கான பரப்புரைக்காக தமிழ்நாட்டுக்கு வந்தார் ராஜீவ்காந்தி. அப்போது சிறிபெரும்புதூரில் மனித வெடிகுண்டு மூலம் அவர் 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதியன்று படுகொலைசெய்யப்பட்டார். இந்தப் படுகொலைக்குப் புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஈழ ஆதரவு நிலைப்பாடு தமிழ்நாட்டில் நேர் எதிர் நிலைக்குச் சென்றது.

ஆனால், கருணாநிதியின் ஆட்சி இரண்டு தடவைகள் கலைக்கப்பட்டதற்கும், முக்கிய காரணம் அவரது பரம எதிரியான அ.தி.மு.க. என்பது வெளிப்படையானது. மாநிலத்தின் எதிர்க்கட்சியான அ.தி.மு.க, கருணாநிதி ஆட்சியைக் கலைக்கமுன்மொழிய, மத்தியில் அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ்கட்சி அதனை வழிமொழிந்ததாலேயே ஆட்சிக்கலைப்புநடைபெற்றது. ஆனால் என்னஆச்சரியம், அதற்குப் பின்னரான இந்திய அரசியல் வரலாற்றில் கருணாநிதி காங்கிரஸின் உற்ற தோழனாகப் பதிவாகிறார். (தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

### கட்டாக்காலி நாய்களுக்கு இனியும் கருணை தேவையா?

கட்டாக்காலிகளாகத் திரிகின்ற நாய்களால் அச்சத்துடன் மக்கள் நடமாட வேண்டியுள்ளது. குடா நாட்டைப் பொறுத்தவரையில் வீதிகள், ஒழுங்கைகள், சந்தைகள், பொதுவிடங்களென அனைத்து இடங்களிலும் கட்டாக்காலி நாய்கள் நடமாடித் திரிகின்றன. மனிதர்களைக் கண்டால் குரைப்பதும், துரத்திச் செல்வதும் இவற்றின் வழக்கமான செயல்களாகிவிட்டன. சில வேளைகளில் மனிதர்களைக் கடிப்பதற்கும் இவை தவறுவதில்லை. இந்த நாய்களின் கடிக்கு ஆளானவர்கள் மருத்துவமனைகளுக்கு அலைந்து திரிகின்றனர். அசட்டையாக இருந்த சிலர் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. கடந்தகாலங்களில் உள்ளுராட்சிமன்றங்கள் கட்டாக்காலிகளாக அலைந்த நாய்களைப் பிடித்து அழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால் மகிந்தவின் கருணைப் பார்வை இவற்றின் மீது வீழ்ந்ததால் இவற்றைப் பிடித்து அழிக்க முடியவில்லை. இந்த நாய்களுக்கு இனியும் கருணை காட்ட வேண்டுமா?

*மா.தவபாலன், கோண்டாவில்*

### ஆன்மிக ஈடுபாட்டுடன் தமிழ்ப் பண்பாடு பேணுவோம்

கடந்த 17ஆம் திகதிய உதயன் ஆசிரியர் தலையங்கத்தில் நல்லூர் திருவிழாவும் பண்பாடு கலாசாரம்பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது. வழிபாட்டுத் தலங்களில் நடக்கும் நிகழ்வுகள் ஆன்மிகத்தேடலோடு, பண்பாட்டுக்கு அமைவாகவும் அமைதல் வேண்டும். அவை வெறும் பொழுதுபோக்கு நிகழ்வுபோல் அமைந்துவிடக்கூடாது. சீமெந்துக் கட்டடங்களும் கோபுரங்களும் உயர்ந்துள்ள நிலையில், ஆன்மிகம் வளர்ந்துள்ளதா என்பது கேள்விக்குரிய ஒன்றே. இன்று எம்மினத்துக்குத் தேவையானது ஆன்மிக வளர்ச்சியே. புலம்பெயர் நாடுகளில் வாழும் எம் உறவுகள், பிள்ளைகள் சிரமப்பட்டு உழைக்கும் பணத்தை சீமெந்துக் கட்டிடங்கள் அமைப்பதற்கும், ஆடம்பரத்தேவைகளுக்கும் பயன்படுத்தாமல் ஆக்கபூர்வமான தேவைகளுக்கு பயன்படுத்த வேண்டும்; பயன்பெற வேண்டும். ஆன்மிக வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கபூர்வமான காரியங்களை மேற்கொள்ள வேண்டும். இதை ஆன்மிகச் சிந்தனை உடையோர் அனைவரும் ஒன்றுபட்டுச் செய்ய வேண்டும்; செய்விக்க வேண்டும்.

*ப.யேசுபாதம், வட்டக்கச்சி*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய செயலை பொறுப்புடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். பணவிடயத்தில் கவனம் தேவை.

**இடபம்:** பிறரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். இலாபம் சீராக இருக்கும். பணியாளர் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மிதுனம்:** பணிகளில் உற்சாகமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி, இலக்கு நிறைவேறும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** பேச்சில் திறமை வெளிப்படும். தொழில், வியாபாரம் செழிக்கும். விற்பனை அதிகரிப்பால் இலாபம் பெருகும். எதிரியால் இருந்த தொல்லை சுவடு தெரியாமல் விலகும்.

**சிங்கம்:** எதிலும் நிதானம் பின்பற்றவும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற அக்கறையுடன் செயற்படுவது நல்லது. இலாபம் சுமார்.

**கன்னி:** பொறுமையுடன் செயற்படுவது அவசியம். தொழில் சார்ந்த குறையை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு உருவாகும். தொழில் வியாபாரத்தில் தேவையான அபிவிருத்தி பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்:** பணிகளில் பொறுப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர அனுபவசாலியின் ஆலோசனை உதவும். சேமித்த பணம் திடீர் செலவால் கரையும்.

**தனுசு:** வீண் பேச்சு பேசுபவரிடம் விலகியிருக்கவும். குடும்பத்தினர் உங்களுக்கு ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சி படிப்படியாக முன்னேறும்.

**மகரம்:** சிலரது அவசியமற்ற பேச்சு சங்கடம் உருவாக்கும். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணியால் மலைப்பு உண்டாகும்.

**கும்பம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். சிறிய முயற்சியும் அதிக அளவில் நன்மை தரும். தொழிலில் அபிவிருத்தி செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** திட்டமிட்ட செயல்களை நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். மனதில் நிம்மதியும், பெருமிதமும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும்.

**மனிதன் பணத்தைச் சம்பாதிக்க ஆரோக்கியத்தைத் தியாகம் செய்கிறான்...**



**இழந்த ஆரோக்கியத்தை அடைய பணத்தைத் தியாகம் செய்கிறான்...**

# கேரள மக்களுக்காக ரஹ்மானின் பாடல்



"கேரளா கேரளா டோண்ட் வொரி கேரளா" என இசைப்புயல் ஏ.ஆர்.ஆர் ரஹ்மான் பாடும் பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தொடர் கனமழை காரணமாக கேரளாவே வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறது. மக்கள் தங்கள் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர். 100 ஆண்டுகளில் இல்லாத மழை கேரளாவில் தற்போது பெய்துள்ளது. 1500க்கும் மேற்பட்ட நிவாரண முகாம்களில் கடலோர காவல்படை, தேசிய பேரிடர் மீட்புப்படையினர், அதிவிரைவுப் படையினரால் மீட்கப்பட்ட சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் மக்கள் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான், "முஸ்தப்பா... முஸ்தப்பா... டோண்ட் வொரி முஸ்தப்பா..." என்ற பாடலை "கேரளா... கேரளா... டோண்ட் வொரி கேரளா" என மாற்றிப் பாடி பதிவிட்ட காணொலி தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.




சில நேரங்களில் எம் கையில்
பலநேரங்களில் நாம் அதன் கையில்!

சில நேரங்களில் பாதையாகிறது
பல நேரங்களில் போதையாகிறது!

சில நேரங்களில் பொழுதுபோக்காகிறது
பலநேரங்களில் பொழுதுகளைத் தின்றுவிடுகிறது!

சில நேரங்களில் தூரம் குறைக்கிறது
பலநேரங்களில் நாயாய் குரைக்கிறது!

சில நேரங்களில் உயிர் காக்கிறது
பலநேரங்களில் உயிர் பறிக்கிறது!

இதுவரை வந்த வானொலி, தொலைக்காட்சி, கணினி. இணையம் என எல்லாவற்றையும் உள்ளடக்கி மனிதனின் மந்திரக்கோலாக, இன்னொரு கையாக. இன்றைய உலகில் உலா வருகிறது. அதனால் மனிதனைப் பல நிலைகளில் அடிமைப்படுத்தி வருகிறது.

சிலரின் கைகளைவிட்டு
சிலரின் கண்களைவிட்டு
சிலரின் காதுகளைவிட்டு

இந்த அலைபேசியை இன்று பிரிக்கமுடிவதில்லை.



**நாளை**

**23.08.2018**

வியாழக்கிழமை

**ஆவணி 07**

திதி: துவாதசி மு.ப. 11.52 வரை
நட்சத்திரம்: பூராடம் காலை. 06.10 வரை
சுபநேரம்: 07.35 – 09.05 வரை
ராகுகாலம்: 01.35 – 03.05 வரை




தீவிரமான சிந்தனையாளர்களால் தான் இந்த உலகில் இருக்கும் மதங்கள், தத்துவங்கள், கலாசாரங்கள், அறநெறிகள் உருவாக்கப்பட்டன. எம்மைச் சுற்றி இருக்கும் எல்லாமுமே தீவிரமான சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்டவைதான். இந்தத் தீவிரமான சிந்தனையாளர்களுக்கு மாற்றாகதான் ஜென் செயற்படுகிறது. ஜென் இந்தத் தீவிரமான உலகில் இருந்து வெளியே இருக்கிறது. அது அதன் விருப்பப்படி விளையாட்டு, நகைச்சுவை என்று அதனுடைய உலகத்தை வடிவமைத்து இருக்கிறது.
ஜென் உலகில் சிறந்து விளங்கும் மாஸ்டர்களின் நடவடிக்கைகள் கூட குழந்தையைப் போல்தான் இருக்கும். வாழ்க்கையை ஒரு விளையாட்டைப்போல எடுத்துக் கொண்டால் எந்தப் பிரச்சினையும் எமக்கில்லை.

-ஓஷோ

**டேய் நீயாருனே எனக்குத் தெரியாது... என்கிட்ட கடன் கேக்கிறா...**



**தெரிஞ்சவங்க கிட்ட கேட்டா நட்பு கெட்டுப் போயிடும் அதான்...**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 5 | 7 | | | | |
| 9 | | 6 | | | | | 4 | |
| | | | 3 | | | | | 8 |
| | | | | 3 | | 9 | | 7 |
| | 2 | | | | | | | |
| | 1 | | | 6 | | 5 | | |
| 4 | | | | 8 | 7 | | | |
| | | | 6 | 4 | | 3 | | |
| | | | | | | | 1 | |

**நேற்றைய விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 | 7 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 4 | [illegible] | [illegible] | [illegible] |
| 4 | 6 | 1 | 9 | 8 | 2 | [illegible] | [illegible] | [illegible] |
| 7 | 9 | 3 | 5 | 1 | 6 | [illegible] | [illegible] | [illegible] |
| 5 | 8 | 2 | 7 | [illegible] | 3 | [illegible] | [illegible] | [illegible] |
| 3 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 7 | 4 | 8 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 1 |

வாழ வைப்பவன்
**இறைவன்**

வாழத் தெரிந்தவன்
**மனிதன்**

வாழ வைப்பவன்
**துரோகி**

தூக்கி விடுபவன்
**நண்பன்**

உதயன்

புதன் பொய்கை

ஓகஸ்ட் 22 2018

@UthayanPrint


வெற்றி பெறுவது எப்படி என்று யோசிப்பதைவிட, தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப்பார். நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்.

- ஹிட்லர்

தென்னவன்

# 'விஷன்' ஓவியப் பொருள்களின் காட்சிப்படுத்தல்

## யதார்த்தங்களின் பிரதிபலிப்பு



**ஓவியக் கலை**

காண்பவரைக் கவர்ந்திழுத்து உள்ளங்களைத் தன்வயப்படுத்தும் உயர்ந்த கலை ஓவியக் கலை. எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டு வியக்க வைக்கும் விந்தை மொழி ஓவியக் கலை.

ஓவியம் பேசும் செய்திகள் பல. உணர்த்தும் கருத்துக்களோ மிகப்பல. தமிழர் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் ஓவியக்கலை முன்னணியில் திகழ்கிறது. பழங்கால மக்கள் தமது உள்ளக் கருத்துகளைப் புலப்படுத்த பாறைகளிலும், குகைகளிலும் கீறி எழுதினர். தமது எண்ணத்தைச் சித்திரம் வரைந்து வெளிப்படுத்தினர். இவற்றை தொல்பொருள் ஆய்வுகளாலும், இலக்கியச் சான்றுகளாலும் அறிந்து கொள்ள முடிகிறது.

தமிழ்நாட்டில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஓவியமே சித்திர எழுத்துக்களாகவும் நாளடைவில் மொழிக்குறியீடுகளாகவும் வளர்ந்துள்ளன.

**அடிப்படைகள்**

ஓவியம் வரைவதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியவை அடிப்படையாகும். இவ்வாறு வரையப்படுபவை கோட்டோவியங்கள் ஆகும். அவ்வரைகோடுகள் மேல் சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம் போன்ற வண்ணங்கள் பூச அழகிய ஓவியங்களாக அவை உருவெடுக்கும்.

இங்கு, சிற்பி தான் செதுக்கவிருக்கும் உருவத்தை முதலில் வரைந்து பார்த்த பின்னரே, அதனைக் கொண்டு கல்லில் உருவம் அமைப்பதே மரபு. இதன் மூலம் சிற்பம் செதுக்குவதற்கு ஓவியக் கலை துணை புரிந்ததையும், ஓவியக்கலை முன்னரே வளர்ந்திருந்ததையும் அறியலாம்.

**நாமகரணம்**

**ஓவியக்கலை, 'ஓவு, ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி' எனப் பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.**

ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்றவரை 'ஓவியப் புலவன்' என்றும், ஓவியக் கலைஞர் குழுவை 'ஓவிய மாக்கள்' என்றும் குறிப்பிடுகின்றனர். ஆண் ஓவியர் 'சித்ராங்கதன்' எனவும், பெண் ஓவியர் 'சித்ரசேனா' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

பல்வகைக் காட்சிகள், உருவங்கள் வரைய ஓவியர் அக்காலத்தில் பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். வண்ணந்தீட்டும் கோல்தூரிகை 'வட்டிகை' எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு 'வட்டிகைப் பலகை' எனப் பெயரிட்டிருந்தனர்.

அந்தக்காலத்தில் ஓவியங்கள் வரைவதற்கென்று தனியிடங்கள் அமைந்திருந்தன. அவ்விடங்கள், 'சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம்' என்ற பெயர்களில் அழைக்கப்பட்டன.


அரசர் வாழும் அரண்மனைகள், செல்வர் வாழும் வளமனைகள், மாளிகைகள், ஆடலரங்குகள், கோவில் மண்டபங்கள், பொதுமன்றங்கள் முதலிய இடங்களின் கட்டடச் சுவர்கள், மேற்கூரைகள், துணிகள் ஆகியவற்றில் ஓவியங்களை வரைந்தனர்.



**பொருள்**

சுடுமண் சுவர் மீது 'வெண்சுதை' (சுண்ணாம்பு) பூசிச் செஞ்சாந்து கொண்டு ஓவியங்கள் தீட்டினர். அதுமட்டுமல்லாமல் மரப்பலகை, துணிச்சீலை, திரைச்சீலைகளில் ஓவியம் வரைந்தனர். நாடக மேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கவிடப்படுகின்றன. அவற்றை 'ஓவியஎழினி' கொண்டு அறிகிறோம். 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' என்ற பழமொழி இவ்வாறுதான் உருவாயிற்று.

வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதை 'புனையா ஓவியம்' என்றழைத்தனர். இன்றும் இது மென்கோட்டு ஓவியமாக நடைமுறையில் உள்ளது. இயற்கைக் [illegible], கற்பனைக் காட்சி[illegible]ய வாழ்க்கை மு[illegible] புராணக் கதைகள் [illegible]வை ஓவியத்துக்குரிய கருப்பொருள்களாகும்.



**சிறப்பு**

**ஓவியங்களில், 'நிற்றல், இருத்தல், கிடத்தல்' ஆகிய மனித** இயல்புகளையும், 'வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை' முதலான மெய்ப்பாடுகளையும், 'உத்தமம், மத்திமம், அதமம் மற்றும் தசதாளம், நவதாளம், பஞ்சதாளம்' முதலான அளவுகளையும் வலியுறுத்துவது தமிழருக்குரிய ஓவிய மரபுகளாக விளங்குகின்றன. சங்க காலத்தில் செழித்திருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்து போகத் தொடங்கியது. மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு புத்துயிர் ஊட்டியவர்கள் பல்லவ மன்னர்கள் எனலாம்.

**'விஷன்' ஓவியப் பொருள்களின் காட்சிப்படுத்தல்**

இந்தநிலையில் மாணவர்கள் ஊடாக ஓவியத்தின் மகத்துவத்தை வெளிக்கொணர தென்மராட்சி கல்வி வலயத்தினர் மேற்கொண்ட முயற்சியின் சிறத்தலாக 'விஷன்' ஓவியப் பொருள்களின் காட்சிப்படுத்தலைக் குறிப்பிடலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்த[illegible]சிவம் தலைமையில் இடம்பெற்ற இ[illegible] நிகழ்வில் முதன்மை விருந்தினராக [illegible] மாகாண கல்வி பண்பாட்டலுவல்க[illegible] விளையாட்டுத்துறை மற்றும் இளை[illegible] விவகார அமைச்சின் செயலாளர் சி.[illegible]யசீலன், சிறப்பு விருந்தினராக தென்[illegible]ராட்சி அபிவிருத்திக் கழக கண்டாக் கிளையின் தலைவர் [illegible]ரேந்திரன், மதிப்[illegible] விருந்தினராக [illegible] தேசிய க[illegible] நிறுவக நட[illegible] செயற்றிட்ட அ[illegible] திருமதி நி.திரு[illegible] ஆகியோர் க[illegible] கொண்டனர்.

**[illegible]துணை**

ஆம், கல்விப் பணிப்பாளர் சு.கிரு[illegible]குமார், தென்மராட்சி கல்வி வல[illegible] யல் பாட உதவிக் கல்விப் பணிப்பா[illegible] கைலாயநாதன், வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரின் உறுதுணையோடு





மாணவர்களின் ஓவியத் திறமைகள், சாவகச்சேரி தேவாலய சாலையில் அமைந்துள்ள அமரர் ஹண்ட் நினைவு ஓவியக் கூட காட்சி வெளியில் தனித்துவம் பெற்றிருந்தமை அற்புதம்.

இங்கு தெரிவுக் குழுவின் தேர்வுநிலை அடிப்படையில் 96 மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மாணவர்களுக்கும் பயிற்சிகளை வழங்கினால் எமது பிரதேசம் சார்ந்து சிறந்த ஓவியக் கலைஞர்களை உருவாக்க முடியும் என்பதை இதனூடு உணர்ந்துகொள்ள முடிந்தது.



**கலைகளைப் போற்றுதல் செய்வோம்**

ஆம். ஒரு நாட்டில் மக்களால் பேசப்படும் மொழி வளமை, விருந்தோம்பல் பாங்கு, கலைவளம் ஆகியவற்றை வைத்தே அந்த நாட்டின் பண்பாட்டை அளவிட இயலும். ஏனெனில் மொழி, விருந்தோம்பல், கலை என்பவை மனித சமூகத்தின் பரிணாம வளர்ச்சியின் உயிர் நாடியாக இருந்து வந்துள்ளன என்பதை வரலாற்றுப்பதிவுகள் நமக்கு உணர்த்துகின்றன. ஒரு இனத்தையும், அங்கு இனத்தின் அடையாளங்களையும் அழித்து விட வேண்டுமெனில், அந்த இனத்தின் மீது குருதியை உறைய வைக்கும் அணுகுண்டுகளை வீசத் தேவையில்லை.

அந்த இனத்தின் மொழியை மட்டும் அழித்தால் போதும். அந்த இனம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் என்பர். அவ்வாறு ஒரு மொழி தன் ஆற்றலை இழக்கும்போது, அம் மொழி பேசும் மக்களின் கலைகள், கலாசார பதிவுகள், வாழ்க்கை அனுபவப் பதிவுகள் என்பவை கொஞ்சம் கொஞ்சமாக அழிவடைந்து போகும்.

ஆக, 'கலை' என்பது நாடு, மொழி, இனம், மதம் போன்ற அனைத்து எல்லைகளையும் கடந்தது எனபதை உணர்ந்து கொள்வோம். சாமானியர்களின் வாழ்வியலை வெகுஜன மக்களுக்கு தெரிவிக்கும் ஊடகமாக கலை வடிவங்கள் திகழ்வதை ஏற்றுப் பணி செய்வோம்.

'தமிழன் என்றோர் இனமுண்டு; கலைகள் பல அவனிடமுண்டு."




# அமைதிக்கான வரங்கள் சமாதிகளிலும் உள்ளன

கே.எஸ்.சிவஞானராஜா

கீரிமலையிலே மனித சாம்ராஜ்ஜியத்துக்கு வேண்டிய அத்தனை வரங்களும் உண்டு. என்ன அங்கு இல்லை? எல்லாமே உண்டு. மூர்த்தி உண்டு, முத்தியுண்டு. கீர்த்தி உண்டு, கிராமமுண்டு. தலம் உண்டு. தாங்குமிடமுண்டு. தீர்த்தமுண்டு. தீர்த்த ஊற்றுமுண்டு. திக்கற்றவர்க்கு வாழ்வுண்டு. வரமும் உண்டு. எப்படியெனில் திசையுக்கிர சோழனின் மகளான பேரழகி மாருதப்புரவீக வல்லியின் குதிரைமுகம் நீங்கிய விசேடம் மிக்க தீர்த்தம் கீரிமலையிலேதான் ஊற்றெடுக்கிறது. கடல் என்பது விளையாட்டுக்குரிய இடமாக மாறிவிட்டமை பலபெண்ணிடமனம் வருந்துகிறது. இலங்கையிலே அதிஉயரமான கோபுரம் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திலே தான் காணப்படுகிறது. அதன் உயரம் 117 அடிகளாகும். ஒரு கோபுரம் கட்டி 12 வருடம் வரை அதனது வரங்களுக்காக நாம் பொறுத்திருக்க வேண்டும். மேற்படி கோபுரம் ஐயப்பையக் கட்டப்பட்ட கோபுரமாக இருப்பதனால், வரங்கள் ஏராளம் அதில் பொதிந்துள்ளன.

அதேபோல இலங்கையில் சமாதிகளும் வரமீகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண மண்ணில் ஏராளம் சமாதிகள் இருந்து அருள் சுரக்கின்றன. அவற்றில் ஈழத்துச் சித்தர்களின் சமாதிகள் கீரிமலைக் கடற்கரையோரம் எக்கச்சக்கமாக உள்ளன. 1621ஆம் ஆண்டு தொடக்கம், சமாதிகள் பல அழிந்தொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. கீரிமலைத் தீர்த்தக் கரையில், குழந்தைவேல் சுவாமிகள் சமாதிச்சிவாலயம், அருளம்பலம் சுவாமிகள் சித்தர் சமாதி, ஈழத்துச் சித்தர் பீட சிவாலயம் ஆகியவை மகா முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக அருளும் வரமும் சுரக்கின்றன. யாரும் எவரும் அங்கு சென்று வரம்பெற முடியும். அதனோடு மத்தியில் சைவ அறப்பணி மையம் 2016ஆம் ஆண்டு முதல் இயங்க வைக்கப்பட்டுள்ளது. முன்பாக அண்ணாந்து பார்க்க வைக்கும் ஒரு சிவலிங்கம் கண்களை ஈர்த்துக் கொள்கிறது.







மேலும் சிறாப்பர் மடத்திற்கும் முற்பட்ட ஒரு பாழடைந்த வீடு ஒன்று காணப்படுகிறது. குனிந்து செல்லக்கூடிய தலைவாசலும், கண்டகல்லு மதிலும், மூதாதையரின் இருப்பிடங்களும் நெஞ்சுக்கு நீதியும், உறுதியும், ஊக்கமும் பயக்கின்றன. சிறாப்பர் மடமும், மேற்படி சமாதிச் சூழலும், ஆய்வுக்கு உரியவை.

மேலும், சமாதிக்குத் தெற்குப் பக்கத்தில் ஒரு பூர்வீக வீடுண்டு. அந்த வீட்டின் விமான முகப்பில் இலங்கையில் எங்குமேயில்லாத ஒரு அழகான அலங்கார பீடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கம் சிங்கம்; ஒரு பக்கம் குதிரை. கீழ்ப்பக்கம் குதிரை. பூக்கள் 24. ஒரு பாவையின் குடும்பம். தூண்கள் எல்லாமே கலைநயம் சொட்டக்கூடியவை. அற்புத வரங்கள் இவையாகும். கீரிமலைச் சமாதிகள் சும்மாவல்ல! சௌபாக்கியங்களைத் தரக்கூடியவை. கதிரைகளில் இருந்தால் இவை எப்படிக் கண்ணுக்குப் புலப்படும்?


மன்னார் திருக்கேதீஸ்வரத்தில்

# மனோலயமான கலாசார மண்டபம்

கே.எஸ்.சிவஞானராஜா

கரிய நிறம்கொண்ட வரிய சிறை வண்டு யாழ் செய்யும்மாதோட்டநன்னகரில், அரியபொக்கிசங்கள்விளைந்துகிடக்கின்றன. உலகத்தவர்களே சங்கமமாகி ஒற்றுமையையும் ஒப்புரவையும் உவப்பாகி தவமாக்கி வைத்த இடம் மாதோட்டம். அப்பனும் அம்மையும் மகிழ்ந்துறையும் பதி மாதோட்டம் ஆகும். புராதன வரலாறுடையஅந்தப்பதியிலேபெரியதிரை எறிந்துவருகின்றசுனைபாலாவியாகும். வையம்மலிகின்றகடல்சூழ்ந்து பங்கமிலா வங்கம் பொலிகின்ற கடலை உரிமையாக்கும் மாதோட்டமே பாலாவியால் வரங்களாக்கப்பட்டிருக்கின்றன. அப்பனும்அம்மையும் தீர்த்தமாடியதும், தீர்த்தமாடி வருகின்றதுமான பாலாவியில், யாரொருவர் தீர்த்தமாடினாலும் நோய் நொடிகள் பறந்து போய்விடும். பாலாவியில்பல அற்புதங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. அதனால் உலகெங்கணுமிருந்து பல அடியவர்கள் மன்னாரை நோக்கி வந்தவண்ணம் உள்ளனர். சுந்தரர்பாடியது சும்மாவல்ல. நிஜமே.

*அங்கத்துறு நோய்கள்*
*அடியார்மேல் ஒழித்தருளி*
*லங்கம் மலிகின்ற கடல்*
*மாதோட்ட நன்னகரில்*
*பங்கம் செய்த மடவாளொடு*
*பாலாவியின் கரைமேல்*
*தெங்கம் பொழில் சூழ்ந்த*
*திருக்கேதீச்சரத்தானே!*

இந்தப்பதியிலேஅடியவர்களின்வழிபாடுகருதியும்அம்மையப்பனின் திருவருட்பேற்றினை அனுபவிக்கக் கருதியும் பல மடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மடங்கள்பெரும்பாலும்அன்னதானம்வழங்குவதிலும், ஆறுதல் பெருக்குவதிலும் பேருதவி புரிகின்றன. குறிப்பாகச்சிவராத்திரிகாலத்திலும், மகோற்சவகாலத்திலும், பிரதோஷவிதரம், வெள்ளிக்கிழமைவிரதம், தேவிவிரத காலங்களிலும் மடங்களின் பங்களிப்புக்கள் மிகவும் இன்றியமையாததாகவேண்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் "அம்மை அப்பன்" இல்லம் எனப் போற்றப்படும்நேர்த்தியானஇடமாகும். இதனைமுழுமனதோடு, முழுநேரமும் நிருவகிப்பவர்திருமதி. சி. வல்லிபுரம் அம்மையார்ஆவார். இவர்ஒருவிஞ்ஞானப்பட்டதாரியாவார்.

இந்தஇல்லத்தோடுநெருக்கமாகக்கட்டப்பட்டதே, கவின் தருபேறுகொண்டகலாசாரமண்டபமாகும். பலஇலட்சம் ரூபா செலவில் வசதியான அறைகளோடும், மேல்மாடியிலே இருக்கை வசதிகளுடன் கூடிய அரங்க மேடையோடும்கட்டப்பட்டுள்ளது. அற்புதமான ஒருமண்டபம். ஆனந்தமயமான அரங்கம்.

## நோக்கம்

கௌரிஅம்பாள்சமேதகேதீஸ்வரப்பெருமானைமுதன்மையாகக்கொண்டு, அவர்களைப்போற்றும்விதமாக, பண்ணிசை, கர்நாடகசங்கீதம், நடனம், புராணபடனம், நாயன்மார் குருபூசைகள், சிவராத்திரி, நவராத்திரி, பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு, உபந்நியாசம், கதாப்பிரசங்கம், போட்டிகள், சைவசமயக்கலந்துரையாடல்கள், யோகா தியான வகுப்புக்கள், ஆற்றுப்படுத்தல், மகாநாடு, திருமுறைமுற்றோதல், திருவாசகம் முற்றோதல், நாடக ஆற்றுகைகள், சஞ்சிகை வெளியீடு போன்ற சைவசமயம் சார்ந்த பேறாகும். அனைத்து நிகழ்வுகளையும்உள்வாங்கும்ஒருஅரங்கேற்றவாய்ப்புக்குத் தளமிடுவதே குறிக்கோளாகும். இதனை அம்மை அப்பன் நிறைவேற்றி வைப்பார். வண்டு பண்செய்வது எதற்காக? சுந்தரரும்சம்பந்தரும் தேவாரப்பதிகம்பாடியதிருத்தலத்தில்கலைகலாசார மண்டபம் வரப்பிரசாதமாக அமைவது மன்னாரில் சிவமய சம்பத்துக்கள் பெருகுவதற்கு வாய்ப்பாகஅமையும்என்பதுதிண்ணமேயாகும். அம்மை அப்பனின் அருட்பெருந்தகையான நிறுவுனர் திருமதி. சி. வல்லிபுரம் அம்மாவின் பணி மென்மேலும் வளர்வதாக பன்மடங்கு பெருகுவதாக.

## நிகழ்வுகள்

மன்னாரில் முன்பு கடமையாற்றிய ஓய்வு பெற்ற மாவட்டச்செயலர் வே. விசுவலிங்கம் திறப்பு விழா நிகழ்வுக்குத் தலைமையேற்று, அன்றைய பொழுதினைச் சிறப்பாக அலங்கரித்து மகிழ்வித்தார்.

இவர்மாவட்டச்செயலராகஇருந்தபோதுதான்திருக்கேதீஸ்வரச் சூழலில் சைவக்குடும்பங்கள் பெருமளவில் குடியமர்த்தப்பட்டன. காணிகளும் வீடுகளும் வசதிகளும், பாடசாலை, மருத்துவ, மின்சார வசதிகளும், பலநோக்குக்கூட்டுறவுச் சங்க, கிராமிய பொருளாதார வசதிகளும் படிப்படியாக செய்து கொடுப்பட்டன. இப்பொழுது தங்கம் பொழில் சூழ்ந்த திருமாடங்களாக வீடுகள் காட்சிதருகின்றன. இந்த ஊருக்கு "விஸ்வ கிராமம்" என்றேஉண்மையில்பெயர் சூட்டி மகிழ்ந்திருக்க வேண்டும். ஆனால் சிவன் காரியங்கள் எதுவும் மனிதனின் உரிமையாவதில்லை.

வே. விசுவலிங்கம் ஐயாவும் தனது பெயரை ஒரு போதும் பெருப்பிக்கவோ, பொறிப்பிக்கவோ விரும்பியதில்லை. புகழையும் சொந்தமாக்குவதில்லை. அவர் அம்மை அப்பனின் இல்லத் தலைவராக விளங்குவதனால், இல்லம் அன்றும் இன்றும் மிகவும் தூய கரங்களோடு சேவையாற்றி வருகிறது.

நாற்சார்வீடுபோன்றமேற்படி இல்ல நடுவே அழகான ஒரு தாமரை, நீலோற்பலம்தொட்டியில் குஞ்சு மீன்கள் எல்லோரையும்இன்முகம்காட்டி வரவேற்கின்றன. அதைவிடத்தாய்மனங்கொண்டவல்லிபுரம் அம்மா வாருங்கள் என வரவேற்கின்றார்.

இருமருங்கும் ஆண் பெண் பாலாருக்குரிய இரண்டு பெரிய தங்குமிடங்கள் இதற்முப் புறம்பாகத் தெற்கில் குளிரூட்டப்பட்டஅறைகளும், சாதாரணஅறைகளுமாக ஒரு தொகுதி தங்குமிட வசதிகள் அடியார்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன. இதனருகே "ரமண மகரிஷி" தியான மண்டபம்காட்சிதருகிறது. அமைதியேவாலயமாகிறது. மேலும் இதைவிடப் பிரமாண்டமாக, தங்குமிடச்சிறப்பு வசதிகளோடு, கூடிய கவினுறு கலாசார மண்டபமே கடந்த 18ஆம் திகதி காலையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதனை தலைமை விருந்தினராகக்கலந்துகொண்டுசிறப்பித்ததுர்க்காதேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் திறந்துவைத்தார். திருக்கேதீஸ்வரத்தின் பெருமைகளையும், அம்மை அப்பன் இல்லப் பெறுமதியையும், திருமதி வல்லிபுரம் அம்மாவின் பேரருட்பணிகளையும் எடுத்தியம்பி, பெரியபுராணத்தொகுதிநூல்களின்முழுமையானபொக்கிஷத்தை அன்பளிப்புச்செய்தார்.

தொடர்ந்துதிருக்கேதீஸ்வரம்சிவன்அருள்இல்லமாணவர்களின்பண்ணிசைநிகழ்வுநெஞ்சைக்கனிந்துருகிக் கசியச் செய்தது. இலங்கையில் பெறுமதியான பேறுகளை ஈட்டி வரும் இல்லங்களில் அதுவும் மன்னாரில் இதுஉயர்ந்துநிற்கிறது. பல்கலைக்கழகமாணவர்களில் இங்கிருந்தும் வருடாவருடம் தெரிவாகி வருவது கௌரிஅம்பாள் அ. த. க. பாடசாலையின் அயராத முயற்சியினால் என்பது பதிவாகிறது.

அருளுரைவழங்கிய, நுவரெலியாகல்விவலயஉதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிர்மலா பத்மநாதன், கடுமையாகஇருந்ததனதுநோயைநீக்கியபாலாவித்தீர்த்த மகிமையை எடுத்தியம்பி திருக்கேதீஸ்வரம் வைத்தியநாதரைக் கண்ணீர் மல்கக் கரங்குவித்து சபையோருக்கு வரமாக்கினார். மகரகமவுக்குப் போகவேண்டிய நோய் மன்னார் மாதோட்டத்தில் கரைந்தது. என்னே அற்புதம்இறைபக்திதந்தவாழ்வியல்அதுவே. தொடர்ந்து நாடறிந்தகதாப்பிரசங்கக்கலைஞர்புலவர்திரு. சின்னத்தம்பிஸ்ரீதயாளன், பெரியபுராணமும்அடியார்பெருமையும்எனும்தலைப்பில், நீண்டதொருகதாப்பிரசங்கத்தை நிகழ்த்தி மண்டபத்தை மாண்புறச்செய்தார். கதாப்பிரசங்கமரபினைத்தொடர்ந்துகாப்பாற்றுவதில்ஸ்ரீதயாளனின் பாணி இன்பம் பயப்பதாய் அமைந்திருந்தது. நிறைவாக கே. எஸ். சிவஞானராஜாவின் இசை நிகழ்வு எதிர்கால நிகழ்வுகளுக்குப் பல்லவி போல அமைந்திருந்தது.

மட்டுநகர்இசைவிரிவுரையாளர்செல்விசரஸ்வதிசுப்பிரமணியத்தினதுவயலின்இசையும், அன்புச்சிவமைந்தர்களின்மிருதங்கஇசையும்அன்றையநிகழ்வுகளுக்கு இரம்மியம் சேர்த்தன. மின்சாரம் இல்லாத போதும் மண்டபம் சோபையை இழக்கவில்லை. பலே!

இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் பல பிரமுகர்கள்வந்திருந்தமைவிழாவுக்குப்பெருமையளித்தது. இல்லச்செயலாளரானதிரு. க. இராசரத்தினம்ஐயாவின் நன்றியுபகாரம் கலாசார மண்டபத்தின் தாற்பாரியத்தைப் பதிவாக்கியது. விழா இனிதே நிறைவேறியது. அடுத்தநிகழ்வுஎப்போது? ஆவலோடுஎதிர்பார்க்கலாம்!

> இந்தப் பதியிலே அடியவர்களின் வழிபாடு கருதியும்அம்மையப்பனின்திருவருட்பேற்றினை அனுபவிக்கக்கருதியும்பலமடங்கள்உருவாக்கப்பட்டுள்ளன. இம்மடங்கள் பெரும்பாலும் அன்னதானம் வழங்குவதிலும், ஆறுதல் பெருக்குவதிலும்பேருதவிபுரிகின்றன. குறிப்பாகச்சிவராத்திரி காலத்திலும், மகோற்சவகாலத்திலும், பிரதோஷவிதரம், வெள்ளிக்கிழமை விரதம், தேவி விரத காலங்களிலும் மடங்களின் பங்களிப்புக்கள் மிகவும்இன்றியமையாததாகவேண்டப்படுகின்றன. அவற்றுள்ஒன்றுதான் "அம்மை அப்பன்" இல்லம் எனப் போற்றப்படும் நேர்த்தியான இடமாகும்.



# தியாகத் திருநாள்

மவுலவி அ. செய்யது அலி மஸ்லஹி



# ஹஜ்

> குர்பானி என்றால் அறுத்துக் கொடுத்தல் அல்லது பலியிடல் என்று பொருள் படுகிறது. தொழுகைக்கு பின்புதான் ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால் நடைகளை அவரவர் வசதிக்கேற்ப குர்பானி கொடுக்க வேண்டும்.

இஸ்லாமியப்பண்டிகைகள்என்பவைகொண்டாடுவோருக்குமட்டும் அல்ல மகிழ்ச்சி. அவர்களைச் சுற்றியிருப்போருக்கும் மகிழ்ச்சியே. இதுதான் இஸ்லாமியப்பண்டிகைகளின் எழுச்சி.

### ஹஜ்ஜின் மகத்துவம்

அரபி மாதங்களில் பனிரெண்டாவது மாதம் துல்ஹஜ் ஆகும். இந்த மாதத்தின் பொருள் 'ஹஜ் செய்யும் மாதம்' என்பதாகும். இந்த மாதத்தின் ஒன்பதாம் நாள் 'அரபா தினம்' ஆகும். இந்தநாளில்நோன்பு இருப்பது சிறப்பு வாய்ந்ததாகும். அரபா நாளின் நோன்பு குறித்து நபியிடம் (ஸல்) கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்)"அதுகடந்துபோனஓராண்டு, மற்றும்எதிர்வரும்ஓராண்டுஆகியவற்றில் நிகழ்ந்த நிகழ்கின்ற நிகழப்போகின்றசிறுபாவங்களுக்குப்பரிகாரமாக அமையும்" எனத்தெரிவித்தார்.

இஸ்லாமியர்களின் பெருநாள்கள் இரண்டு. முதலாவது நோன்புப் பெருநாள். இரண்டாவது ஹஜ் பெருநாள். ரமழான் மாதம் முப்பது நாள்கள் நோன்பிருந்த பிறகு கொண்டாடப்படுவது நோன்புப் பெருநாள் ஆகும்.

துல்ஹஜ் மாதம் பிறை ஒன்றிலிருந்து பத்து நாள்கள் வரை ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்றிய பிறகு கொண்டாடப்படுவதுஹஜ்பெருநாள்ஆகும். ஹஜ்பெருநாள்'ஈதுல்அள்ஹா' (தியாகத் திருநாள்) என்று அரபியிலும், பக்ரீத் பண்டிகை (ஆட்டைப் பலியிடுதல்) என்று உருது மொழியிலும் அழைக்கப்படுகிறது.



### தியாகத்தின் தினம்

இறைவனின் கட்டளையை ஏற்று, இப்ராகிம் (அலை) தனதுஅன்புமகனைப்பலியிடத்துணிந்தஒப்பற்றதியாகத்தைநினைவுகூரும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் துல்ஹஜ் மாதம் பிறை பத்தாம் நாளன்று தியாகத் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஹஜ் செய்யும் ஹாஜிகள் தங்களது புனிதப் பயணத்தின் கடமைகளில் இறுதியாக நிறைவேற்றும் காரியம் இறைவனுக்காக கால்நடைகளில் ஏதேனும் ஒன்றைப் பலியிடுவதாகும். இது நடைபெறும் தினம் துல்ஹஜ் 10ஆம் நாளாகும். ஹஜ் பயணம் மேற்கொள்ளாதவர்களில் வசதி வாய்ப்பைப் பெற்றுக்கொண்டவர்களும்தங்களின் இல்லங்களில் பெருநாள் தினம் அன்று கால்நடைகளில் ஒன்றை இறைவனுக்காகப் பலியிடுவார்கள்.

தியாகத் திருநாள் அன்று முஸ் லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய அம்சம் சிறப்புத்தொழுகை மற்றும் குர்பானி கொடுத்தல் ஆகும். குர்பானி என்றால் அறுத்துக் கொடுத்தல் அல்லது பலியிடல் என்று பொருள் படுகிறது. தொழுகைக்குபின்புதான் ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற கால்நடைகளை அவரவர் வசதிக்கேற்ப குர்பானி கொடுக்கவேண்டும்.

"தொழுகைக்கு முன்பே குர்பானிப் பிராணியை அறுப்பவர் தமக்காகவே அதை அறுக்கிறார். தொழுகைக்குப் பிறகு அதை அறுப்பவரின் வழிபாடு முழுமையடைந்து விட்டது. அவர் முஸ்லிம்களின் வழிமுறையைப் பின்பற்றிவிட்டார்" என நபி தெரிவித்தார். "எனவே உமது இறைவனைத் தொழுது, அவனுக்காக அறுப்பீராக" என்பது திருக்குர்ஆன் (108:2) வசனமாகும்.

இதன்மூலம், பெருநாள் தொழுகைக்குப் பிறகுதான் குர்பானி கொடுக்க வேண்டும் என்பது திருக்குர்ஆன் வசனத்திலிருந்தும், நபிமொழியிலிருந்தும் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. பெருநாள் தினத்தன்று குர்பானி கொடுப்பதைவிடச் சிறந்ததொரு காரியம் வேறெதுவும் கிடையாது என்றும் நம்பப்படுகிறது.

### பகிர்தலுக்கும் முதன்மை

குர்பானி கொடுக்கப்படும் கால்நடைகளின்மாமிசங்களைஏழைஎளியோருக்கும், அண்டை வீட்டாருக்கும், சொந்த பந்தங்களுக்கும் பங்கீடு செய்து வழங்கிட வேண்டும். குர்பானியின் மாமிசங்களை மதம் கடந்து அனைத்து ஏழை எளியோருக்கும், தேவையுடையவசதி படைத்தோருக்கும் வழங்கலாம். இது திருக்குர்ஆன் வழிகாட்டும் நெறிமுறை. நபிவழியின் வழிமுறை.

*'அதிலிருந்து நீங்களும் உண்ணுங்கள். கஷ்டப்படும் ஏழைகளுக்கும் உண்ணக் கொடுங்கள்' (திருக்குர்ஆன் 22:28)*


*'அவற்றிலிருந்து நீங்களும் உண்ணுங்கள். (வறுமையிலும் கையேந்தாமல் இருப்பதைக் கொண்டு) திருப்தியாய் இருப்போருக்கும், இரப்போருக்கும் உண்ணக்கொடுங்கள்' (திருக்குர்ஆன் 22:36)*

மாமிசங்களைமட்டுமல்ல,அவற்றின்தோல்களையும், அவற்றின் கடிவாளங்களையும் ஏழைகளுக்கு தானமாக வழங்கிட வேண்டும். அறுத்து, தோலுரிப்பவர்களுக்கு தோல்களை கூலியாக வழங்கக்கூடாது. அதன் மாமிசங்களையும் கூலியாக வழங்கக்கூடாது. கட்டிட நிதிக்காகவோ, மராமத்து பணிக்காகவோ, இறையில்லப் பணியாளர்களின் ஊதியமாகவோ அவற்றின் தோல்களின் நிதியை பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு பயன்படுத்தினால் அது குர்பானியாக இறைவனிடம் ஏற்றுக்கொள்ளப்படாது. அது வெறும் மாமிசங்களுக்காக மட்டுமே அறுக்கப்பட்டவைகளாக ஆகிவிடும்.


### குர்பானியும் நபியும்

"நபி (ஸல்) தமது இறுதி ஹஜ்ஜில் நூறு ஒட்டகங்களைக் குர்பானிகொடுத்தார்கள். அவற்றில் 63 ஒட்டகங்களை தமது திருக்கரத்தால் அறுத்தார்கள். பிறகு அவற்றின் தோல்களையும், மாமிசங்களையும், கடிவாளங்களையும் ஏழைகளுக்கு பங்கீடு செய்யும்படி என்னை நபியவர்கள் வேண்ட, நானும் அவ்வாறு செய்தேன்" என்கிறார் அறிவிப்பாளர் திர்மிதி.

"யாரிடம் அவர் அறுப்பதற்கான குர்பானிப் பிராணி இருந்து, துல்ஹஜ் பிறை காணப்பட்டு விட்டால், அவர் குர்பானிகொடுக்காதவரைதமதுதலைமுடிகளையோ, நகங்களையோ சிறிதும் வெட்ட வேண்டாம்" என நபி (ஸல்) தெரிவித்தார்.



தியாயகத்திருநாளின் மகிழ்ச்சியான கொண்டாட்டம் உலக முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அனைத்து ஏழை எளியோருக்கும் பொருந்தும். ஏழைகளின் நிலை அறிந்து, அவர்களின்வலிஉணர்ந்து, அவர்களையும்நலமாகவும், வளமாகவும் வாழ வழி வகுப்பதுதான் இஸ்லாமியப் பண்டிகைகளின் முதன்மையான நோக்கம். இஸ்லாமியப் பண்டிகை என்பது கொண்டாடுவோருக்கு மட்டும் அல்ல மகிழ்ச்சி. அவர்களைசுற்றியிருப்போருக்கும்மகிழ்ச்சியே. இதுதான் இஸ்லாமியப்பண்டிகைகளின் எழுச்சி.



# 'கருணாநிதி'

## தமிழ் மொழியை செம்மொழியாக்கிய முதுசம்

எம்.எஸ்.எம்.ஸாகிர்

**பிறப்பு**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகே அமைந்துள்ள திருக்குவளை எனும் அழகிய கிராமத்தில், தட்சணா மூர்த்தி எனும் இயற்பெயரொடு கருணாநிதியின் திவ்யமான ஜனனம் 1924 ஆண்டு ஜூன் மாதம் 03ஆம் திகதி நிகழ்ந்தது. இவருடைய தந்தையார் முத்துவேலன். தாயார் அஞ்சுகம்.

**கலைத்துவம்**

இவர் பள்ளிப் பருவத்திலேயே முத்தமிழ் வித்தகராகத் திகழ்ந்தார் கருணாநிதி. 1941ஆம் ஆண்டு 'மாணவன் நேஷன்' என்ற மாத இதழின் ஆசிரியராக எழுத்துலகில் நுழைந்தார். சிறந்த ஆளுமையாக எழுத்துக்களை காதலித்தார். வார்த்தைகளுள் நயமாய் இலக்கணம் புரிந்தார். ஓய்வின்றி எழுத்தோவியங்களில் சாதனைக் காவியங்கள் படைத்தார். தன் உடன்பிறப்புகளுக்கு கடிதம், எதிர்க்கட்சியினருக்குப் பதில் அறிக்கை என எப்போதும் எழுதிக் கொண்டே இருந்தார்.

அவர் எழுதிய 'உடன் பிறப்புக்கு கடிதம்' என்ற தொடர், தனித்துவம் வாய்ந்தது. குறிப்பாக, " தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர் உள்ளிட்ட ஆறு சரித்திர நாவல்கள், பத்துக்கும் மேற்பட்ட சமூக நாவல்கள், 'பழனியப்பன்', 'நச்சுக்கோப்பை', 'உதயசூரியன்', 'தூக்குமேடை' உட்பட 21 நாடகங்கள், 'அரும்பு', 'குப்பைத் தொட்டி', 'சாரப்பள்ளம் சாமுண்டி' உட்பட 37 சிறுகதைகள், 'தொல்காப்பியம், திருக்குறள்' போன்றவற்றுக்கு உரை" என எழுத்துத் துறை சார்ந்து வல்லமை சூடி ஆட்சி அதிகாரம் புரிந்தார். தவிர தன்னுடைய சுயசரிதையை 'நெஞ்சுக்கு நீதி' என்ற பெயரில் 6 பாகங்களாக எழுதியுள்ளார். 'இனியவை இருபது' என்ற பயணநூலையும் யாத்துள்ளார். கவிதை நூல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

**சிறப்பு**

முத்துவேல் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான 'தூக்குமேடை' நாடகத்தின் பால் ஈர்ப்புக் கொண்ட நடிகவேள் எம்.ஆர். ராதா, 'கலைஞர்' எனும் அடைமொழியை முதல் முதலில் வழங்கி கருணாநிதியை மதிப்புறுத்தினார். அதன்வழியே முத்தமிழ் அறிஞர், உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், தமிழ் இனக் காவலர் எனவும் பல பெயர்கொண்டு அழைக்கப்பட்டு வந்தார். ஆனால், 'கலைஞர்' என்று அழைக்கப்படுவதையே அவர் மிகவும் விரும்பினார்.

1942ஆம் ஆண்டு 'முரசொலி' என்ற மாத இதழைத் தொடங்கினார். அதில் 'சேரன்' என்றபுனைபெயரில், புரட்சிகரமான பல கருத்துகளுடன் கட்டுரைகள் எழுதினார்.

கதாசிரியர், வசனக்'ர்த்தா, தயாரிப்பாளர் என 75 படங்களில் பணியாற்றிய அனுபவத்தை உடைய கருணாநிதி, 1947 ஆம் ஆண்டு 'ராஜகுமாரி' திரைப்படம் தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வெளியான 'பொன்னர் சங்கர்' வரையாக, 64 ஆண்டுகள் திரைத்துறையில் கோலோச்சினார். 'பராசக்தி' திரைக் காவியத்தில் இவர் கையாண்ட பகுத்தறிவு வசனங்கள் புகழின் உச்சிக்கு இவரை இட்டுச் சென்றன.

**அரசியல் ஆளுமை**

இளவயதில் நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அழகிரிசாமியின் பேச்சுக்களைக் கேட்டு சமூக சிந்தனை கொண்டார். கம்யூனிஷ சித்தாந்தத்தில் ஆர்வம் காட்டி பின்னாளில் மாபெரும் திராவிட இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகத் திகழ்ந்தார். ஹிந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்களை ஒன்று திரட்டி அவ்வப்போது பேரணிகளை நடத்தினார். துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு அரசியலில் தீவிரத்தைக் காட்டினார். தமிழகத்தில் திராவிடர் இயக்க மாணவர் அணியை முதல் முதலாக ஆரம்பித்தார்.

தான் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றவர் என்ற சாதனைக்குரியவராக மகத்துவம் புரிகிறார். 1957ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்த கருணாநிதி, குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி கண்டார். சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வருகையை முதன்மைப்படுத்தியதுடன் தனது சட்டமன்ற வரலாற்றையும் ஆரம்பித்தார்.

1960 ஆம் ஆண்டு அதுவரை வெளிவந்த 'முரசொலி' மாத இதழை நாளிதழாக மாற்றினார். 1962 ஆம் ஆண்டு சட்டசபையில் தி.மு.க. துணைத் தலைவரானார். பின்பு தி.மு.க. வில் பொருளாளராகப் பதவியேற்றார்.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் மூலம் திமுக முதல் முறையாக தமிழக ஆட்சியில் பங்குபெற்றதுடன் அண்ணாதுரையின் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

1969 ஆம் ஆண்டு அண்ணாவின் மறைவுக்குப் பிறகு தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். பி.யு.சி வரை இலவச கல்வியைக் கொண்டு வந்தார். தி.மு.க.வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1971, 1989, 1996 மற்றும் 2006 ஆம் ஆண்டுகள் காலப்பகுதிகளில் தமிழகத்தின் முதல்வராகத் திகழ்ந்தார். தமிழகத்தை நீண்ட காலம் ஆட்சி அதிகாரம் செய்த பெருமையை கருணாநிதி தன தாக்கிக் கொண்டார். ஒரு கட்சியின் தலைவராக 50 ஆண்டு காலம் அரசியல் சமத்துவம் கண்டு சாதனை படைத்தார்.

> “1969 ஆம் ஆண்டு அண்ணாவின் மறைவுக்குப் பிறகு தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றார். பி.யு.சி வரை இலவச கல்வியைக் கொண்டு வந்தார். தி.மு.க.வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1971, 1989, 1996 மற்றும் 2006 ஆம் ஆண்டுகள் காலப்பகுதிகளில் தமிழகத்தின் முதல்வராகத் திகழ்ந்தார். தமிழகத்தை நீண்ட காலம் ஆட்சி அதிகாரம் செய்த பெருமையை கருணாநிதி தன தாக்கிக் கொண்டார். ஒரு கட்சியின் தலைவராக 50 ஆண்டு காலம் அரசியல் சமத்துவம் கண்டு சாதனை படைத்தார்.

"தெற்குத் தேய்கிறது. வடக்கு வாழ்கிறது" என்கிற முழக்கத்துடன் அரசியலுக்குள் நுழைந்த திமுக, காலப்போக்கில் மத்தியில் எவர் ஆட்சி புரிய வேண்டும் என்பதை நிர்ணயம் செய்தது. இதற்கு முன்னோடியாகவும் ஆரம்பகர்த்தாவாகவும் கருணாநிதி திகழ்ந்தார். வடக்குக்கு வழிகாட்டுபவராக அவரே இருந்தார்.

பிரதமர்களாக, "வி.பி.சிங், தேவ கௌடா, மன்மோகன் சிங் மற்றும் குடியரசுத் தலைவர்களாக வி.வி.கிரி, கே.ஆர்.நாராயணன்" உள்ளிட்டோரின் பதவிகளுக்கு காரணமாக இருந்தார். முதன்மை அமைச்சர் பதவியை அலங்கரிக்கக்கூடிய வாய்ப்பு ஒருமுறை கிடைத்தபோதும் 'என் உயரம் எனக்குத் தெரியும்' என்று அரசியல் சாணக்கியம் புரிந்தார். தேவ கௌடாவைப் பிரதமராக்கி னார்.

1957 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற 13 சட்டமன்றத் தேர்தல்களில் தோல்வியே காணாத கருணாநிதி, 2016 ஆம் ஆண்டு மாநிலத்தில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

**மொழிப்பற்று**

1987ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற 'உலகத் தமிழ் மாநாடு' தொடக்கம் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற 'செம்மொழி' மாநாடு வரை தமிழ்மொழி மீது அவர் கொண்ட பற்றுறுதிக்காக அவர் நடத்திக் காண்பித்த மாநாடுகள் ஏராளம்.

'நேரம் தவறாமை' கருணாநிதியின் முக்கிய பண்புகளில் ஒன்று. எந்தவொரு நிகழ்வுக்கும் குறித்த நேரத்துக்கு முன்பே வந்துவிடுவார். இவை தவிர தனது 92 ஆவது வயதிலும் 'ராமானுஜர்' என்ற தொலைக்காட்சித் தொடருக்குரிய எழுத்துருவாக்கத்தை எழுதினார். 'நீண்ட தூரம் ஓடினால்தான், அதிக தூரத்தை தாண்ட முடியும்' என்பது கலைஞருக்கு பிடித்த மான பழமொழி.

ஆளும்கட்சியில் இருந்த காலத்தைவிட எதிர்க்கட்சியில் இருந்தபோதுதான் அதிகம் உழைத்தார். பண்டிகை நாள்களில்கூட அறிவாலயத்தில் அமர்ந்து கட்சிப் பணிகளைப் பார்க்கக் கூடியவர். 'ஓயாமல் உழைத்த தொண்டன் இங்கு ஓய்வெடுக்கிறான்' என்ற வாசகமே தன்னுடைய கல்லறையில் எழுதப்பட வேண்டும் என்பதை முற்கூட்டியே தீர்க்க தரிசனமாக எழுதி வைத்தார்.

திமுகவின் பொதுக்கூட்டங்களை மாலை நேரப் பல்கலைக் கழகங்கள் என்று சுட்டுவார். அதில் முதன்மைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார். 'என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!' என்று அவர் ஆரம்பிக்கும் உரைகள் அத்தனையும் மக்களை அன்போடு கட்டிப்போட்டன.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை கண்டித்து சென்னையில் நடந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, இலங்கையில் நடந்த போரை தடுத்து நிறுத்தக் கோரி சென்னையில் உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டார்.

மதுரையில் இந்திராகாந்திக்கு கறுப்புக்கொடி காட்டிய போது நடந்த அசம்பாவிதங்களுக்காக குற்றம்சாட்டப்பட்ட அவர், 40 நாள் சென்னை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

**ஓயாமைக்கு ஓய்வு**

இவ்வாறு கலைஞர் கருணாநிதியின் வாழ்நாளில் ஏற்பட்ட சோதனைகள் அதிகமாக இருந்தபோதும் அவை கண்டு அஞ்சாது மன உறுதியோடு பயணித்தார். சாதனைகள் பல புரிந்து தமிழுக்கும், தன் இனத்துக்கும் அரிய பல சேவைகளைச் செய்தார். ஆம், மறைந்தாலும் மக்கள் மனங்களில் அவர் இன்றும் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார் என்பதில் ஐயமில்லை. கருணாநிதியின் இழப்பு தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, தமிழ் உலகுக்கே பேரிழப்பு!

# அட்சய பாத்திரம்

## பசிப்பிணி போக்கிடும் அருமருந்து

இராமபுரத்தூர் நிஷாந்தன்

அட்சய பாத்திரம் பற்றிய கருத்தாடல்கள் எம் இலக்கியங்களில் இழையோடிக் காணப்படுகின்றன. அட்சய பாத்திரம் என்றால் அள்ள அள்ள குறைவில்லாது உணவினைத் தரும் ஒரு தெய்வீகமான பாத்திரமாகும். இதை அமுத சுரபி எனவும் குறிப்பிடலாம். இந்த அட்சய பாத்திரம் துணை கொண்டு ஏழை எளியவர் பசியுற்றிருப்போர் என அனைவரது பசியினையும் போக்கிட முடியும். அவ்வாறு நம் இலக்கியங்கள் சுட்டிடும் அட்சய பாத்திரம் குறித்த செய்திகளைக் காணுறுவோம்.

**அட்சய பாத்திரம் உருவான வரலாறு**

ஒரு முறை உலகில் கடும் வறட்சி ஏற்படவே அதன் காரணமாக கடும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பசியால் வாடுவதைக் கண்ணுற்ற உலக நாயகியான பார்வதி, அன்ன ராணியாக அவதாரம் எடுத்தருளினாள். தன் அண்ணன் திருமால் அருளால் பெற்றுக் கொண்ட அட்சய பாத்திரத்தின் துணை கொண்டு மக்களின் பசிப்பிணியை தீர்த்தருளினாள். இதுவே அட்சய பாத்திரம் தோன்றிய கதையாடலாகும்.

**பாண்டவர் சூரியனிடம் அட்சய பாத்திரம் பெறுதல்**

மகாபாரதத்தில் பாண்டவர்கள் வனவாசம் செய்த கதையாடல் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு பாண்டவர் ஐவரும் தம் மனைவியுடன் வனவாசம் செய்கின்ற கால கட்டத்தில் அவர்களுடன் வனத்தில் மேலும் பலரும் வசித்திருந்தனர். அப்போது தம் அனைவருக்கும் வேண்டிய உணவினைப் பெறுவதற்கு பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன் நீருக்குள் இறங்கி ஆதித்ய ஹ்ருதயம் எனும் சூரிய மந்திரத்தை உச்சரித்து சூரியனை வழிபட்டான். அப்போது சூரிய தேவனும் அவர்கள் முன் காட்சியளித்து அட்சய பாத்திரத்தினை கொடுத்தருளினான். சூரியன் அளித்த அட்சய பாத்திரத்தை பெற்ற தருமன் அதை திரௌபதியிடம் கொடுக்கவே அன்றிலிருந்து பசியோடு வரும் எல்லோர்க்கும் அட்சய பாத்திரம் மூலம் உணவளித்து வந்தாள் திரௌபதி. இதில் ஒரு விடையம் ஒரு நாளில் எவ்வளவு வேண்டுமானாலும் அந்த பாத்திரத்தில் இருந்து உணவினை எடுத்திட முடியும். திரௌபதி அதில் உணவு உண்டபின் அதில் அன்றைய நாளில் உணவினை எடுத்திட முடியாது. பின் மறு நாளிலே தான் உணவினைப் பெற முடியும். இப்படியாக பாண்டவர்களது பன்னிரண்டு ஆண்டு கால வனவாசத்தின் போது அவர்களுக்கு உணவுத் தட்டுப்பாடு என்பது இல்லாமல் போனது.

**கண்ணன் அருள் பெற்ற அட்சய பாத்திரம்**

இப்படியாக இருக்கும் காலகட்டத்தில் ஒரு முறை துர்வாச முனிவர் தன் சீடர்கள் பலருடன் பாண்டவர்கள் வசிக்கின்ற காட்டுப் பகுதிக்கு வருகை தந்தார். துர்வாச முனிவரும் பாண்டவரிடம் தாம் நெடுந் தூரம் பயணம் செய்தமையால் களைப்படைந்திருக்கின்றோம். ஆகவே எம் அனைவருக்கும் உணவளிப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். நாம் சென்று நீராடி விட்டு வருகின்றோம் எனக் கூறியவாறு புறப்பட்டுச் சென்றார். ஆனால் அன்று எல்லோர்க்கும் உணவளித்து தானும் உணவினை உண்டு அட்சய பாத்திரத்தை கழுவியும் வைத்து விட்டாள் திரௌபதி. துர்வாச முனிவரின் வருகையை எதிர்பார்த்திடாத பாண்டவர்கள் இந்த சங்கடமான சூழ்நிலையில் தவிக்கின்ற





போது பாஞ்சாலி கண்ணனை நினைத்து வணங்கினாள். அந்தக் கணமே கண்ணன் அங்கு அவர்களை சந்திப்பதற்காக வருகை தருவதைப் போல அங்கு வந்தார். பாண்டவர்களும் திரௌபதியும் தம் நிலையினைக் கூறி நின்றனர். உடன் கண்ணனும் அட்சய பாத்திரத்தைக் கொண்டு வரும்படி கூறினார். அதன்படி திரௌபதியும் பாத்திரத்தைக் கொண்டு வந்து கண்ணனிடம் கொடுத்தாள். அதைப் பெற் கண்ணனும் அதில் ஒட்டியுள்ள ஒரு சோற்றுப் பருக்கை மற்றும் ஒரு கீரைத் துண்டு என்பவற்றை எடுத்து வாயில் இட்டு உண்டான். அந்தக்கணமே துர்வாச முனிவர் மற்றும் சீடர்களின் பசி நீங்கிச் சென்றது. பாண்டவரும் துர்வாசரின் கோபத்தில் இருந்து தப்பினார்.

**மணிமேகலை பெற்ற அட்சய பாத்திரம்**

கோவலன் மற்றும் மாதவிக்கு பிறந்த பிள்ளை மணிமேகலை. அவள் பெயரிலேயே உருவானது மணிமேகலை எனும் காப்பியம். அந்தக் காப்பியத்தில் கூட அட்சய பாத்திரம் பற்றிய கருத்தாடல் இழையோடுகின்றது. தீவதிலகை என்பவளின் அறிவுரைப்படி மணிமேகலைக்கு அமுத சுரபி எனும் அட்சயபாத்திரம் கிடைக்கப் பெறுகின்றது. அந்த அட்சய பாத்திரத்தில் உணவு சுரக்க வேண்டும் எனில் ஒரு பத்தினிப் பெண்ணிடம் முதல் பிச்சை வாங்க வேண்டும். அதன்படி மணிமேகலையும் ஆதிரை என்பாளிடம் பிச்சை வேண்டிடவே அதில் ஆதிரையும் பிச்சை இடவே அட்சய பாத்திரத்தில் உணவு சுரக்கத் தொடங்கியது. அன்றிலிருந்து ஆதரவு அற்றோர், வறியவர்கள், முதியவர்கள் என அனைவருக்கும் குறைவில்லாது உணவு அளித்து வந்தாள் மணிமேகலை. ஒரு கட்டத்தில் உதயகுமாரனுக்கு பயந்து காய சண்டிகை எனும் உருவில் சிறையில் இருக்கும் நிலை வந்த போதும் அங்கும் அவள் உணவளிக்கும் பணியைத் தொடர்கின்றாள். இதைக் கண்ணுற்ற சிறைக்காவலர்கள் அட்சய பாத்திரத்தின் பெருமை தனை பின்வருமாறு மன்னனிடம் எடுத்துரைத்தனர்.

**தெய்வம் தந்தது திப்பியம் ஆயது**
**யானைத் தீ நோய் அரும்பசி கெடுத்தது**
**ஊன் உடைய மாக்கட்கு உயிர் மருந்து இது**

இவ்வாறு தன்வாழ்நாள் முழுவதும் அட்சய பாத்திரம் துணை கொண்டு உணவளிக்கும் பணியை தொடர்ந்த மணிமேகலையின் தியாகம் போற்றத்தக்கதாகும். மேலும் அட்சய பாத்திரத்தின் மேன்மையும் பசிப் பிணியை போக்கிடும் உயரிய தன்மையினையும் நாம் வியப்பதற்குரியனவாகும்.

ஒரு முறை உலகில்
கடும் வறட்சி ஏற்படவே அதன்
காரணமாக கடும் பஞ்சம் ஏற்பட்டது.
மக்கள் பசியால் வாடுவதைக் கண்ணுற்ற
உலக நாயகியான பார்வதி அன்ன ராணி
யாக அவதாரம் எடுத்தருளினாள். தன் அண்
ணன் திருமால் அருளால் பெற்றுக்
கொண்ட அட்சய பாத்திரத்தின் துணை
கொண்டு மக்களின் பசிப்பிணியை
தீர்த்தருளினாள்.



## நல்லூர் கந்தன் 7 ஆம் நாள் திருவிழா

### நீமுலகின் நித்திலம்


காலைக் கதி ரொளியாய்
ஞாலமெலாம் ஒளி வீசி
ஞாலம் நனி சிறக்க
நல்லூரில் எழுந்தருளும்
கோலத் திரு வுருவே
கொழுகொம்பாய் நீயிருந்து
சீலம் சிறந் தொளிர்க்
கீர்த்தி தனை நீ தந்திடையா!

தத்தித் தவழ்ந்து வந்து
தாய்மடியி லேறி நின்று
நித்தம் அரு ளீயும்
நீ முலகின் நித்திலமே!
பித்துப் பிடித் துன்மேல்
பேயா யலை கின்றோம்
புத்தம் புது வாழ்வை
புதலத் துக் கீந்திடையா!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

# MODERN City Inn

WiFi Available




Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks

Comfortable Air Conditioned Rooms
with Attached Toilets and Hot & Cold Water
**Very Moderate Room Charges**
Single or Double Occupancy and Family Apartment
Wedding / Small Group Conferance All Kind of Parties
**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
For inquiries and Reservations
Contact No:- 031-2233967 / 031 2231 961 / 076 205 3302
moderncityinn@yahoo.com moderncityinn.com


## மரண அறிவித்தல்



மலர்வு 15 . 01 . 1941

உதிர்வு 20 . 08 . 2018

## இரத்தினம் உமாகாந்தன்

**(ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மபரிபாலன சபை தலைவர், முன்னாள் உரிமையாளர் பிரபல வர்த்தகர் புவனா றேடர்ஸ், சுன்னாகம்)**

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் உமாகாந்தன் 20.08.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - சற்குணம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் (ஆசிரியர்) - பராசக்தி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி காந்தன், கௌரிகாந்தன், ஸ்ரீகாந்தன் மற்றும் பாலசுப்பிரமணியம் நாகபூஷணி, உருக்குமணி காந்தன் (கனடா), கனகரத்தினம், மீனலோசனி, பாமகாந்தன் (கொழும்பு), தேவகாந்தன் (பொஸ்வானா), கமலகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உமாநந்தினி (பொஸ்வானா), சாந்தசொரூபினி (நோர்வே), விஜயபாரதி (நோர்வே), காலஞ்சென்ற ராதா மாதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகநாதன் (பொஸ்வானா), சிவசங்கரன் (நோர்வே), சிவகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயஸ்ரன் (கனடா), கிரிபுவனி (பொஸ்வானா), சுவர்னி, ஹருணி (நோர்வே), சின்மயி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஏழாலை மத்தி, உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொலைபேசி இல :- 021320 6795, 021320 2219
கைத்தொலைபேசி இல :- 076 247 5420 (சிவகுமார் - நோர்வே)


## ஆசிரியர் தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய், புத்தூர், கோப்பாய் ஆகிய இடங்களில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

077 468 2951, 077 700 9653

**CHEMISTRY வகுப்பு**
புதிய பாடத்திட்டம் 2019 2020 பழைய 2018 (மீட்டல்)
தனி/ குழு/ ரியூற்றறி வகுப்புக்கள்
தமிழ் / English மொழி மூலம்
சிங்கம் மாஸ்டர் - 077 773 0840

## காணி விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் வயற்காணியும், மானிப்பாய் இராஜகாரியர் வீதியில் தென்னந்தோட்டம் 8 ½ பரப்பும் விற்பனைக்குண்டு.

077 473 6739, 077 633 6853


## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

மறைவு 24 . 08 . 1988

திதி: துவாதசி

### திருமதி கனகம்மா சொக்கலிங்கம்

பார் போற்ற வாழ்ந்த பாங்கான அன்னையினர்
பக்குவமாய் பள்ளியிலே பண்போடு ஒழுக்கத்தையும்
கல்வியுடன் சேர்த்து ஊட்டி பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாக அரவணைத்து வழிகாட்டிய எங்கள் அம்மாவே
உங்கள் நினைவில் மிதக்கின்றோம் அம்மா!

என்றும் உங்கள் நினைவில்

மகன் : சொ.இந்திரராஜா (இந்திரன்),
மருமகள், பேரப்பிள்ளைகள்.

நெசவுசாலை வீதி,
வீமன் காமம், தெல்லிப்பழை.


SOS CHILDREN'S VILLAGES

## பதவிவெற்றிடங்கள்
## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

இலங்கை எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த,கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 134 சர்வதேச நாடுகளிலும் இலங்கையில் 37 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற சமூகசேவை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரச, மதசார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிவெற்றிடங்கள்**

1. குடும்பவலுவூட்ட திட்ட இணைப்பாளர் (35 வயதிற்கு உட்பட்டோர்) - மல்லாவி, யாழ்ப்பாணம்
2. சமையலாளர் - Cook (ஆண் 35 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்
3. சிற்றூழியர் - Labour (ஆண் 35 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்

**தகமைகள்**

**பதவி 1**

- சமூகப்பணி / சமூகவியல் (Diploma) கற்கைநெறிச்சான்றிதழினை அல்லது க.பொ.த உ/தர சித்தியுடன் கூடிய சமூகவியல் பணியில் முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- சமூகமொன்றில் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளஒருவர் சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.
- பதவிவெற்றிடம் மல்லாவி - வவுனியா,கிளிநொச்சி,முல்லைத்தீவுமாவட்டங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**பதவி 2**

- சமையல் வேலைகளில் அனுபவமுள்ள நற்பழக்க வழக்கம், பணிவு, தேக ஆரோக்கியமும் கொண்டவராக இருத்தல்.
- சாரதிஅனுமதிப்பத்திரத்தினைகொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

**பதவி 3**

- க.பொ.த சா/ தரத்துடன் நற்பழக்கவழக்கம், பணிவு, தேக ஆரோக்கியமும் கொண்டவராக இருத்தல்.
- சாரதி அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

இந் நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 31.08.2018 இற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:
எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,
இல:219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே: 021-2211101
077-3733711
மின்னஞ்சல்:jaffna@soscvsrilanka.org


World Class UK Degree @ICBT Jaffna Campus
EQAA
Apply now for New Intake 2018
ICBT HND IN BUSINESS MANAGEMENT
Finance/ Marketing/ Human Resource Management
TVEC REGISTERED
Duration
• Full Time: 18 Months (Mon-Fri)
• Part Time: 2 Years (Sat & Sun Evening)
Part Time Entry qualifications: GCE A/L + Work Experience
Cardiff Metropolitan University
BSc (Hons) BUSINESS MANAGEMENT
Offered by Cardiff Metropolitan University, UK
Duration
• 1 year
UGC
Entry Qualifications
• Higher National Diploma in Business Management or any other accepted programs.
Why Study ICBT ?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes
Week End Part Time Classes
0770 746 553 | 021 477 7888
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk


World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus
Apply Now For New Intake 2018
EQAA
ICBT DUAL HNDs Software Engineering + Computing
Duration 2 Years
Cardiff Metropolitan University
UGC RECOGNIZED
BSc (Hons) SOFTWARE ENGINEERING
Offered by Cardiff Metropolitan University, UK
Duration 1 year
Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.
Why Study ICBT ?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes
Week End Part Time Classes
A/L O/L + HND + BSc
DEGREE COMPLETION IN SRI LANKA
0770 746 553 | 021 477 7888
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk



ஈரவிழிகளுடன் 10ஆம் ஆண்டுகள்
திருமதி சிவகாமி மகாதேவன்
(ஓய்வு நிலை தபால் அதிபர், நயினை நாகபூஷணி அம்மன் அறங்காவலர்)
ஆண்டுகள் பத்து ஆனபோதிலும் - ஆறவில்லை அம்மா
உன் துயரம் உம் அன்பின் பிரிவால்
சோகத்தில் நாம் தவிக்கின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் ஆனபோதும்
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு
வெறிச் சோடிக் கிடக்கின்றது
நிம்மதி இன்றித் தவிக்கின்றோம்
உற்ற ஒரு துணையொன்று உம் ஆத்மா
எம்முடன் உடனிருந்து நல்லதொரு வழியைக்
காட்டுமம்மா - நீங்கள் எம்மை
கண்கள் இரண்டின் இமைகள்போல்
- காலமெல்லாம்
காத்திடுவீர் எம் குடும்ப விளக்கே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
மகன்: ம. சந்தியரூபன் குடும்பம்,
M.S.R. Accounting,M.S.R.House (UK)
சி.மகாதேவன்
அன்னை சிவகாமி அறக்கட்டளை, நயினாதீவு.
077 817 7706

## ஆரோக்கியமான கூந்தலுக்கு, ஆரம்பமாகும் புதிய எதிர்பார்ப்பு...



அழகு என்ற வார்த்தை. அனைவரையும் கவர்ந்ததொரு வார்த்தை யாகும். அதுபற்றி நம் அனைவரும் அறிந்ததே. எனவே தங்களிடம் உள்ள அழகினை மேலும் மெருகூட்டிக் கொள்வதற்காக பெரும்பாலானோர் அழகு சாதனப் பொருள்களைத் தேடியும். விலைக்கூடிய தயாரிப்புக்களைத் தேடியும் அலைகின்றனர்.

முகத்திற்கு நாம் செய்யும் அழகைப் போன்றே. கூந்தலின் அழகு பற்றியும் நம் மனம் சிந்திக்கும். அதனால் இன்று முதல் உங்களது கூந்தல் பற்றிய கவலை வேண்டாம். காரணம். கூந்தலை அழகுப் படுத்தும் நோக்கில் பல தயாரிப்புகளைப் பயன்படுத்தி ஏமாற்றமடைந்துள்ள உங்களது கரங்களுக்கு. கூந்தலுக்கான தரமான தயாரிப்புகளை Hesperus Marketing நிறுவனம் வழங்குகின்றது. அது பற்றிய சிறு விளக்கம் இதோ.

Good Look நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள இவ்வனைத்து தயாரிப்புகளின் ஊடாகவும் துரித செயற்பாட்டை காணமுடியும். அவற்றில் "Hair Spray ,'3 in 1 styling Mousse, Styling Gel" வகைகள். இயற்கை குணநலன்கள் நிரம்பிய ஒலிவ் எண்ணெய் வகைகள் போன்றே நொடியில் தலைமுடியை கருமையாக்கிடக் கூடிய Good Look Express ஆகிய ஏராளமான தயாரிப்புகள் உள்ளடங்கும்.

முக்கியமாக கூந்தலுக்கு தனித்துவம் வழங்குபவராக நீங்கள் இருப்பின். இவ்வனைத்து தயாரிப்புகளை உபயோகப்படுத்துவதன் ஊடாக அழகிய. ஆரோக்கியமான கூந்தலை நீங்களும் பெற்றுக் கொள்ள முடியும். கூந்தல் தொடர்பிலான சகல பிரச்சினைகளுக்கும் சிறந்ததொரு தீர்வை நிச்சயமாகப் பெற்றுக்கொள்ள முடியும். உண்மையில் இயற்கையான ஒலிவ் எண்ணெயைப் போன்றே விட்டமின் E குணநலன்களால் ஊட்டமளிக்கப்பட்ட இத்தயாரிப்புகளை உபயோகப்படுத்துவதனால் உங்கள் கூந்தல் நீளமாக, ஈரப்பதன் மிக்கதாக. பளபளப்பு கொண்டதாகவும் காணப்படும்.

உங்களது கூந்தல் பற்றிய கவலையை விட்டொழிக்க வந்த அற்புதத் தீர்வே Good Look தயாரிப்புகள். உபயோகித்து வித்தியாசத்தை உணர்ந்திடுங்கள்...

## உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சி நெறி
## Diploma Course in Counselling Psychology
## 2018 - 2019

சான்றிதழ் வழங்கும் நிறுவனம் :- அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம், கொல்வே, அயர்லாந்து

சான்றிதழின் பெறுமதி :- சர்வதேச அங்கீகாரம் கொண்டது

தனித்துவம் :- தமிழ்ப் பிரதேச உளசமூகப் பிரச்சினைகள் சார் பாடநெறி

காலம் :- ஒரு வருடம்

மொழி :- தமிழ்

தகைமை :- க.பொ.த.(உயர்தரம்) சித்தி

வயதெல்லை :- 20 - 40

விண்ணப்ப முடிவு திகதி :- புரட்டாதி 25, 2018

பாடநெறி தொடங்கும் திகதி :- ஐப்பசி 20, 2018

பாட நாள்களும் நேரமும் :- சனி, ஞாயிறு காலை 09.00 - மதியம் 02.00

தொடர்பு :- 077 476 6891, 076 702 9507, 021 222 2856

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
(M.Sc. Guidance & Counselling)
இயக்குநர்
அகவொளி:- குடும்பநல சேவை நிலையம்.
சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 23.07.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சின்னத்தம்பி நடராசா**

(நடா ரெக்ஸ்ரைல் - அச்சுவேலி)

தோற்றம் 18.06.1940 — மறைவு 23.07.2018

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.08.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பாங்குபற்றி உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

முத்துமாரி அம்மன் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.
077 007 0372

## நியத ஜய

சீட்டிழுப்பு வாரம் : 695 வர்ணம் : ஆரஞ்சு
திகதி 2018.08.21

வெற்றி இலக்கங்கள்: 17 49 52 61 — ஆங்கில எழுத்து: C

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,078,344/-

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 21.08.2018 | 2351 | நீலம் |

மகரம் — வெற்றி இலக்கங்கள்: 04 09 51 53

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ- 6, 709, 712/=

2018.08.22ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

Web: www.dlb.lk

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 845
சீட்டிழுப்பு திகதி 2018.08.20 திங்கட்கிழமை

J 53 65 67 73

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ- 49,142,828/-

தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## கோடிபதி சனிதா / KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 331
சீட்டிழுப்பு திகதி: 2018.08.21

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 91,558,653/-

D 13 20 51 65

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 349
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.08.21

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 62,140,780/-

வெற்றி இலக்கங்கள்: 26 45 55 75 — ஆங்கில எழுத்து: O

## நினைவுநாள் ஆராதனை அழைப்பு



கடந்த 15.07.2018 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது பாசமிகு குடும்பத்தலைவர்

**அமரர் பாஸ்டர் செல்லையா சிவஞானசோதி**

தோற்றம் 12.01.1946 — மறைவு 15.07.2018

அவர்களின் ஞாபகார்த்த ஆராதனை இன்று (22.08.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஞாபகார்த்த ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மடத்தடி கிழக்கு,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
021 227 0908
077 345 0685

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 10.02.1940 — இறப்பு 15.08.2016



**சண்முகம் சிவஞானம்**

திதி: 22.08.2018

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காதத எமது அப்பாவே!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா......
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வட கிழக்கு,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## ஜீவக வாத தைலம்

வேனும் மேம்படுத்தப்பட்ட
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம்®



- முதுகு வலி
- முழங்கால் வலி
- ஆர்த்தரைட்டிஸ்
- மூட்டு வலி
- தசைப்பிடிப்பு
- நரம்புசார் வலிகள்

Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

## பசு விற்பனைக்கு

ஜேசி இன பசு ஒரு மாதத்திற்குள் ஈனக்கூடிய 2ஆம் ஈத்து விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 317 7566

## விற்பனைக்கு

MALAYSIA DEMAK (125CC) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 076 416 6827

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985இல் பிறந்த விசாகம் நட்சத்திரம். செவ்வாய் குற்றமற்ற பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு - 077 236 7508

## வீடு வாடகைக்குண்டு

நல்லூர் செட்டித் தெருவில் 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு - 077 9080 354

## பணிப்பெண் தேவை

கொழும்பில் நான்கு அங்கத்தவர் கொண்ட தமிழ் வைத்தியக் குடும்பத்துக்கு தங்கியிருந்து பணிபுரியும் பணிப்பெண் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

077 261 9757

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் வேலை செய்வதற்கு மேசன். காப்பென்ரர். மாபிள் வேலை செய்பவர் உடன் தேவை. உப ஒப்பந்ததாரரும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 076 826 4859, 077 712 0945

## ES Printers

மக் பிரின்ட் (MUG) 450/-



# 357, Kasthuriyar Road, Jaf
021 492 7471 / 021 492 74
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
esprintersjaffna@gmail.c

# இதயமும் பிறவிக் குறைபாட்டு நோய்களும்

செ. ஆபேரி

இதயம் நான்கு அறைகளைக் கொண்ட உடலுக்கும் நுரையீரலுக்கும் குருதியை வழங்குகின்ற பம்பியாகும்.

- மேலே உள்ள வலது மற்றும் இடது சோனை அறைகளைப் பிரிக்கும் சுவர் சோனை அறை பிரிசுவர் எனப்படும்.
- கீழே உள்ள வலது மற்றும் இடது இதயவறைகளைப் பிரிக்கும் சுவர் இதயவறைப் பிரிசுவர் எனப்படும்.
- உடல் உறுப்புகளில் இருந்து ஒட்சிசன் ($O_2$) குறைந்த குருதி மேற் பெருநாளம், கீழ் பெரு நாளங்களினூடாக வலது சோனை அறையை அடைந்து முக்கூர் வால்பினூடாக வலது இதய அறையை அடையும். இந்தக் குருதி வலது இதய அறையில் இருந்து பிரதான அறையை அடையும். பின்பு இந்தக் குருதி வலது இதய அறையில் இருந்து பிரதான சுவாசப் பெருநாடியினூடாக நுரையீரல்க ளைச் சென்றடையும்.
- நுரையீரல்களில் ($O_2$) ஏற்றப்பட்ட குருதி, நான்கு சுவாசப் பெருநாளங்களினுடாக இடது சோனை அறையை வந்தடையும். இந்தக் குருதி இடது சோனை அறையிலிருந்து இருகூர்வால்பினூடாக இடது இதயவறையை அடைந்து தொகுதிப் பெருநாடியினூடாக உடலுறுப்புகளைச் சென்றடையும்.

### பிறவிக்குறைபாட்டு நோய்கள்

இந்தக் குறைபாடுகள் கர்ப்பப்பையில் குழந்தை இருக்கும் போது இருதய விருத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் உண்டாகின்றன. அநேகமான சந்தர்ப்பங்களில் இந்தக் குறைபாடுகள் உருவாவதற்கான காரணங்கள் அறியப்படவில்லை. சிலவேளைகளில் கர்ப்பகாலத்தின் ஆரம்பநிலையில் ஏற்படுகின்ற நோய்களினாலும் குழந்தைகளுக்கு பிறப்பிலிருந்தே காணப்படுகின்ற வேறு சில நோய்களினாலும் இவை ஏற்படலாம்.

### குழந்தைகளில் இதய நோய்

பல கர்ப்பிணித் தாய்மார்களும், அவர்களது வாழ்க்கைத் துணைவர்களும் தமது குழந்தைக்கு ஏற்பட்ட குறைபாட்டுக்குத் தாங்கள் தான் காரணமோ எனக் கவலைப்படுகின்றனர். ஆனால் இந்தக் குறைபாடுகள் எவருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு 1000 கர்ப்பத்திலும் 7 சிசுக்களுக்கு (0.7சதவீதம்) இந்தக் குறைபாடுகள் ஏற்படலாம். இவற்றில் அரைவாசிக்கும் மேற்பட்ட குழந்தைகளின் குறைபாடுகள் பிரச்சினை அற்றவையாகவோ அல்லது சத்திரசிகிச்சைமூலம் முழுமையாக சரிப்படுத்தக்கூடியவையாகவோ காணப்படுகின்றன.


### பரிசோதனை

சில இருதய நோய்கள் கர்ப்பப்பையில் குழந்தைகள் இருக்கும் போதே கண்டறியப்படலாம். மகப்பேற்று வைத்திய நிபுணர்களினால் வழமையாகச் செய்யப்படும் ஸ்கானில் குழந்தையின் இருதயம் தொடர்பில் சந்தேகம் ஏற்படின். குழந்தை இருதயவியல் நிபுணரின் உதவியோடு இருதய நோய் கண்டறியப்படலாம்.

பெரும்பாலான இருதய நோய்கள் குழந்தை பிறந்த பின்பே கண்டுபிடிக்கப்படுகின்றன. புதிதாகப் பிறக்கின்ற ஒவ்வோர் குழந்தைகளும் வைத்தியர்களினால் பரிசோதிக்கப்பட்ட பின்பே வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். பரிசோதனையின் போது பின்வரும் மாற்றங்கள் அல்லது வித்தியாசங்கள் கண்டறியப்படின் குழந்தை இருதயவியல் நிபுணரின் (Paediatric cardiologist) ஆலோசனை பெறப்படும்.

- வித்தியாசமான இருதயஒலி
- இருதயத் துடிப்பு வேகமாற்றம்
- மிகக்கூடிய சுவாச வேகம் அல்லது மூச்சுத்திணறல்
- நீல நிறமாதல்
- பால் அருந்தாமை

சில சந்தர்ப்பங்களின்போது. இந்த வித்தியாசங்கள் குழந்தை பிறந்தவுடன் தோற்றம் கொள்ளாது ஓரிரு தினங்களுக்குப் பின்பாகவே வெளிப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் குழந்தையை ஏற்கெனவே வீட்டுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தால், உடனடியாக குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.




### வளர்ந்தவர்களில் இதய நோய்

பாடசாலைகளில் நடைபெறும் வைத்தியப் பரிசோதனையின்போது. இருதய நோய்க்குரிய குணங்குறிகள் கண்டறியப்பட்டால் அவர்கள் குழந்தை மருத்துவரினூடாக இருதயவியல் பிரிவுக்கு அனுப்பப்படுவர்.

சில வேளைகளில் திடீர் மயக்கம், நெஞ்சுப் படபடப்பு போன்ற காரணிகளினாலும் இவர்கள் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் இருதயவியல் பிரிவுக்கு அனுப்பப்படுவர். இவர்களுக்கு ஈ.சி.ஜி.எக்கோ. 24 மணி ஈ.சி.ஜீ போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின் இருதய நோய் இருப்பின் அது கண்டறியப்படும். இந்தப் பரிசோதனைகளின் பின்னர் அவர்களுக்கு இருதய நோய் சம்பந்தமாக பூரணமாக விளக்கமும் அளிக்கப்படும்.

### மருத்துவ வசதி

யாழ்ப்பாணம் உட்பட குருநாகல், கண்டி, காலி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் குழந்தை இருதயவியல் நிபுணரின் சேவை நிரந்தரமாகக் கிடைக்கப் பெறுகின்றது. கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் மட்டுமே குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

இருதயத்தில் இருக்கும் சில குறைபாடுகளை சத்திரசிகிச்சையின்றி 'கார்டியாக் ஃகத்தரறைசெசன்' 'Cardiac Catheterization' மூலம் குணமாக்கலாம். அதேவேளை சில சத்திரசிகிச்சைகளுக்கு முன்பு இத்தகைய பரிசோதனை அத்தியாவசியமாக உள்ளது. இந்த வசதியை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய மாவட்டங்களில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குழந்தைக்கு இருதய நோய் இருப்பது கண்டறியப்ப்டின் வைத்தியரின் அறிவுறுத்தல்களைச் சரிவரக் கடைப்பிடிக்க வேண்டும். சில இருதய நோய்கள் இயற்கையாகவே குணமாகும்தன்மை கொண்டவை. இவற்றுக்கு ஏந்தவிதமான மருந்துகளோ, சத்திர சிகிச்சையோ தேவைப்படாது.

இருதயத்தில் உள்ள சில குறைபாடுகளுக்கு உடனடியாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் குழந்தை இறக்கவும் நேரிடலாம். அதேவேளை சில குறைபாடுகளுக்கு சற்று காலம் தாழ்த்தியே சத்திரசிகிச்சை தேவைப்படும்.

சில இருதய நோய்களுக்கு இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம், நோயை முழுமையாகக் குணமாக்கலாம். அதேவேளை சில நோய்களுக்கு பகுதி பகுதியாக ஒன்றுக்கு மேற்பட்ட சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டதன் பிற்பாடும் வாழ்நாள் முழுவதும் இருதயவியல் நிபுணர்கள் அவதானிப்பில் இருப்பது அவசியமாகிறது.

# உயிர்மங்களின் சமநிலை

பல்லுயிர்களின் பெருக்கத்தின் படிமுறையிலே உயிர்மச் சமநிலை என்பது இயற்கையாகப் பாதுகாக்கப்படுகிறது. பேணப்படுகிறது. உயிரிகள் ஒன்றுக்கொன்று உணவாகிக் கொள்வதன் மூலம் இந்தச் சமநிலையானது பாதுகாக்கப்படுகிறது. இதனிடை சர்வாதிகாரம் பெறும் ஏகாதிபத்திய முதலாளிகள் இலாபநலனுக்கான செயற்றிட்டங்களை குறுக்கீடு செய்வதன் காரணமாக இயற்கையான உயிர்மச்சுழற்சியில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இவை இயற்கையின் பண்புகளைச் சிதைவுறச் செய்கிறது. இயற்கையைச் சார்ந்துள்ள உயிரிகளின் வளர்ச்சியை அழிக்கின்றன.

இந்த உயிர்மச்சுழற்சியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள். முன்பு ஏற்பட்ட மாற்றங்களின் விளைதிறன், தற்போது புயலில் நிகழும் பாதிப்புளாக மாற்றங்கொண்டுள்ளதை நாம் கண்டுகொள்கிறோம். அது பற்றி விவாதிக்கிறோம். எல்லா இடங்களிலும் திடீர் மழைப்பொழிவும், அதனோடு தொடர்புறும் வறட்சியும் அதிகரிக்கிறது.

இதற்கு முன்பதாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும். உயிர்மைச் சுழற்சியில் ஏற்பட உள்ள மிகப்பெரிய மாற்றங்களையும் பற்றியதான ஐ.நா உறுப்பு நாடுகளின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட 800 அறிவியலாளர்களைக் கொண்ட குழுவானது. பருவநிலை தப்புதல் குறித்து 2012 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஆய்வறிக்கைகளைத் தொகுத்து உருவாக்கிய ஒருங்கிணைந்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

### ஆதாரம்

வளிமண்டலத்தில் கடந்த ஆயிரத்து 400 ஆண்டுகளைவிட 30 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வெப்பநிலை உயர்வு மிக அதிகமானதாக இருக்கிறது. 1880 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் வெப்பமாதல் காரணமாக புவியின் வெப்பமானது 0.850 செல்சியஸ் அளவு உயர்ந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. துருவப் பனிமலைகள் உருகி 30 ஆண்டுகளில் 10 லட்சம் சதுர கிலோ மீற்றர் அளவு குறைந்துள்ளது. கடல்மட்டம் 32 மில்லி மீற்றர் உயர்ந்துள்ளது.

கடல்நீரின் அமிலத்தன்மை அதிகரித்துள்ளது. கடல்நீரில் ஒக்சிசன் அளவு குறைந்துள்ளது. மேற்குலக நாடுகளின் பனிப்பொழிவு குறைவின்றி அதிகரித்துள்ளது. காடுகளில் கட்டுமீறிய காட்டுத்தீ உருவாகிறது.



இத்தகைய சூழலியல் மாற்றங்களின் விளைவாக ஏற்படும் உண்மையான இழப்பும் பாதிப்பும் வறிய மக்களையே பாதிக்கின்றன. வெள்ளம், புயல், கடல்சீற்றம் என இயற்கையின் எதிர்வினைகள் ஒரு நாளும், ஒருபோதும் எந்தவொரு ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகளையும் சீண்டியதாகத் தெரியவில்லை.

புவிவெப்பமாதலுக்கு முக்கிய காரணம் காபனீரொக்சைட், மீதேன், நைதரசன் ஒக்சைட் போன்ற நச்சு வாயுகள் அதிகம் வெளியேற்றப்படுவதே. கடந்த சென்ற 10 ஆண்டுகளில் மட்டுமே ஏகாதிபத்திய முதலாளிகளின் அபிவிருத்தி என்பதான தொழில்துறை நடவடிக்கைகளால் வெளியிடப்பட்ட காபனீரொக்சைட்டின் அளவானது 40 கோடி தொன்களாக காணப்படுவதான தகவல் சூழலியலாளர்களால் சொல்லப்படுகிறது.

### தீர்வு

இந்த நிலையிலே மக்களின் நலன் சார்ந்து சிறிதளவேனும் சிந்திக்கத் தவறும் அரசுகள், இயற்கைப் பேரழிவுகள் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை அறிந்து கொண்டும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திட தவறுகின்றன. இன்னமும் தவறிழைத்துக்கொள்கின்றன. அரசுகள் ஏகாதிபத்திய முதலாளித்துவங்களுடன் கூட்டிணைந்து திட்டமிட்ட வகையிலே மக்களைச் சூழல் அகதிகளாக மாற்றுகின்றது. மாற்றிவருகிறது. அதிக மழை, நீண்டகால வறட்சி, கடலரிப்பு, மழைவெள்ளம் ஆகியவற்றுக்கு மக்கள் தான் காரணம் எனக் காரணங்களைச் சுட்டி தங்களின் மீதான குற்றச்சாட்டுகளைத் திசைதிருப்பி தப்பித்துக்கொள்கின்றன. ஆக, மக்களை சூழல் அகதிகளாக மாற்றுவதிலும் இருந்து விடுபடுவோம், சிந்தித்துச் செயலாற்றுவோம்.

# சிங்களமகாவித்தியாலயம் மீண்டும் ஆரம்பமாகிறதா?

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்திருந்த சிங்கள மகா வித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரியவருகின்றது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பழைய பூங்காவில், சிங்கள மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் மற்றும் ஆசிரியர் கூட்டமைப்பின் கூட்டம் நடைபெறவுள்ளது.

53 ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள மகா வித்தியாலயம் யாழ்ப்பாணம் நகரில் ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள மகா வித்தியாலயம் இருந்த இடத்தில் இராணுவத்தினரின் முகாம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. 1985ஆம் ஆண்டு போர் காரணமாக சிங்கள மகாவித்தியாலயம் மூடப்பட்டது.

(ற-5)

# மீனவர் விடயத்தில் இந்தியாவை பகைத்துச் செயற்பட முடியாது

## பேசித் தீர்க்க வேண்டும் என்பதே நோக்கம் என்கிறார் கடற்றொழில் அமைச்சர்

இந்திய இழுவைப் படகு விடயத்தில் இந்தியாவைப் பகைக்க முடியாது. இந்திய அரசுடனும், மீனவ அமைப்புக்களுடனும் பேச்சு நடத்துவோம். அத்துமீறும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்போம். இணக்கப்பாட்டை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதே எமது நோக்கம்.

இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் காமினி விஜித் விஜிதமுனி சொய்சா.

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் சங்கத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சந்திப்பில் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கத்தினர் தமது பிரச்சினைகள் தொடர்பான மனுவை அமைச்சரிடம் கையளித்தனர். தமது தேவைகள் தொடர்பாகவும் எடுத்துரைத்தனர்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் நிலமையை ஏற்படுத்தியுள்ளோம். அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரும் கடலட்டைத் தொழில் வளர்ச்சியடையவேண்டும். கடலட்டைத் தொழிலை எமக்குச் சாதகமான முறையில் மாற்றிக் கொள்ளவேண்டும். மீனவர் சமூகத்துக்குப் பிரச்சினைகள், பிணக்குகள் இருப்பதைமறுக்கவில்லை. அனைத்தையும் ஒரே நேரத்தில் தீர்க்க முடியாது. அனைத்து மீனவ சங்கத்தினரையும் அழைத்துப் பேசி அதன் ஊடாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படும். அந்த நடவடிக்கைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தை முதலாவதாகத் தெரிவு செய்துள்ளேன்.

யாழ்ப்பாணத்தில் 5 துறைமுகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 20 இடங்களில் இறங்குதுறைகள் ஆழப்படுத்தி, அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளோம். அந்த இடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். தொழில்நுட்ப ரீதியாகச் செய்ய வேண்டியதை அமைச்சு நடைமுறைப்படுத்தும்.

இந்திய மீனவர்கள் பிரச்சினை பற்றிக் கூறப்பட்டது. இந்திய எமது அண்மையிலுள்ள நாடு. வரலாற்று ரீதியாக எம்முடன் பல தொடர்புகளைக் கொண்டது. இந்தியாவில் இருந்தே புத்த மதமும் வந்தது. இந்து மதமும் தோற்றுவிக்கப்பட்டது. மீனவர் பிரச்சினை தொடர்பில் இணக்கப்பட்டை ஏற்படுத்தித் தீர்வு கண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது நோக்கம் - என்றார்.

(ற-106)

பாராட்டி வாழ்த்துகிறோம்



Best Wishes

யாழ். மாநகர சைவசமய விவகாரக் குழுவினரின் சமூக சமயப் பணிகளுக்காகப் பெருந்தொண்டாற்றியமைக்கான

'மகர யாழ் விருது' இம்முறை சந்நிதியான் ஆச்சிரமத் தலைவர்

கலாநிதி செ. மோகனதாஸ்

அவர்களுக்குக் கிடைத்தமை மிகவும் பொருத்தமானதும் பெருமைப்படத்தக்கதுமாகும்

விருதினைப் பெற்றுக்கொண்ட சுவாமிகளுக்கு எமது வாழ்த்துக்களையும் வணக்கத்தினையும் தெரிவிப்பதோடு அவர் ஆற்றங்கரையில் அமர்ந்துள்ள முருகன் அருளால் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமது தொண்டுகளைத் தொடர்வாராக.

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

சி.குமரவேல்
(தலைவர், சுன்னாகம்
ப.நோ.கூ.சங்கம்),

## முதலமைச்சரின்...

றன. வடக்கு அமைச்சரவை முடக்கப்பட்டுள்ளதால் இந்த ஆண்டுக்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய திட்டங்களே இவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கு அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை வழங்கியிருந்தது. பா.டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்று கூறியிருந்தது. இந்தத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசமைப்புக்கு முரணாக வடக்கு மாகாண அமைச்சரவையில் ஆறு அமைச்சர் பதவி வகிக்கின்றனர். இந்த நிலையில் வடக்கு அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் தடை விதித்துள்ளார்.

வடக்கு அமைச்சரவைக் கூட்டம் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இடம்பெறவில்லை.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்கள், மாகாண பேரவைச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டும். அங்கிருந்து வடக்கு மாகாண தலைமைச் செயலர் பணிமனையால் மாகாண அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்பிக்கப்படும். மாகாண அமைச்சரவை கூட்டம் நடைபெறாமையால். 8மாகாணசபைஉறுப்பினர்களின்130திட்டங்களுக்கான அனுமதி வடக்கு மாகாண முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது. அந்த அனுமதிக்கு அமைவாக திட்டங்கள் அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுகின்றது. (5.7)

## 35 வயதுக்கு...

நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

முச்சக்கரவண்டிச் சாரதிகள் 35 முதல் 70 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்ற யோசனையை. போக்குவரத்து அமைச்சர் முன்வைத்திருந்தார். கடந்த வாரம் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு முச்சக்கரவண்டிச் சாரதிகள் உட்பட பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இத்தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்திருந்தனர். தற்போது முச்சக்கரவண்டிச் சாரதிகளின் குறைந்தபட்ச வயதெல்லையை பரிந்துரைக்கத் தேவையில்லை என அரச தலைவர் அறிவித்துள்ளார். (ற)

## வடமராட்சி...

யாழ்ப்பாணம், ஓக.22

வடமராட்சி கிழக்கில் கடலட்டைத் தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்படும் என்று கொழும்பு கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் காமினி விஜித் விஜிதமுனி செய்சா உறுதியளித்தார் என்று கடற்றொழில் சமாசத் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்தார்.

நேற்று இரவு யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதி ஒன்றில் அமைச்சர் காமினி விஜித் விஜிதமுனி செய்சாவுடன் நடந்த தனிப்பட்ட சந்திப்பில் இவ்வாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் வடமராட்சி கடற்றொழில் சமாசத் தலைவர் வர்ணகுலசிங்கம், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குக் கடலில் வெளிமாவட்டங்களில் இருந்து வந்து கடலட்டை பிடிப்பவர்கள் தொடர்பாக முறுகல் நிலைமை ஏற்பட்டிருந்தது. வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் இரவு வேளை அனுமதியின்றிக் கடலட்டை பிடித்தனர் என்று தெரிவித்துக் கடற்படையினரால் 81 மீனவர்கள் கடந்த சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகுகளும் கைப்பற்றப்பட்டன. பின்னர் அவர்களிடம் இரவில் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதி உள்ளது என்று தெரிவித்து கடற்படையினர் அவர்களை விடுவித்தனர். இதனால் உள்ளூர் மீனவர்கள் முரண்பட்டனர். அரச தலைவர் மைத்திரிபால யாழ்ப்பாணம் வரும்போது போராட்டம் நடத்தவுள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சருடன் சந்திப்புக்கு ஏற்பாடாகி உள்ளது என்று கடற்றொழில் சம்மேளனம் தெரிவித்ததை அடுத்து மீனவர் சங்கங்கள் எதிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டன.

அதற்கமைய நேற்று இரவு யாழ்ப்பாணம் நகரில் உள்ள விடுதி ஒன்றில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கடற்றொழில் சமாசத் தலைவர் வே.தவச்செல்வம் தெரிவித்ததாவது:

சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் வடமராட்சி கிழக்கில் நடைபெறும் கடலட்டைத் தொழிலுக்கு தடை விதிக்கப்படும் என்று உறுதியளித்தார். அங்கு கடலட்டைத் தொழிலில் ஈடுபடும் இரு நிறுவனங்களின் செயற்பாடுகளும் நிறுத்தப்படும் என்றும் இரவில் ஒளிபாய்ச்சி மீன்பிடிப்பதற்கும் தடைவிதிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரின் உறுதிமொழியை அடுத்து போராட்டம் நடத்தும் முடிவை மீனவ சங்கங்கள் கைவிட்டன. இந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டங்கள் நடத்துவது பற்றி ஆலோசிப்பது என்று மீனவ சங்கங்கள் முடிவெடுத்துள்ளன - என்றார்.

வடமராட்சிக் கிழக்கில் கடலட்டைத் தொழிலால் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் முன்னரும் கொழும்பில் சந்திபொன்று நடைபெற்றிருந்தது. அதில் கடற்றொழில் அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மீனவர் சங்கப் பிரநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். பகலில் மட்டும் கடலட்டைத் தொழில் செய்யலாம், ஒரு படகில் இருவர் மட்டுமே கடலில் மூழ்கி மீன்பிடிக்கலாம், கரையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பாலேயே கடலட்டைத் தொழில் செய்யலாம் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. எனினும் கடந்த 15ஆம் திகதி உள்ளூர் மீனவர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ தெரியாது இரவில் மீன்பிடிப்பதற்கான அனுமதி கொழும்பில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. (ற-21,26,106)

## தரம்...

என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பகுதி 1 வினாத்தாளின் 13ஆம் இலக்க வினாவுக்கே முழுப் புள்ளிகளும் வழங்கப்படவுள்ளன. பழமொழி ஒன்று தொடர்பான வினாவுக்கு பொருத்தமான விடை எதுவும் பல்தேர்வு விடைகளில் குறிப்பிடப்படவில்லை என்று பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செய்த ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதையடுத்து அந்த வினாவுக்கு அனைவருக்கும் முழுப் புள்ளிகளை வழங்குவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (ற-21,422)

மரண அறிவித்தல்



தம்பியையா கருணாமூர்த்தி

(கல்யாணி கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

கல்யாணி கிறீம் ஹவுஸ் உரிமையாளரான தம்பியையா கருணாமூர்த்தி நேற்று (21.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

405, கோவில் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(CS 18382/15/18)

தகவல்:
குடும்பத்தினர்.

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

டெமான் குட்டி 50 நாள். ஊசி. பூச்சி நீக்கப்பட்டது.

**மானிப்பாய்**

**072 855 0875, 072 346 5500**

**வாடகைக்கு**

நாவலர் வீதி, நல்லூரில் சிறிய குடும்பத்துக்கு உகந்த ஒர் அறை இணைந்த குளியலறை உடன் கூடிய வீட்டின் பகுதி வாடகைக்குண்டு.

**076 216 0099**

# CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online form filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 077 791 1649
Office : 077 721 6291


## பெயர் மாற்ற அறிவித்தல்

கல்லூரி அருகில், சுப்பிரமணியம் வீதி, கந்தரோடையில் வசிக்கும் **இராஜரட்ணம் ரமேஸ்கரன்** ஆகிய நான் எனது பெயரை **இராஜரட்ணம் குமார்** என்று மாற்றம் செய்கிறேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **இராஜரட்ணம் குமார்** என ஒப்பமிடுவேன் என அறியத்தருகின்றேன்

**இராஜரட்ணம் குமார்**

## பெயர்மாற்ற அறிவித்தல்

வேலணையில் வசிக்கும் **பொன்னம்பலம் மாணிக்கம்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல **பொன்னம்பலம் நடனசிகாமணி** என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் பொன்னம்பலம் நடனசிகாமணி எனக் கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

**பொ.நடனசிகாமணி**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் சுவாமிநாதன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.10.1932 | 21.08.2018 |

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சுவாமிநாதன் நேற்று (21.08.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - மனோன்மணி தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான தங்கவேலு - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுவாமிநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா, அமிர்தலிங்கம், கனகலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் சற்குணநாதன், பற்குணநாதன், வாமதேவன், பத்மாவதி, சிவயோகேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அமிர்ராஜன் மற்றும் கமலராணி, நிர்மலராஜன், விஜயலட்சுமி, ஜெயராணி , பாலசந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், கேதீஸ்வரன், ரஞ்சினி, சிவகுமார், யோகரட்ணம், சாந்தி ஆகியோரின் அன்புமாமியும், விஜயகுமார், லதாநிதி, அம்பிகா, நிரோஜன், நிஷாந்தன், நிஷாந்தி, நிலானி,ஜெயராம்,கஜராம்,பிரதீப்,மைத்திரேயன், பைரவி, அஜிதரன், அருந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுமித்தா, விதுஷன், கரிஷா, தனுஷியன், அபிராமி, திவ்வியா, ஆதித்தியா, விதுஷா, இசானிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2018) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூவுடல் தகனக்கிரியைக்காக ஒட்டுமடம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**12/4, அத்தியடி, புதுவீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 222 4078**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 06 . 07 . 1942

கண் நெகிழ 17 . 08 . 2013

### அமரர் தம்பிமுத்து சுந்தரேஸ்வரன் (இராசா)

**திதி : 22.08.2018 (ஏகாதசி)**

ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்திட்டாலும்
ஆறவில்லை எம் துயரம் அப்பாவே!
பொறுப்புள்ள தந்தையாய் எமை வளர்த்தெடுத்து
எங்களுக்கும் ஊரார்களுக்கும் உத்தமனாய் வாழ்ந்து காட்டி
கடமைகள் அனைத்தையும் பூரணமாய் நிறைவேற்றி
இவ்வுலகை நீர் நீத்து ஆகினவே ஐந்தாண்டு
எம் இதயக்கோயிலிலே என்றுமே நீர் உள்ளீர்
உம் நினைவு எமைவிட்டு ஒரு போதும் அகலாது


எமது அன்புத்தெய்வத்தின் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்திபெற அருளிட சிவபூத நாதேஸ்வரர் பாதம் பணிகின்றோம்.

**கரந்தன் வீதி,**
**நீர்வேலி.**

**குடும்பத்தினர்.**

## ஆறுமுகம் சந்திரவர்

### (ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், சிட்னி ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சந்திரவர் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) 17.08.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதிகளின் அன்புமகனும், கமலாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராமேஸ்வரன், இலட்சுமணன் மற்றும் சுப்பையா, நகுலேஸ்வரன், பரஞ்சோதி , காலஞ்சென்ற மாதவராஜ் ஆகியோரின் அன்புச்சகோதரரும், சோபனா, பிருந்தாவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், மகேஸ்வரனின் அன்புமாமனும், ஐக்ஷனாவின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கடன் இன்று (22.08.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 -12.00 மணிவரை சிட்னி ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**யசோதா, சிவசுப்பிரமணியம்**
**(கமலாவின் சகோதரி குடும்பம்)**

**021 4917642**

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரா சந்தானசாமி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.06.1944 | 07.08.2018 |

இளவாலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி , லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரா சந்தானசாமி 07.08.2018 செவ்வாய்க்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சந்தானசாமியின் அன்பு மனைவியும், ஆன் பாரதி, Joy சுகந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், PIERRE (பேரி) யின் மாமியாரும், சிலோனின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசகோபால் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சூசைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் , கௌரி, இராசசவுந்தரி, தனபாலராசா, கங்காதரன், கதிர்காமசேகரன், நாகபூஷணி (பூசா), கமலேஸ்வரி (ஈசா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நாகராசா மற்றும் இராஜேஸ்வரன், சந்திரிகா, செல்வநேசன், திசைவீரசிங்கம், இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி மகாதேவன் மற்றும் திரு.திருமதி ஜெயக்குமார், திரு.திருமதி மரியநாயகம் ஆகியோரின் மைத்துனியும், குமரனின் சித்தியும், இளஜனனின் மாமியும், அர்ஜனா, ஆதித்தன், அரவிந்தன், சுமங்கலி, தியாகன் ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2018) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்லூரி வளாகம்,**
**அளவெட்டி.**

**தகவல்:**
**திருமதி நா.செல்வநேசன் (பூசா)**

**சாமி (கணவர்) - 0044 192 3255 196,**
**ஈசா - 0044 745 506 4239,**
**பூசா - 021 221 5614, 077 607 0797**

# சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் திறக்கப்பட்டது

கொழும்பு, ஓக. 22

முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற பெரும் நிதி மோசடிகள் தொடர்பில் விசாரிப்பதற்கு நிறுவப்பட்ட சிறப்பு நீதிமன்றம் நேற்றுத் திறக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தை நிறுவுவதற்கு மகிந்த அணி கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பெரிய நிதி மோசடிகள் தொடர்பில் துரித விசாரணை மேற்கொள்வதற்கு அமைவாக இந்தச் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருந்தபோது மகிந்த அணி கடும் எதிர்ப்பு வெளியிட்டது. உயர்நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்தது. நீண்ட இழுபறிக்குப் பின்னர் சிறப்பு நீதிமன்றம், நீதி அமைச்சர் தலதா அத்துகோரலவால் திறக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் நீதியரசர்களாக சம்பத் அபேகோன், சம்பத் விஜேரத்ன மற்றும் சம்பா ஜனாகி ராஜரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தை திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய நீதி அமைச்சர்:

2015ஆம் ஆண்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு அமைவாகவே நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது. மக்களின் பணத்தை முறைகேடு செய்தவர்கள் அனைவரும் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரதும் கோரிக்கையாக இருந்தது.

இதற்கு சிறிது காலம் எடுத்தபோதும், சட்டத்தை கொண்டுவந்து, சிறப்பு நீதிமன்றம் அமைக்க இடத்தை தெரிவு செய்து தற்போது நீதிமன்றை திறந்து வைத்துளோம். எனது கடமையை நான் நிறைவேற்றி விட்டேன் - என்றார். (ற-5)

## முல்லையில்...

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கிராமம் கருநாட்டுக்கேணி தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த கிராமமாகும். 1984ஆம் ஆண்டு கிராமத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். போர்க் காலச் சூழலால் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை. 2010ஆம் ஆண்டு மீள்குடியமர் வுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் காலப் பகுதியில் தென்னிலங்கையிலிருந்து வந்த பெரும்பான்மையின மீனவர்கள், தமிழ் மக்களின் பரம்பரை மீன்வலைப்பாடுகளைக் கைப்பற்றி தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கினர்.

கடற்கரையில் அடாத்தாக அரச காணிகளை ஆக்கிரமித்த மிதுகுலசூரிய துசார லிவேறா, சலினா மேரியன் தேதனு டயஸ் ஆகியோருக்கு எதிராகக் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். ஆக்கிரமித்த அரச காணிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்று நீதிமன்றால் கட்டளை இடப்பட்டது. நீதிமன்றக் கட்டளையை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றால் மிதுகுலசூரிய துசார லிவேறா, சலினா மேரியன் தேதனு டயஸ் ஆகியோருக்கு காணியிலிருந்து வெளியேறும் உத்தரவு வலுவிலுள்ள நிலையில் மேற்படி காணிகளுக்கு மகாவலி அதிகார சபையால் காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு நாயாற்றில், தமிழ் மீனவர்களின் வாடிகள் தீயிடப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து அங்கு தங்கியிருந்த சிங்கள மீனவர்கள் 40 பேர் வெளியேறியிருந்தனர். (ற-5.8)

## துறைமுக....

பால சிறிசேனவால் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் செயலணியின் செயலர் வே.சிவஞானசோதி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போருக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையின் மீன்பிடி உற்பத்தியில் 30 சதவீதத்துக்கு மேல் பங்களிப்புச் செய்த ஒரு பிரபல்யமான மீன்பிடி துறைமுகம் மயிலிட்டி. இந்தத் துறைமுகம் போரால் செயலிழந்தமை வடக்கு மாகாணத்துக்கும் தேசிய உற்பத்திக்கும் பெரிய பாதிப்பாக அமைந்தது.

நல்லாட்சி அரசின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இதன்கீழ் 50 மீற்றர் நீளமான கப்பல்துறை சுவர் (குவே வோல்), ஹாா்பர் பேசின் மற்றும் நுழைவாயிலை ஆழப்படுத்துதல், அலை தடுப்புக் கட்டுமானம், அலைதாங்கி, இறங்குதுறை மறுசீரமைப்பு, எரிபொருள் நிரப்பும் நிலையம், குளிரூட்டப் பட்ட அறைகள், நீர் மற்றும் மின்சார வழங்கல் போன்றவை அபிவிருத்தி செய்யப்படும்.

ஜக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தின் கீழ் ரூபா 30 மில்லியன் நிதியில் நிர்வாகக் கட்டடம், மீன்பிடி வலைகள் பின்னும் நிலையம், நீர்தாங்கிகள், கழிவறைகள் என்பன அபிவிருத்தி செய்யப்படும்.

இரண்டாம் கட்டமாக ரூபா 245 மில்லியனில் அலைத் தடுப்பு கட்டுமானத்தின் முழுமையான மறுசீரமைப்பு, ஏலமிடும் நிலையம், ஹாா்ப்பர் பேசின் மற்றும் நுழைவாயிலை மேலும் ஆழப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்படும் என்றுள்ளது.

இன்றைய நிகழ்வில் மீன்பிடி அமைச்சர் விஜித் விஜிதமுனிசொய்சா, பிரதி அமைச்சர் அமீர் அலி, இராஜங்க் அமைச்சர் திலீப் வெதஆராச்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-5)

## 4.2 ஏக்கர்...

காணி உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று மாலை 3 மணிக்கு காங்கேசன்துறை தொடருந்து நிலையத்துக்கு அண்மையில் இடம்பெற்றது.

விடுவிக்கப்பட்ட காணிக்கான உரித்துப் பத்திரத்தை யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகனிடம் கையளித்தார்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் உள்ள வீடுகள் இப்பிலிப்பிலி மரங்கள், புற் பற்றைகள் சூழ்ந்துள்ளதுடன் உள் பகுதிக்குள் செல்ல முடியாதுள்ளது. வீடுகள் இடிக்கப்பட்டும் காணப்படுகின்றன. சிலரது காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் தங்களது காணிகளை விரைவில் விடுவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஊடகங்களுக்கு மக்கள் கருத்து தெரிவித்தனர். (ற-5)

## பலாலி...

உலங்குவானூர்தி மூலம் பலாலி வானூர்தித் தளத்தை நேற்றுக் காலை வந்தடைந்தனர். பலாலி வானூர்தித் தளத்தின் ஓடுபாதையை ஆய்வு செய்தனர். தற்போது வானூர்திகள் தரையிறங்குவது, கிளம்புவது தொடர்பான முறைமைகளைப் பார்வையிட்டனர். அது தொடர்பான வலையமைப்புக்கள் எப்படி இயங்குவது என்பதையும் ஆராய்ந்தனர். ஆய்வுகளின் பின்னர் நேற்று மாலையே அதிகாரிகள் மூவரும் கொழும்பு திரும்பினார்கள்.

பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து தமிழகத்துக்கு உடனடியாக வானூர்திச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக, ஆரம்பக்கட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வானூர்திச் சேவையை ஆரம்பித்த பின்னர், பிராந்திய வானூர்தித் தளமாக விரிவாகத் திட்டமிட்டுள்ளது. (ற-5.8)

## முல்லைத்தீவு...

உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாணவி மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது நடைபெற்றுவரும் உயர்தரப் பரீட்சையில் தோற்றும் 19 வயது மாணவி ஒருவரே பாதிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் பரீட்சை முடிந்து வீடு திரும்பியபோது மாணவி வாகனம் ஒன்றில் கடத்தப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

பாடசாலையில் இருந்து மாணவி திரும்பாத நிலையில் நேற்றுமுன்தினம் மாணவியின் தாய் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பளைப் பகுதிக்கு மாணவியைக் கடத்திச் சென்றவர்கள் வன்கொடுமையின் பின்னர் உடையார்கட்டில் அவரை நேற்று இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. நடந்தவற்றை மாணவி தாயிடம் தெரிவித்ததை அடுத்து தாய் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையம் சென்று பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழு இது தொடர்பான விசாரணைகளுக்காக பளைக்குச் சென்றது. கடத்தலுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கைது செய்தது.

பாதிக்கப்பட்ட மாணவி மருத்துவ பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்தனர். (ஈ-ரி3)

## 4,130 பட்டதாரிகளுக்கு...

அரசின் மூன்று வருடங்கள் நிறைவை முன்னிட்டு 'மூச்செடுத்த மூன்று ஆண்டுகள்' என்ற தொனிப்பொருளில் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அதில் ஒரு அங்கமாகவே 4 ஆயிரத்து130 பட்டதாரிகள் அரசசேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நல்லாட்சி அரசு அதிகாரத்தைப் பொறுப்பேற்ற பின்னர் 4 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சுயதொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொண்டவர்களையும் சேர்த்து கணக்கிட்டால் அந்த எண்ணிக்கை 7 இலட்சமாகும்.

2015ஆம் ஆண்டின் முன்னர் ஊழியர் சேமலாப நிதிய கணக்கு வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 7.8 மில்லியனாகக் காணப்பட்டது. அந்த எண்ணிக்கை தற்போது நல்லாட்சியில் 8.2 மில்லியனாக அதிகரித்துள்ளது. எனினும் இது போதாது. இந்தச் செயற்பாட்டில் எனக்குத் திருப்தியில்லை. அதேபோன்று, அரசும் இவ்விடயத்தில் திருப்தியடைய முடியாது - என்றார். (ற-5)

## அன்று...

'அன்று இராணுவ ஆக்கிரமிப்பு இன்று தொல்லியல் ஆக்கிரமிப்பு', 'ஒலுமடுவில் ஓலம் இந்துக்களுக்கு ஏன் இந்த அவலம்?', 'இதுவரை இனஆக்கிரமிப்பு இப்போது மத ஆக்கிரமிப்பா?', 'மத வழிபாட்டைத் தடுப்பதுதான் இன நல்லிணக்கமா? இதுதான் நல்லாட்சியா?', 'ஆட்சிப் பீடம் ஏற்றியவர்களுக்கே ஆப்பு வைக்கும் தேசிய அரசே', 'வாய்மூட நாம் ஒன்றும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. மண்டியிடாது வடக்கின் மானம்' போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் கோசங்களையும் எழுப்பினர்.

வெடுக்குநாறி மலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்குள் தமது அனுமதியின்றி யாரும் செல்லக் கூடாது என்று தொல்பொருள் திணைக்களத்தால் கடந்த 7ஆம் திகதி தடைவிதிக்கப்பட்டது. இதற்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்டோர் வெடுக்குநாறி மலையையும் பௌத்தமயமாக்குவதற்காகவே தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்கின்றது என்று குற்றம் சுமத்தினர்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வினோநோதராதலிங்கம், வவுனியா நகர சபைத் தலைவர் இ.கௌதமன், வவுனியா வடக்கு மற்றும் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர்களான து.நடராஜசிங்கம், இ.தணிகாசலம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், வவுனியா மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், தமிழ் விருட்சம் அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, தமிழர்களின் வரலாற்றை அழிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது. அதன் ஒரு முயற்சியாகவே வெடுக்குநாறி மலையை தொல்பொருள் திணைக்களம் கபளீகரம் செய்கின்றது. இத்தகைய நடவடிக்கைகளை அரசு நிறுத்தவேண்டும் என்றார்.

2ஆயிரம் ஆண்டுகளாக இந்த மலையில் இந்துக்கள் வழிபாடுகள் நடத்துகின்றனர். தொல்பொருள் திணைக்களம் சிங்கள பௌத்தர்களுக்குச் சார்பாகவே செயற்படுகின்றது. வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசு, வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஊடாக எமது மண்ணை அபகரிக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், இங்கு நடக்கும் அட்டூழியங்களுக்கு எதிராக வாய் திறக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், வெடுக்குநாறி மலை தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்று எந்தவொரு அரசிதழ் அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. தொல்பொருள் திணைக்களத்துக்கு தெற்கில் சொந்தமான இடங்களில் கூட வழிபாடுகள் நடத்தத் தடைவிதிக்கப்படவில்லை. ஆனால் வடக்கில் தடைவிதிக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

இங்கு வழிபாடு நடத்தத் தடுப்பது எமது மத சுதந்திரத்தில் தலையிடும் செயலாகவே பார்க்கின்றோம். போருக்குப் பின்னர் பிக்கு தலைமையில் இங்கு வந்த இராணுவத்தினர், பௌத்த சிலையை வைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டனர். ஒலுமடு மக்கள் எதிர்த்திருந்தனர். அதன் பின்னர் புதிய வடிவில் பிரச்சினை இப்போது வந்திருக்கின்றது. இந்தப் பிரச்சினையை அனைத்து தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தேசியக் கட்சிகளில் இருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும், அல்லது ஏனைய கட்சியினராகவிருக்கட்டும் அனைத்துத் தமிழ் தரப்புகளும் ஒன்றாக இணைந்து நல்லாட்சி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதனூடாகதான் இதனை நாம் வெல்லமுடியும் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமசந்திரன், நல்லாட்சி அரசு தொடர்ச்சியாக இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கேதீஸ்வரம், கோணேஸ்வரத்தில் பௌத்த விகாரையை அமைத்துள்ளது. இங்கு மாத்திரம் அல்ல வடக்கை ஒரு பௌத்த சிங்கள பூமியாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது - என்றார். (ற-5,110)

## கர்ப்பிணி...

சேர்ந்த 31 வயதுப் பெண் ஒருவரே கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார். அயலில் உள்ள குடும்பம் ஒன்றுக் கொடுத்த கடனை மீளக் கேட்டபோதே அவர் கத்திக்குத்துக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது.

வயிற்றில் காயமடைந்த நிலையில் மருத்துவனையில் சேர்க்கப்பட்ட அவர் மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெல்லிபழைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் நேற்று இரவுவரை பொலிஸாரால் இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-21.105.26.7)

## மகிந்தவின்...

வார். டி.ஏ.ராஜபக்சவின் நான்காவது புதல்வராவார். உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த சந்திர ராஜபக்ச நேற்று உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சராக மகிந்த இருந்த போது அவரின் தனிப்பட்ட செயலராகச் செயற்பட்டிருந்தார். (ற-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 22
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று புதன் கிழமை இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நண்பகல் 11.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## காமாட்சியை வீழ்த்தியது கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம், ஒக். 22
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி காமாட்சி விளையாட்டுக் கழக அணி 17.2 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சுயன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெயறூபன் 5 இலக்குகளையும், சத்தியன் 2 இலக்குகள்ளயும் வீழ்த்தினர்.

69 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத்துடுப்பெடுத்தாடியகே.ஸி.ஸி.ஸி. அணி 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்குகளை இழக்காமல் வெற்றிபெற்றது. ஜனுதாஸ் 39 ஓட்டங்களையும் ஜெயறூபன் 33 ஓட்டங்களையும் பெற்றனர். ஜெயறூபன் ஆட்டநாயகனானார். (ம)



# உருத்திரபுரம் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 22
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உருத்திபுரம் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

ஆட்டநாயகனாக உருத்திபுரம் விளையாட்டுக் கழக அணியின் ஹரிசன், தொடராட்ட நாயகனாக இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியின் எட்வின், சிறந்த கோல்காப்பளராக உருத்திபுரம் விளையாட்டுக் கழகத்தின் கோல்காப்பளர் கயாந் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

## பற்றிசியன்ஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 22
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழத்து 150 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மைக்கல் 44 ஓட்டங்களையும், முரளி 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் றஜீவன் 3 இலக்குகளையும் நிதர்சன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

151 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 17 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 92 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. லக்சன் அதிகபட்சமாக 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் டனி 5 இலக்குகளையும், நொபேட், றதீசன் இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(ம-23)



# ஐக்கியம் அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 22
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஐக்கியம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

தாழ்வுபாடு கால்பந்தாட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில்; ஜோசப்வாஸ் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## விலகினார் நஜம் சேதி

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியில் இருந்து விலகினார் நஜம் சேதி.

பாகிஸ்தானில் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது என்று தெரிவித்து ஏனைய அணிகள் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்திருந்த நிலையில் பன்னாட்டு அணிகளைமீண்டும்பாகிஸ்தானுக்கு வரவழைக்க அதிகம் உழைத்தவர் சேதி. அவரின் பதவிக்காலம் 2020ஆம் ஆண்டுதான் முடிவுக்கு வரவுள்ளது. எனினும் தற்போது சில தனிப்பட்ட காரணங்களை அடுத்து அவர் பதவி விலகினார். (ம)

# சென். மேரிஸ் அணி இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம், ஒக். 22
வெண்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாரட்சி கிழக்கு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கட்டைக்காடு சென். மேரிஸ் அணி.

வெண்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் வெள்ளி நிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கட்டைக் காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வெள்ளிநிலா விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. உலகநாதன் அதிகபட்சமாக 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் றொபின்சன் 3 இலக்குகளையும், செபஸ்ரி, காஸ்டோ இருவரும் தலா இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

65 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தா டிய சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 9.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக றொபின்சன் 16 ஓட்டங்களைப் பெற்றார்.


பந்துவீச்சில் உலகநாதன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியின் றொபின்சன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-23)



## பீற்றர்ஸ் இறுதியில்


யாழ்ப்பாணம், ஒக். 22
வெண்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி கிழக்கு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி.
வெண்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குடத்தனை செல்வா விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அசோக் 17 ஓட்டங்களையும், சுபேஸ் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கஜன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய குடத்தனை செல்வா விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
இதையடுத்து 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி.
ஆட்டநாயகனாக பீற்றர்ஸ் அணியின் சுபேஸ் தெரிவானார். (ம-23)





## சின்சினாட்டி தொடரில் ஜோகோவிக் சம்பியன்

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடர் என்று கருதப்படும் சின்சினாட்டி ரெனனிஸ் தொடரில் கிண்ணம் வென்றார் ஜோகோவிக்.
சின்சினாட்டி நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வந்தது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சேர்பிய வீரரும் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 10ஆம் இடத்தில் உள்ளவருமான ஜோகோவிக், சுவிற்சர்லாந்து வீரரும் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தில் உள்ளவருமான பெடரரை எதிர்த்து மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஜோகோவிக். இதனால் இரண்டாவது செற்றில் வெற்றிபெற்று நேர்செற் தோல்வியைத் தவிர்க்க வேண்டிய இக்கட்டான நிலை பெடரருக்கு ஏற்பட்டது. எனினும், அந்த செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜோகோவிக் வசமாக முடிவில் அவர் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று சின்சினாட்டி கிண்ணத்தைத் தனதாக்கினார்.
சின்சினாட்டி ரெனனிஸ் தொடரில் பெடரர் வெற்றிபெற்று அமெரிக்கப் பகிரங்கத் தொடரிலும் அவர் கணிசமான அளவு தாக்கத்தைச் செலுத்தினால் அதாவது இறுதியாட்டம் வரையில் முன்னேறினால் ஆண்கள் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தலில் மாற்றம் வரும் என்று கருதப்பட்டது. ஜோகோவிக் வெற்றிபெற்ற காரணத்தால் நடால் முதலிடத்தில் தொடர்வது கிட்டத்தட்ட உறுதியானது. (ம)



## மெஸ்ஸிக்கு இடமில்லை!

ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருதுக்கான மூன்று பேர்கொண்ட தெரிவுப் பட்டியலில் பார்சிலோனா அணியின் தலைவர் மெஸ்ஸி இடம்பெறவில்லை.
2017-2018 பருவகாலத்தில் சிறந்து விளங்கிய வீரருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது. பத்துப் பேர் கொண்ட பட்டியலில் மெஸ்ஸி இடம்பிடித்திருந்த போதிலும் அதிலிருந்து குறுக்கப்பட்ட மூன்று பேர்கொண்ட பட்டியலில் மெஸ்ஸிக்கு இடம் வழக்கப்படவில்லை.
ரியல் மட்ரிட் அணிக்காக கடந்த பருவகாலத்தில் விளையாடிய ரொனால்டோ, அதே அணியின் வீரர் லூக்கா மோட்ரிச், லிவர்பூல் கழக வீரர் சாலா ஆகியோரே அந்தப் பட்டியலில் இடம்பிடித்த மூன்று பேருமாவார்கள். இவர்களில் ரொனால்டோ சிறந்த வீராகத் தெரிவாக அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)




## இளம் வீராங்கனையிடம் வீழ்ந்தார் கேலப்

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடர் என்று கருதப்படும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில், தரநிலை பெறாத வீராங்கனையான கிகி பெர்னான்டஸிடம் கிண்ணத்தைப் பறிகொடுத்தார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.
சின்சினாட்டி நகரில் இந்தத் தொடர் நடைபெற்றது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடை பெற்றது. இதில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்பை எதிர்த்து தரநிலை பெறாத வீராங்கனையான கிகி பெர்னான்டஸ் மோதினார்.



'ஜாம்பவான்' சிமோனா கேலப் இந்தத் தொடரில் பெரியளவில் ஆதிக்கம் செலுத்துவார் என்றதொரு பொதுவான கணிப்பு நிலவியது. இதன்படி முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிகமிக இலகுவாகக் கைப்பற்றினார் கேலப். அடுத்த செற்றிலும் வெற்றிபெற்றால் கேலப் கிண்ணம் வெல்வார் என்ற நிலை இருந்தது. ஆனால் அந்த செற்றை 8:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடிக் கைப்பற்றினார் கிகி. முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்றிருந்தனர். மூன்றாவது செற்றில் வெற்றிபெறுபவரே சம்பியன் என்ற நிலை. அந்த செற் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிகியின் வசமான அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றார். (ம)

## வென்றது லிவர்பூல்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் லிவர்பூல் அணி வெற்றிபெற்றது.
லிவர்பூலை எதிர்த்து கிறிஸ்டல் பலஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 45ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் மில்னர் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 90ஆவது நிமிடத்தில் மனே லிபர் பூலின் மற்றொரு கோலைப் பதிவு செய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது லிவர்பூல் அணி. (ம)



# இந்தியாவின் பிடியில் இங்கிலாந்து

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் வெற்றிக்கு இன்னும் ஓர் இலக்கும், இங்கிலாந்தின் வெற்றிக்கு இன்னும் 210 ஓட்டங்களும் தேவை என்ற நிலை உள்ளது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலிரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. இதனால் மூன்றாவது ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்கிற நெருக்கடி இந்தியாவுக்கு இருந்தது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கோக்லி 97 ஓட்டங்களையும், ரகானே 81 ஓட்டங்களையும், தவான் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அன்டர்சன், புரோட், வோக்ஸ் மூவரும் தலா 3 இலக்குகளையும், ரசிட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து சிறந்த ஆரம்பம் கண்டபோதிலும், ஆரம்ப இணை வீழ்ந்ததை அடுத்து நிலைகுலைந்து 161 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பட்லர் 39 ஓட்டங்களையும், குக் 29 ஓட்டங்களையும், ஜெனிங்ஸ் 20 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பந்துவீச்சில் பாண்டியா 5 இலக்குகளையும், இசாந் சர்மா, பும்ரா இருவரும் தலா 2 இலக்குகளையும், சமி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

168 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி 7 இலக்குகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக அணித் தலைவர் கோக்லி 103 ஓட்டங்களைப் பெற்றார். அவரைவிட புஜாரா 72 ஓட்டங்களையும், பாண்டியா ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரசிட் 3 இலக்குளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும், வோக்ஸ், அன்டர்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



இங்கிலாந்துக்கு இலக்காக 521 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் அந்த அணி 9 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு இலக்குகள் எதையும் இழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குக் 9 ஓட்டங்களுடனும், ஜெனிங்ஸ் 13 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் சேர்க்காமல் 13 ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தார் ஜெனிங்ஸ். 17 ஓட்டங்களுடன் இசாந் சர்மாவிடம் வீழ்ந்தார் குக். அணித் தலைவர் ரூட் வெறும் 13 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தார். போப்பால் முடிந்தது 16. இங்கிலாந்து அணி 62 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து பரிதவித்தது.

ஸ்ரோக்ஸ், பட்லர் இருவரும் இணைந்து இங்கிலாந்து அணியைப் படிப்படியாகச் சரிவில் இருந்து மீட்டெடுத்தனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்தனர். இணைப்பாட்டம் 150 ஓட்டங்களைத் தாண்டியது. சதம் கடந்தார் பட்லர். இங்கிலாந்து ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலையையும் அவர்கள் உருவாக்கினார்கள். அணி 231 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 106 ஓட்டங்களுடன் பட்லரை வீழ்த்தினார் பும்ரா. அடுத்த பந்தில் பரிஸ்ரௌவ் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸை வீழ்த்தினார் பாண்டியா. இங்கிலாந்து தோல்வியை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தது. பின்வரிசை மளமளவெனச் சரிய இங்கிலாந்து அணி நாள் முடிவில் 311-9 என்ற நிலையில் உள்ளது.

(ம)

# கோக்லியிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்

## இங்கிலாந்தின் பயிற்சியாளர் ஏனைய வீரர்களுக்கு அறிவுரை

"கிரிக்கெட் வீரர்கள் இந்திய அணியின் தலைவர் கோக்லியிடம் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் துணைப் பயிற்சியாளர் பேர்பிரஸ்.



இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் மூன்று ஆட்டங்களில் கோக்லி 440 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இரண்டு சதங்கள், இரண்டு அரைச்சதங்கள் இதில் அடங்குகின்றன. இந்த நிலையிலேயே கோக்லியை தாறுமாறாகப் புகழ்ந்துள்ளார் பேர்பிரஸ்.

"இந்தத் தொடர் முழுவதும் விராட் கோக்லி, அவருடைய ஆட்டத்தை மேம்படுத்தி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு ஒரு வீரர் விளையாடுவதை பார்ப்பதற்கு அற்புதமாக உள்ளது. அவர் அதி சிறந்த வீரர். ஏராளமான விடயங்களைக் கற்றுக் கொண்டதை அவர் வெளிப்படுத்தியுள்ளார். அவருடைய உத்தி, பயிற்சி, ஆட்டத்தில் அவருடைய ஈடுபாடு அனைத்தும் வேறு ரகம். ஏனைய வீரர்கள் விராட் கோக்லியிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நான் மிகப்பெரிய அளவில் நம்புகிறேன். சிறந்த வீரர்களாக நீங்கள் வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால், சிறந்த வீரர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு கோக்லி தகுதியானவர்" என்று பேர்பிரஸ் மேலும் தெரிவித்தார்.

(ம)

**ஆடைகள், பைகள் விற்பனைக்கு**

புடைவை கடைகளுக்கான பைகள், 06 மாதங்கள் தொடக்கம் 12 வயது வரையிலான சிறுவர்களுக்கான ஆடைகள், பாவாடைகள், மேற்சட்டைகள், விழாக்களுக்கான அன்பளிப்பு (பலகாரபைகள்) வரவேற்புகளுக்கான பைகள், ரீசேட் அலங்காரம் அச்சடித்தல் (Printing), புடைவைகளுக்கான பைகளில் பெயர், முகவரி அச்சடித்தல் அனைத்தையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். தொடர்பு - 024 45 47 160

EASY WAY English
தமிழ்மூலம் முழுமையான ஆங்கில வழிகாட்டி.
அடிப்படையிலிருந்து ஆங்கிலத்தை முழுமையாக தமிழ்மூலம் கற்கும் வகையில் திரு. ஷாம்சன் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட 16 புத்தகங்கள் கொண்ட பாடப்புத்தகப்பொதி
ஆங்கில ஆசிரியரின் உதவியேதுமின்றி பாடசாலை மாணவர்கள் முதல் தொழில்புரிவோர் வரை எவருமே சுயமாக ஆங்கிலம் கற்கும் வகையில் உருவாக்கப்பட்டது.
23.08.2018 வரை ரூ 800 விலைக்கழிவுடன் பெறுங்கள்.
SAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி யாழ்நகர் 021 320 3313 077 1570 486

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900/=Kg
ஜேர்மனி-700/=Kg
நெதர்லாந்து-700/=Kg
0768226240
V2 TRAVELS

**Aari Embroidery Colombo Pratheepa**
- யாழ்.நகரிலும் வகுப்புக்கள் தொடர்கிறது
- **Sarree Blouse** மற்றும் பட்டுப்பாவாடைகளுக்கு **Design** செய்து தரப்படும்.
- **Aari Work** வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

(CS/19188) (11.17)
மேலதிக விவரங்களுக்கு :- 077 084 3629

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி(அரியகுளம். 0779 789 456 021 221 7781 ஆரம்பம் : 01.09.18 சனி 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 021 320 2973 ஆரம்பம் 03.09.18 மாலை 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.